Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் 145-146

P. B. ANNANGARACHARYA, L. Kancheepuram

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச்சந்தா ரூ. 5.

சார்வரி௵ தை, மாசி௴

1961௵ ஜனவரி & பிப்ரவரி.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமானுஜன் — 145, 146

மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் சார்பாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்

ஸம்புடம் 13	சார்வரி௵ தை, மாசி௴ - 1961 ஜனவரி, பிப்ரவரி௴	ஸஞ்சிகை 1, 2

புத்தாண்டு பிறப்பு

நமது ஸ்ரீராமானுஜன் பன்னிரண்டு பிராயங்களைச் சுகமாக நடத்தி இன்று பதின்மூன்றாவது பிராயத்தில் அடிவைத்து விட்டது ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கும் ஆஸ்திகவுலகுக்கும் தார்மிகவுலகுக்கும் இதுகாறும் ஸேவை செய்ததுபோலவே இனியும் செய்யக்கடமைப்பட்டிருக்கின்றது. இதற்கு ஏற்பட்டுள்ள ஸ்வல்பசந்தாவை நம்முடைய வேண்டுகோளை எதிர்பாராமல் காலகாலத்தில் தாமாகவே செலுத்தி உதவிபுரிந்து வருகின்ற மஹான்கள் பண்டுபோலவே மேன்மேலும் உபகரித்துவரக் காத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களைப்பற்றி இங்கு நாம் வேண்டிக்கொள்ள வேண்டியது ஏதுமில்லை. உபகரிக்க மனமில்லாமல் உபேக்ஷித்து வருபவர்களும் தங்கள் இயல்பை மாற்றிக்கொள்ளப்போகின்றிலர்; அன்னவர்களைப்பற்றியும் ஈண்டு எழுதவேண்டியதொன்றுமில்லை. "ஆள்கின்றானாழியான் ஆரால் குறையுடையம்" என்கிற நம்மாழ்வார் பாசுரத்தை மனமாரச் சிந்தனைசெய்து நாம் விசாரமற்ற நெஞ்சினராய் மிக்க மகிழ்ச்சியுடனேயே இதனை நடத்தி வருகின்றோம்.

இதை மட்டுமன்று; வைதிகமநோஹரா என்கிற ஸம்ஸ்க்ருத ஹிந்தீ பத்ரிகையையும், 'ஸ்ரீராமானுஜபத்ரிக' என்கிற தெலுங்கு பாஷைப்பத்ரிகையையும் சந்தாதாரர்களின் உதவியில் கண்ணோட்டமில்லாமலே 'நமக்குக் கர்த்தவ்யம்' என்கிற உறுதிகொண்டே நடத்தி வருகின்றோம். நாம் பிறக்கும்போது ஒரு காசு கொண்டு வந்திலோம்; இறக்கும் போதும் ஒன்று கொண்டு போவோமல்லோம். அரைநாண் கயிற்றையும் அறுத்துக்கொண்டு போகவிடுகின்றார்கள். இதனை நன்கு விமர்சிக்கவல்லவர்கள் பொருளின் வரவையும் செலவையும் பொருள்படுத்தக் காரணமில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் நம்முள்ளத்தில் வேலை செய்கின்றது. ஐந்து நிமிஷத்தில் ஏடுஏடாகத் தள்ளிப் பார்த்துவிட்டுக் கீழே எறியப்படுகின்ற பத்ரிகைகளுக்கு லக்ஷக்கணக்கில் சந்தாதாரர்கள் சேருகின்றார்கள் என்பதேயாம் அது. ஆகாசத்தில் பந்தல் போடப்படுகின்றதென்றால் அதைக்காண லக்ஷக்கணக்கான ஜனங்கள் குழுமுகின்றார்களென்பதும், நிலத்தில் போடும் பந்தலில் வியப்புறுவாரில்லையென்பதும் உள்ளதுதானே.

அன்பர்களைப் பிரார்த்திக்க வேண்டுவது நம்முடைய கடமை. அதனால் அன்பர்களையும் அபிமானிகளையும் நோக்கிப் பிரார்த்திக்கின்றோம்—நமது ஸ்ரீராமானுஜனை முன்போலவும் முன்னிலுங்காட்டில் விசேஷமாகவும் அபிமானிக்க வேணுமென்று.

*

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவாய்மொழி நூற்றந்தாதி—36

தீர்ப்பா ரிலாதமயல் தீரக் கலந்தமால்*
ஓர்ப்பாது மின்றி யுடன்பிரிய—நேர்க்க
அறிவழிந் துற்றாருமறக்கலங்கப் பேர்கேட்டு
அறிவுபெற்றான் மாறன்சீலம்.

தீர்ப்பார் இலாத	தீர்ப்பவர்களில்லாத [ஒருவராலும் தீர்க்க முடியாத]	உற்றாரும் அற கலங்க	தாய்மார் முதலான உறவினரும் மிகவும் கலங்கி விபரீத ப்ரவ்ருத்திகள் பண்ண (அவ்வளவிலே)
மயல் தீர	மிருந்தவியாமோஹம் தீரும்படி	மாறன்	ஆழ்வார்
கலந்த மால்	(கீழ்ப்பதிகத்தில்) வந்து கூடின எம்பெருமான்	பேர் கேட்டு	(தோழிமார் சொன்ன) திருநாமங்களை யாத்ருச்சிகமாகக் கேட்டு
ஓர்ப்பு ஆதும் இன்றி	ஆழ்வாரியல்வைச் சிறிதும் ஆராயாமல்		
உடன் பிரிய	உடனே பிரிந்தவளவில்	அறிவு பெற்றான்	மோஹம்தெளிந்து உணர்த்திபெற்றார் ;
நேர்க்க அறிவு அழிந்து	முன்னிலுங்காட்டில் விசேஷமாக சைதந்யம் குலைந்ததனால்	சீலம்	இது ஆழ்வாருடைய குணமாயிருந்தது !.

* * *—நான்காவது பதிகமான *மண்ணையிருந்து துழாவியில் ஆழ்வார்க்குண்டான மயலானது எங்ஙனே தீரப்போகிறது ! யாராலே தீரப்போகிறது ! என்னும்படியாயிருந்தது ; அப்படிப்பட்ட மயல் தீரும்படியாக *வீற்றிருந்தேழுலகுபதிகத்தில் வந்துகலந்த ஸர்வேச்வரன் மீண்டும் பிரிந்தவளவிலே முன்னிலுங்காட்டில் அதிகமாக வியாமோஹம் தலையெடுத்தது ; அப்போது தாய்மார் முதலான உறவினரும் யுக்தாயுக்த நிரூபணம் பண்ணமாட்டாதே கலங்கி ஏதோ தவறான வழிகளில் சில பரிஹாரமுறைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அவ்வளவில் ஆழ்வாருடைய பிரக்ருதியையறிந்த தோழியர் வந்து அந்தோ ! குடிகெட்டதே ! மறந்தும் புறந்தொழாதாரில் தலைவரான ஆழ்வாரைக் குறித்து இப்படியும் சில அதிப்ரவிருத்திகள் செய்வது தகுதியோ ! பகவத் பாகவத பஜனமன்றோ செய்யவடுப்பது ! என்று சொல்லிவரும்போது *மாயப்போர்த்தேர்ப்பாகனார்* என்றும், *மதுவார் துழாய்முடிமாயப்பிரான்* என்றும் *மாயப்பிரான்* என்றும் *விண்ணோர்பெருமான்* என்றும் *கண்ணபிரான்* என்றும் *வண்துவராபதிமன்னன்* என்றும் சில திருநாமங்களைச் சொன்னபடியாலே அந்தத் திருநாமங்களைக் கேட்கப்பெற்றதனால் ஆழ்வார் மயக்கந்தெளிந்து அறிவுபெற்றார் என்றதாயிற்று. மேலேயெடுத்துக் காட்டின திருநாமங்கள் ஆழ்வாருடைய திருவாக்கில் நின்றும் வெளிவந்தவையாயிருக்க, இவற்றை உற்றார் கூறினதாகவும் அதை ஆழ்வார் கேட்டு அறிவுபெற்றதாகவும் சொல்லுவது பொருந்துமோவென்று சங்கிப்பவர்கள் சுவையறியாதாராவர்.

இந்தப்பாசுரம் *தீர்ப்பாரையாமினி* என்னும் பதிகத்திற்கு ஸாரஸங்க்ரஹமாகத் திருவவதரித்தது ; அந்தப்பதிகத்திற்கு முன்பதிகம் *வீற்றிருந்தேழுலகுமென்பது. அந்தப்பதிகத்திற்கு அடுத்தபடியாகத் தீர்ப்பாரையாமினிப்பதிகம் இருக்கத் தகுதியில்லையேயென்று நம் முதலிகள் முசிப்பர்களாம். ஏனென்றால் *வீற்றிருந்தேழுலகுபதிகம் எல்லை கடந்த ப்ரீதியோடே சென்றது; அதற்கு எதிர்த்தட்டாய்ச். செல்லுகிறது தீர்ப்பாரையாமினிப்பதிகம். இவ்விருபதிகங்களுக்கும் ஸங்கதியருளிச்செய்யவேணுமென்று எம்பாரைச் சிலர் கேட்டார்களாம் ; அதற்கு எம்பார் ‘இதற்கு நான் என்ன :சொல்லுவேன் ? அஸங்கதிரேவ ஸங்கதி: என்று கொள்ளுங்கோள் என்றாராம். இது இன்சுவையே வடிவெடுத்த வார்த்தையாகும்.

ஸங்கதி சொல்ல முடியாதென்று ஆபாத ப்ரதீதியிலே பொருளாம் ; அஸங்கதி: என்றது அஸம்ச்லேஷமென்றபடியாய் விச்லேஷத்தைச் சொல்லிற்றாய், விச்லேஷந்தான் இதற்கு ஸங்கதி என்கை பரமார்த்தம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

*மண்ணையிருந்து துழாவியில் ஆழ்வார்க்கு உண்டான வியாமோஹத்தைத் தணிப்பதற்காக வந்து கிட்டின வைகுந்தநாதன் மறைய நிற்க, அந்தப் பிரிவை ஆற்றமாட்டாமல் இத்திருவாய்மொழி விஷாதத்திலேயாய்ச் செல்லுகின்றது. வெறிவிலக்குந் துறையிலே அவதரித்ததாம் இத்திருவாய்மொழி. ஆழ்வார் தாமான தன்மையையிழந்து ஒரு தலைமகளாம் நிலைமையையெய்தி, அதுதன்னிலும் தம்வாயாலே சொல்லமாட்டாமல் வேற்றுவாயாலே சொல்லவேண்டித் தோழியின் பேச்சாகச் செல்லுகின்றது.

பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளது வடிவுவேறுபாட்டினைக் கண்ட தாய்மார் 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மரபின்படி ஆராய்ந்து 'இவளுக்கு முருகக்கடவுள் ஆவேசித்ததொழியப் பிறிதொன்றுமில்லை' என்று கூற, அதுகேட்ட தாயர் உடனே வெறியாட்டாளனை அழைப்பித்து அவனைக்கொண்டு ஆவேசமாடுவிப்பதும் க்ஷுத்ரதெய்வங்களுக்கு உரிய ஸந்தர்ப்பணைகளை யிடுவிப்பதும் செய்ய, அதற்குத் தலைமகள் மிகவருந்தாநிற்க அச்சமயத்தில் அவளது துன்பத்தின் உண்மையான காரணமுணர்ந்த தோழி அந்த ப்ரவ்ருத்திகளைக் கண்டித்துக் கூறுகிற பாசுரமாய்ச் செல்லுகிறது.

ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சியென்றும் தேவதாந்தரக் கட்டுவிச்சியென்றும் கட்டுவிச்சிகளிலே இரண்டு பேதமுண்டு; திருமங்கையாழ்வாருடைய சிறிய திருமடலிலே வந்தவள் ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சி; இத்திருவாய்மொழியில் "இதுகாண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சி சொற்கொண்டு, நீர் எதுவானுஞ் செய்து அங்கோர் கள்ளுமிறைச்சியும் தூவேல்மின்" என்கிற பாசுரப்படிக்கு வந்தவளான கட்டுவிச்சி தேவதாந்தரக் கட்டுவிச்சியாவள்

> "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டியே திரிவேனை
> யாரிங்கழைத்தது !"
> "விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம் மண்ணகரம் மாமாடவேளுக்கை
> எங்கும் திரிந்து இன்றே மீள்வேனை யாரிங்கழைத்தது ;"
> "வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத பூங்கிடங்கின் நீள்கோவல்
> பொன்னகருமெங்கும் திரிந்து இன்றே மீள்வேனை யாரிங்கழைத்தது ;"
> "கொங்குங்குடந்தையும் கோட்டியூரும்பேரும் எங்கும் திரிந்து இன்றே மீள்வேனை
> யாரிங்கழைத்தது"

என்று கர்ணாம்ருதமாகப் பாடிக்கொண்டே வீதியாரவருவள் ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சி.

> "பிணங்களடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனார் குணங்களையே பிச்சலும் கூறித்
> திரிவேனை யாரிங்கழைத்தது !"
> "வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யில் பூசிக் கையகத்தோர் சந்தார் தலை
> கொண்டுலகேழுந்திரியும் பெரியோன் குணம்பாடி இன்றே திரிவேனை
> யாரிங்கழைத்தது !"
> "சுடலையில் சுடுநீறனமர்ந்ததோர் நடலையைப்பாடி நாடெங்கும் திரிவேனை
> யாரிங்கழைத்தது ?"
> "அக்கும் புலியின் அதளுமுடையாரவரொருவர் பக்கமே சென்று பாரெல்லாம்
> திரிவேனை யாரிங்கழைத்தது !"
> "ஆறும் பிறையுமரவமுமடம்புஞ்சடைமேலணிந்துடலம் நீறும் பூசி
> ஏறுருமிறையோன் துறையிற்படிவேனை யாரிங்கழைத்தது."

என்று பாடிக்கொண்டே திரிவள் தேவதாந்தரக் கட்டுவிச்சி. இப்படிப்பட்ட கட்டுவிச்சியின் கட்டுரைகட்கு இணங்கிய செயல்களை விலக்குகின்றதாயிற்று இத்திருவாய்மொழி.

தேவதாந்தர ஸம்பந்தகந்தத்தையும் ஸஹியாத ஆழ்வாருடைய பரம் வைஷ்ணவத்வம் சொல்லுகிறது இத்திருவாய்மொழி. .... (36)

திருவாய்மொழி நூற்றந்தாதி—37

சீலமிகு கண்ணன் திருநாமத்தா லுணர்ந்து*
மேலவன்றன் மேனிகண்டு மேவுதற்கு*—சால
வருந்தி யிரவும்பகலும் மாறாமல் கூப்பிட்
டிருந்தனனே* தென்குருகூரேறு.

சீலம் மிகு கண்ணன் திருநாமத்தால் உணர்ந்து	ஸுசீலனான கண்ணபிரானுடைய திருநாமத்தினால் மோஹந்தெளிந்து	சால வருந்தி	மிகவும் ஆயாஸப்பட்டு
		இரவும் பகலும்	அஹோராத்திரமெல்லாம்
மேல்	அங்ஙனம் தெளிவு பெற்ற பிறகு	மாறாமல்	இடைவிடாது
அவன் தன் மேனிகண்டு மேவுதற்கு	அப்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை நேரேகண்டு கிட்டி யநுபவிப்பதற்கு	கூப்பிட்டு இருந்தனன்	கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தனர்; யாவரென்னில்,
		தென் குருகூர் ஏறு	திருக்குருகூர்த் தலைவரான நம்மாழ்வார்.

* * *—கீழ்ப்பதிகமான தீர்ப்பாரையாமினியில் மோஹித்து அறிவழிந்து கிடந்த ஆழ்வார், தோழியர்கள் தாய்மாரை நோக்கிச் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தையடைவில் எம்பெருமானுடைய திருநாமங்கள் பலவற்றையும் பிரஸ்தாவித்ததனால் ப்ராஸங்கிகமாக அந்தத் திருநாமங்கள் செவியிற்படவே மோஹம் நீங்கித் தெளிவு பெற்றார்; மயக்கம்போய்த் தெளிவு உண்டானதனால் பிரிவாற்றாமை அதிகமாக வருத்தத் தொடங்கியது. அதனால் அப்பெருமானுடைய திருமேனியை மாநஸஸாக்ஷாத்காரமாகவன்றிக்கே ப்ரத்யக்ஷமாகவே ஸாக்ஷாத்கரிக்க வேணுமென்கிற தமது விருப்பத்தை வெளியிட்டு இடைவிடாது கூவிக்கொண்டிருந்தார் *சீலமில்லாச்சிறியனென்னும் பதிகத்தில்—என்கை.

உலர்ந்து தரைப்பட்டுக்கிடந்த கொடியானது மழைத்துளிபட்டவாறே செழிப்புறுமாபோலே; கீழே மோஹித்துத் தரைப்பட்டிருந்த ஆழ்வார், தோழிமார் வாக்கில் நின்றும் வெளிவந்த சில திருநாமங்களைக் கேட்கப்பெற்ற ப்ரஸக்தியாலே உணர்த்தி பெற்றார். அத்தனையே யல்லது விரும்பினபடி எம்பெருமானோடே ஸம்ச்லேஷிக்கப்பெற்றிலர். மோஹித்திருந்த நிலைமை தானே நன்றாயிருந்தது. ஏனென்னில், அப்போது உணர்த்தியில்லாமையாலே துயரம் தெரியாது. உறக்கத்தில் பசிபொறுக்கலாம்; விழித்துக்கொண்டால் உண்டாலல்லது தரிக்கப்போகாதே. அப்படியே ஆழ்வாரும் மோஹித்திருந்த நிலைமையிலே ஒருவாறு ஆறியிருந்து உணர்த்தியுண்டான விப்போது துடிக்க வேண்டியவராயினார். துடித்துக்கூப்பிடுகிறார் இத்திருவாய்மொழியில்.

உலகத்திலே நோயாளிகள் மயக்க முற்றிருக்கும்போதுகளிலே பாதை தெரியாதேயிருந்து, மயக்கம் தெளிந்தவாறே பாடாற்றவொண்ணாமல் துடிப்பர்களே. அந்த நிலைமையேயாயிற்று ஆழ்வார்க்கு இப்போது.

அவனோ ஆபத்துக்கு உதவுமியல்வினன்; ஆபத்துக்கு நிதானமறிந்து பரிஹரிக்கவும் வல்லன்; பிரிந்தால் பொறுத்திருக்க வொண்ணாதபடியான அழகு படைத்தவன்; ஆபத்துக்களிலே விரோதியைப்போக்கி உதவுகைக்குப் போதுமான சக்திபடைத்தவன்; இப்படியிருந்தும் நம் ஆற்றாமைக்கு உதவவில்லையே! என்று கனத்த ஆர்த்தியோடே, கேட்டாரெல்லாரும் நீராய்க்கரையும்படி கூப்பிடுகிறார் என்றதாயிற்று. .... *

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மலைநாட்டுத்திருப்பதிகளில் நமதுசிறுயாத்திரை

சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்டுபோர்டு கமிஷனரவர்களின் விருப்பத்தின்படி மலைநாட்டுத்திருப்பதியநுபவம் என்கிற வியாஸத்தை நாம் வெகு விரிவாக எழுதி உலகங்காண வெளியிட்டுவருகிறோ மென்பதை யாவருமறிந்துள்ளார்கள். இரண்டு வருஷகாலமாக இப்பணி தொடர்ந்து வருகின்றது நமக்கு. மலைநாட்டுத்திருப்பதிகள் பதின்மூன்றல்லவா? இவற்றுள் ஒவ்வொரு திருப்பதியையும்பற்றி ஆழ்வாருளிச்செயல்களைத்தழுவி மிக விரிவாக எழுதி வருகின்றோமென்பதைத் திருக்கோயில் பத்திரிகையிலும் அம்ருதலஹரீ பத்திரிகையிலும் கண்டுவருகின்றதுலகம்.

திருவித்துவக்கோடு, திருநாவாய், திருமூழிக்களம், திருக்காட்கரை, திருவண்வண்டூர், (குட்டநாட்டுத்) திருப்புலியூர் என்னும் திருப்பதிகளைப்பற்றியெழுதிமுடித்துத் திருவாறன்விளை யென்னுந் திருப்பதியைப்பற்றி யெழுதிவருகையில், இத்திருப்பதியில் ஆழ்வார்க்குண்டான அளவுகடந்த அபிநிவேசத்தை அநுஸந்திக்க நேர்ந்ததனால், இத்தலத்தைப்பற்றி யெழுதிக்கொண்டிருந்த வியாஸத்தின் சேஷத்தை இந்த திவ்யதேசத்தெம்பெருமானுடைய திருமுன்பேயிருந்து எழுதித் தலைக்கட்டவேணுமென்று ஆசை கிளர்ந்து இந்த வியாஜத்தினால் மலைநாட்டுத்திருப்பதிகள் யாவற்றையும் ஸேவித்துவருவோமென்னும் விருப்பமும் தோன்றியது. இத்திருப்பதிகளை ஏற்கெனவே ஆறுமுறை ஸேவித்திருக்கிறோமெனினும், நம்மாழ்வாருடைய விசேஷாபிநிவேசத்திற்கு இலக்கான இத்தலங்களின் ஸேவையில் பர்யாப்தி பிறப்பதில்லை நமக்கு. அதனால் புறப்படவேண்டியதாயிற்று. 17—1—61 தேதி முதல் 25—1—61 தேதிவரையில் இச்சிறு யாத்திரை நடைபெற்றது. இதில் விளைந்த ஸந்தோஷத்தையும் ஸங்கடத்தையும் அன்பர்களுக்குத்தெரிவிக்கவேண்டி இச்சிறுவியாஸமெழுதலாகிறது.

ஸங்கடத்தை முந்துறமுன்னம் தெரிவித்துவிடுகிறோம். 'திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு' என்கிற திவ்யதேசம் மிகவும் பாழ்பட்டுவிட்டதென்பதே ஸங்கடம். திருவாய்மொழியாயிரத்தில் இத்தலத்திற்கு மங்களாசாஸனமாகத் தோன்றிய பதிகம்போன்று பெரிதான பதிகம் வேறு எதுவுமில்லையென்பது யாவருமறிந்ததே. ஆழ்வார் இத்தலத்தை யநுபவிப்பதற்கு முன்னம் திருவண்பரிசாரத்தை யநுபவித்தார் *அங்குமிங்கும்* என்று தொடங்கும் பதிகத்தில். மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் "அங்கமரர்பேண அவர்நடுவே வாழ்திருமாற்கு, இங்கோர் பரிவரில்லை யென்றஞ்ச" என்றருளிச் செய்துள்ள பாசுரத்தின்படியும், "ச்ரமமனஞ்சூழும் ஸௌகுமார்ய ப்ரகாசம் ஆய்ச்சேரியிலே" என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணையின்படியும், இவற்றுக்கு மூலமான "ஆளுமாளார் ஆழியுஞ்சங்கும் சுமப்பார்தாம், வாளும்வில்லுங் கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்கிற திருவாய்மொழிப் பாசுரப்படியும் திருவாழ்மார்பனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யத்திலே ஆழங்காற்பட்டு இவ்வழகிய திருமேனிக்கு அவத்யமொன்றும் வாராமே மங்களாசாஸநபரர்களாவார் ஆருமில்லையேயென்று ஆழ்வார் வயிறுபிடிக்க, அதுகண்ட திருவாழ்மார்பன் 'ஆழ்வீர்! நமக்கொரு குறையுண்டோ? நமக்கு மங்களாசாஸனபரர்கள் அபரிமிதர்களாயிருக்கும்படி பாரீர்' என்று சொல்லி "கலக்கமில்லா நல் தவமுனிவர் கரைகண்டோர், துளக்கமில்லா வானவரெல்லாம் தொழுவார்கள்" என்று அவர்களைக் காட்டிக்கொடுக்க, ஆழ்வார் ஒருவாறு ஸமாஹிதரானார். [இது *அங்குமிங்கும் பதிகத்தின் ப்ரமேயம்.]

இங்ஙனே ஆழ்வார் ஸமாஹிதரான வளவிலும் எம்பெருமான் மநஸ்ஸமாதானமடையாமல் "இவ்வாழ்வார் நம் பக்கலிலே மிக்க பரிவுகொண்டவராதலால் இப்போது ஸமாஹிதரானாலுங்கூட மறுபடியும் கலங்குவர்; இத்தகைய

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கலக்கம் இவர்க்கு மீண்டும் மீண்டும் உண்டாகாதபடி செய்யவேணும்" என்று திருவுள்ளம்பற்றி, "வாராமலச்சமினி மால்தன்வலியிணையும், சீரார்பரிவருடன் சேர்த்தியையும் பாருமெனத் தானுகந்த மாறன்" என்கிற திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்தின்படி, அந்தத் திருவண்பரிசாரத் தெம்பெருமானே திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றெம்பெருமானைக் காட்சிதந்து தன்னுடைய அதிமாநுஷ விக்ரமப்ரதாபங்களையும், மூவாயிரம் வேதியர்கள் தன்னைப் புடை சூழ்ந்து காவல் செய்திருக்கும்படியையும் காட்டிக்கொடுத்து, அதை ஆழ்வார் திருவாக்காலே பேசும்படிசெய்து ஆழ்வாருடைய அதிசங்கையை அறவே தீர்த் தொழித்ததாக அடுத்த பதிகமான "வார்கடாவருவி யானைமாமலையின்" என்று தொடங்கும் திருவாய்மொழியின் ப்ரமேயம். இதில் "மனக்கொள்சீர் மூவாயிர வர் வேதியர்கள்" என்றும் "அமர்ந்தசீர் மூவாயிரவர்" என்றும் இரண்டு பாசுரங்களிலே மூவாயிரவர் வேதியர்கள் தனக்குப் பரிவராயிருக்கும்படியை எம்பெருமான் காட்டிக்கொடுத்தமை ஸ்பஷ்டமாக விளங்கா நின்றது. "மஹா மதிகள் அச்சங்கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்றாற்றிலே கொழிக்கும்" என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையும் இங்கு அநுஸந்திக்க வுரியது.

இத்தகைய வைபவம்வாய்ந்த திருச்சிற்றாற்றுத் திருப்பதியானது இப் போது கேட்பாரற்ற நிலைமையிலிருக்கின்றதே யென்கிற ஸங்கடம் பரிஹார மற்றதாகக் காண்கிறது. ஸன்னிதியின் சைதில்யங்களோ அபரிமிதம். கர்ப்ப க்ருஹத்திற்குத் திருக்காப்பு சேர்ப்பது திறப்பதென்கிற வியவஸ்தையே போயிற்று. அர்ச்சகர் வருவது போவதென்பதுமில்லை. திருவிளக்கு ஸமர்ப் பிப்பாருமில்லை. "அர்ச்சகருக்கு அனேக ஜோலிகளுண்டு; அவகாசமிருந்து வந்தாரானால் திருவாராதனம் செய்வதுண்டு" என்று அங்குள்ளார் சிலர் சொல்லக்கேட்டு, அநாயாஸமாகக் கிடைக்கிற திவ்யமங்கள விக்ரஹதர்சனத் தோடு திரும்பினோம்.

சோழநாட்டில் தில்லைத் திருச்சித்திரகூடத்தைப்பாடின ஸ்ரீகுலசேகராழ் வாரும் திருமங்கையாழ்வாரும் "அந்தணர்களொரு மூவாயிரவரேத்த" என்றும் "மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க" என்றுமருளிச்செய்து அத்தலத்தில் மூவாயிரவர் வேதியர்கள் எம்பெருமானுக்குப் பரிவுபூண்டு வாழ்ந் ததாகத் தெரிவித்தார்கள். காளடைவில் அவர்களத்தனைபேரும் எம்பெருமா னுடைய பெருமையைப் பொறாதவர்களாய் எதிரம்பு கோப்பவர்களாயுமிருக்கும் படியை நீதிமன்றத்தளவாகக் காண நின்றோம். விஷ்ணுபக்தியில் தலைசிறந் திருந்தவர்களுக்கு சைவப்பற்று உண்டானதும், அது விஷ்ணுத்வேஷபர்யந்த மாக ஆனதும் விசித்ரபகவத் ஸங்கல்பமேயாமத்தனை. ஆயினும் அங்கு பகவத் ஸம்ருத்திக்குக் குறையில்லாமலிருப்பது ஸந்தோஷகரம். திருச்சிற்றாற்றில் மங்களாசாஸனபரர்களாகப் பாடப்பெற்ற மூவாயிரவர் வேதியர் தங்களுடைய பரிவை அங்குள்ள சிவன் கோவிலிலும் அம்மன் கோவிலிலும் காட்டத் தலைப் பட்டு இமையவரப்பனை எண்ணாத மானிடமாயினர். இவர்களின் நிலைமை இது வானாலும் தேவஸ்தானாதிகாரிகளென்று பேர்பெற்ற பிரபுக்களாவது ஆலய ரக்ஷணத்தில் அபிநிவேசங் கொள்ளலாம். அவர்களுக்கும் வைஷ்ணவத்வேஷ மும் அதடியாக விஷ்ணுத்வேஷமும் வளருவதாகத் தெரிகின்றது. இந்த ஸங்கட ப்ரகாசனத்தை இவ்வளவோடு நிறுத்தி இனி ஸந்தோஷ ப்ரகாசனத்திற் செல்வோம்.

இச்சிறு யாத்திரையில் முன்னம் வானமாமலையையும், அடுத்தபடியாகத் திருக்குறுங்குடியையும் ஸேவிக்க ப்ராப்தமாயிற்று. இரண்டிடத்திலும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஜீயர்ஸ்வாமிகள் திருமேனி பாங்காக எழுந்தருளியிருக்கிற

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

படி. ஸ்ரீமத் திருக்குறுங்குடி ஜீயர்ஸ்வாமிகள் நூறுபிராயம் புகுவதற்கு ஸந்நிஹிதஸ்திதியி லெழுந்தருளியிருப்பதால் நித்யமாக நம்பியை மங்களாசாஸனம் செய்தருள்வதை நிறுத்த நேர்ந்திருக்கின்றது. ஆயினும் நாமசங்கீர்த்தன பாடவங்களிற்குறையின்றிக்கே அநுஷ்டானலோபமுமின்றிக்கே யெழுந்தருளியிருப்பது அஸ்மதாதிகளின் அபரிமித பாக்யமே.

திருக்குறுங்குடியிலிருந்து திருவண்பரிசாரம் ஸேவிக்கச் சென்றபோது அஸமயமாக இருந்ததனால் கந்யாகுமரி ஸ்தலம் சென்று கடற்கரை விசேஷங்களைக் கண்டு திரும்பிவந்து ஸேவிக்கலாமென்று திரும்புகையில் சுசீந்திரம் என்னுமோரிடம் காணப்பட்டது. இது தேவதாந்தரக் கோவிலாகவே தெரியவந்தது. ஆயினும் இங்கு அற்புதமான சிலாசில்பங்கள் அவசியம் காணத்தக்கவையென்று சொல்லக்கேட்டு உள்ளே சென்றோம். உண்மையில் மிகமிக வியக்கத்தக்க சிற்பங்களைக் கண்டுகளித்தோம். கிஷ்கிந்தையில் (ஹம்பி என்னுமிடத்தில்) இத்தகைய சிற்பங்கள் கண்டிருந்தோம். அவை போன்றனவும் அவற்றைவிட அதிசயிக்கத்தக்கனவுமான சிற்பங்கள் இங்குக் காணப்படுகின்றன. பதினெட்டடி உயரத்தில் மிகத் திருவளர்த்தியான ஆஞ்ஜநேய விக்ரஹம் இங்கு மிகச்சிறந்த கண்காட்சி. மிக்க செல்வச்சிறப்புடைய கோயிலென்றறிந்தோம். தேவதாந்தரக் கோவில்களில் செல்வச்சிறப்பற்றவை மிகச்சிலவே யென்னலாம்.

. பிறகு திருவண்பரிசாரம் ஸேவித்து மகிழ்ந்தோம். இவ்விடத்துச் சிறப்பு முன்னிலும் விஞ்சியிருக்கின்றதென்று கண்டுகளித்தோம். ஸன்னிதியின் ஸ்திதி மிகவும் பரிசுத்தமாயும் பக்திபோஷகமாகவு முள்ளது. இங்கிருந்து திருவாட்டாறு சென்றோம். திருவாய்மொழியில் இத்திருப்பதிக்கான பதிகம எவ்வளவு போக்யமோ அவ்வளவு போக்யம் இத்திருப்பதியும். "காட்டித் தன்கனைகழல்கள் கடுநரகம் புகலொழித்த, வாட்டாற்றெம்பெருமானை வளங்குருகூர்ச்சடகோபன், பாட்டாய தமிழ்மாலை ஆயிரத்துளிப்பத்துங் கேட்டு, ஆரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்றன்றோ இத்திருப்பதியின் பதிகத்திற்கு ஆழ்வார் பயனுரைத்த பாசுரம். இதற்குப் பலச்ருதிப் பாசுரமென்று பெயரேயொழிய பலனென்றும் சொல்லிற்றில்லை. இவ்விபூதியில் முமுக்ஷுக்களாய் அருளிச்செயல் வல்லவர்களாயிருந்து திருநாடுசென்றவர்களை அங்குள்ள நித்யமுக்தர்கள் யோகக்ஷேமவிசாரணை செய்யத்தொடங்கி 'நீங்கள் பூமண்டலத்தில் எங்கு நின்றும் போந்தீர்கள்?' என்று கேட்பர்களாம். அதற்கு 'நாங்கள் திருவழுதிவளநாட்டில் தாமிரபர்ணீ தீரத்திலிருந்து வந்தோம்' என்பர்களாம். மேன்மேலும் வார்த்தையடைவில் திருக்குருகூரில் ஆழ்வாருடைய பெருமையையும் திருவாய்மொழியின் சீர்மையையும் சொல்லுவர்களாம். அதன்பிறகு 'நீங்கள் திருவாய்மொழி ஓதிற்றுண்டோ?' என்று அவர்கள் கேட்பர்களாம். 'திருவாய்மொழி ஓதாவிடில் இங்கு நாங்கள் வந்துசேர ப்ரஸக்தியுண்டோ?' என்பர்களாம். 'ஆகில் அதில் சில பாசுரங்கள் சொல்லிக் காணீர்' என்று நித்யமுக்தர்கள் விரும்ப, 'திருவாட்டாற்றுப்பதிகம் சொல்லக்கேட்டால் இவர்கள் மிகவுகப்பர்கள்' என்றுகொண்டு உடனே "அருள்பெறுவாரடியார் தம்மடியனேற்கு" என்று தொடங்கி இத்திருவாய்மொழியைத் தேவகானத்தில் பாடுவர்களாம். பாடக்கேட்ட அவர்கள் 'ஹாஹா! இவை என்னவாங்மயம்! இன்னுஞ் சொல்லீர் சீமான்களே! இன்னுஞ் சொல்லீர் சீமான்களே! என்பர்.

திருவாய்மொழி யருளிச்செய்து தலைக்கட்டியாகவில்லை; இன்னும் நாற்பது பாசுரங்கள் மிக்கிருக்கின்றன. அவையும் தலைக்கட்டியான பிறகு திருவாய்மொழிக்குப் பிரசாரம் விளையவேணும். பிறகு திருநாட்டில் இத்தகைய ஸம்வாதம் நடைபெறவேணும். இங்ஙனேயிருக்க, ஆழ்வார் முன்னமே மாநஸ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸாக்ஷாத்காரமாக இப்படி பாசுரம் பாடினது இப்பதிகத்தின் இனிமை அவர் தம்மையும் பரவசமாக்கியதனாலன்றோ? இப்பாசுரத்திற்கு ஏற்ற திருப்பதி திருவாட்டாறேயாகும். வாசலில் ஆற்றினழகும், ஆற்றின் கரைகளில் சோலைகளின் வளமும், ஸன்னிதியின் அபரிமித வைசால்யமும் பரமபவித்ரதையும், "எங்ஙனம் மறந்துவாழ்கேனேழையேனேழையேனே" என்னப்பண்ணும்கிடையழகும் பேசத்தானாவதுண்டோ பேதைநெஞ்சே! நீ சொல்லாய். முகநாபிபாதங்களை த்வாரத்ரயத்தாலே ஸேவிக்கவேண்டும்படியான சயனஸந்நிவேசம் திருவனந்த சயனத்திலுமிருந்தாலும் திருவாட்டாற்றில் அழகு அத்விதீயமென்னவேணும். "நாகத்தணைக்குடந்தை வெஃகாத்திருவெவ்வுள், நாகத்தணையரங்கம் பேரன்பில் —நாகத்தணைப்பாற்கடல் கிடக்குமாதிநெடுமால்" என்று பள்ளிகொண்ட திருப்பதிகளை யெல்லாம் ஒருங்கே திரட்டிப்பாடின திருமழிசைப்பிரான் இத்திருப்பதி யேறப்போந்து ஸேவித்திலரே! என்று உள்வெதும்பி நின்றோம்.

திருவாட்டாற்றினின்றும் திருவனந்தபுரம் சென்று மூன்றுநாள் அங்குப் பேரின்பவெள்ளம் பெருகநின்று, அங்கிருந்து ஜநார்தனம் சென்று திருவடி

கொச்சி மஹாராஜா

தொழுது, நேராகச் செங்குன்றூர் சென்றுசேர்ந்து திருவாறன்விளை திருப்புலியூர் திருவண்வண்டூர் முதலான திவ்யதேசங்களை ஸேவித்து ஏரணாகுலம் சேர்ந்தோம். அங்கு ஸமீபத்தில் திருப்பணத்துறையில் Hill Palace என்னுமிடத்தில்வாழும் கொச்சி மஹாராஜா ஸ்ரீராமவர்மா என்பவர் மிகச்சிறந்த வித்வன்மணி; நெடுங்காலமாக நமக்குப் பரமஸ்நிக்தர். அவருடைய அழைப்புக்கு உகந்து அங்குச்செல்ல நேர்ந்தது. அவர்க்கு இப்போது வயது எண்பது. ஆகிலும் கரணபாடவங்களுக்குக் குறையின்றியே வித்யாபரிச்ரமமே போதுபோக்காக விளங்கும்வீறு குறிப்பிடத்தக்கது. நாம் நெடுநாளாக நடத்திவரும் வைதிகமநோஹரா என்னும் ஸம்ஸ்க்ருத பத்திரிகையை இம்மஹாராஜர் இடைவிடாது அநுபவித்து வருபவராதலால் அது தன்னில் பலபல விஷயங்களை ரஸித்துப்பேசிக்கொண்டே போதுபோக்கின ராஸிக்யமும் போற்றத்தக்கது.

அங்கிருந்து திருக்காட்கரை திருமூழிக்களம் முதலிய நான்கு திருப்பதிகளை ஸேவிக்கவேண்டியிருந்தும் ஸ்வஸ்தானம் விரைந்து சேரவேண்டிய ஆவச்யகதை நேர்ந்ததனால் அத்தலங்களை மானஸாநுபவமாகவே அநுபவித்து 26—1—61ல் ஸ்வஸ்தானம் சேரலாயிற்று. இவ்வளவே நமது சிறுயாத்திரையின் செய்தி. திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு திவ்யதேசம் கேட்பாரற்றதாயிற்றேயென்கிற நிர்வேதமே நமது நெஞ்சை ஊடுவிக்கிடக்கின்றது. ....

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

" சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே "

ஆண்டாள் திருப்பாவையைப் பயனுரைத்துத் தலைக்கட்டும் பாசுரத்தில் "பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே இங்கிப் பரிசுரைப்பார்........செல்வத் திருமாலால் எங்குந் திருவருள்பெற்று இன்புறுவர்" என்றருளிச் செய்தாள். "முப்பதும் தப்பாமே உரைப்பார்" என்பதற்கு 'முப்பது பாசுரங்களையும் ஒன்றுவிடாமலும் பிழைபுகாமலும் உரைப்பார்' என்பது பொருள்.



யாவருமறிந்த இப்பொருள் தவிர மற்றொரு பொருளும் அடியேனுக்குத் தோன்றிற்று. முப்பது பரியாயம் தப்பாமல் உரைப்பவர்கள் என்பதாக. உரைத்தலாவது வெறுமனே சொல்லுவது மட்டுமன்று; ப்ரவசனம் செய்வதுமாம்; அதாவது பொருளை உபந்ய ஸித்தல். இது முப்பது பரியாயம் தவறாமல் வாய்க்கப்பெறுவதையும் ஆண்டாள் திருவுள்ளம்பற்றியிருக்கக் கூடுமென்று ஸ்வாநுபவத்தால் அடியேனுள்ளத்தில் தோன்றியது. அடியேன் அன்பர்களின் விருப்பத்திற்கிணங்கி சென்னைமாநகரில் ஸ்ரீராமாயண

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீபாகவத பகவத் கீதாதிப்ரவசனம் தொடங்கியது 1931ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில். அதே வருடத்தில் டிஸம்பர் மாதத்தில் மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளில் திருப்பாவைப்பிரவசனமும் தொடங்கலாயிற்று. அது முதலாக அநுஸ்யூதமாய் ஆண்டுதோறும் நடந்துவந்த வதற்கு இவ்வாண்டில் முப்பதாவது பரியாயம் பூர்த்தியடைந்ததாயிற்று.



ஆனால் ஒரு சிறுகுறை ஏற்பட்டது. அதாவது, இடையில் ஒரு ஸம்வத்ஸரத்தில் மார்கழித்திங்களில் *எல்லேயிளங்கிளியே பாசுரத்தினன்று இரவு அடியேனுடைய திருத்தாயார் ஆசாரியன் திருவடி சார்ந்ததனால் 13 நாட்கள் பிரவசனம் நின்றிருந்து முடிவில் இரண்டுநாட்களில் பதினைந்து பாசுரங்களை ஸம்க்ஷேபித்து அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. அதனால் இவ்வாண்டிலன்றிக்கே அடுத்தவாண்டில்தான் முப்பது பரியாயம் குறையற நிறைய வேண்டியதாகிறது. ஆனால் அதனை ஆண்டாள் ஸஹிக்கமாட்டிற்றிலள். 'தப்பாமே' என்னுஞ் சொல்லின் ஸ்வாரஸ்யத்திற்கு பங்கமின்றிக்கே முப்பதாவதாண்டாகிய இவ்வாண்டிலேயே முப்பதும்தப்பாமே ப்ரவசனம் நடைபெற்றதாகச் செய்துவைக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி இவ்வாண்டில் தியாகராயநகர் வாணி மஹாலென்கிற மஹாமண்டபத்தில் காலைவேளைகளில் மற்றொரு பிரவசனமும் நடந்து

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வருமாறு செய்வித்தனளாண்டாள். மாலைவேளைகளில் மாமூலிடத்திலும், காலைவேளைகளில் வாணிமஹாலிலுமாக ப்ரவசனம் நடந்து வந்ததனல் இம்முப்பதாமாண்டிலேயே முப்பதுபரியாயம் பிரவசனம் குறையற நடந்து முடிந்ததாயிற்று.

கீழ்ப் பல வருடங்களில் இந்த ப்ரவசனத்தைப் பிறவிடங்களிலும் நடத்தித்தர வேணுமென்று நிர்ப்பந்தமாகப் பல அன்பர்கள் கோரியிருந்தும் அதற்குச் சிறிதும்



இசையாதிருந்த நாம் இவ்வாண்டில் தேஹசக்திக்குறைவிருக்கச் செய்தேயும் இசைய நேர்ந்ததற்குக் காரணம் யாதென்று நாமே ஆலோசித்தவளவில் ஆண்டாள் ஸ்புரிக்கச் செய்தருளின காரணம் இதுவேயாயிற்று. முப்பதாமாண்டிலேயே முப்பதுபர்யாயம் ப்ரவசனம் குறையறத் தலைக்கட்டிற்றாக வேணுமென்பதே ஆண்டாள் திருவுள்ளமென்று அறுதியிடலாயிற்று.

இந்த மூப்பதாண்டு பூர்த்தியில் புதியதொரு சிறப்புச் செய்விக்கவேணுமென்று கருதிய நமது ஸத்காலக்ஷேப ஸபையார், உலகம் நிறைந்த புகழாளரான ஸர். C. P. ராமஸ்வாமி ஐயரவர்களைக்கொண்டு அந்தச் சிறப்பை நடப்பிக்க நிச்சயித்து *அங்கண் மாஞாலத்தரசர் பாசுரத்தன்று மாலை 6 மணிக்கு அப்பெரியாரை நமது

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

காலக்ஷேப ஸபைக்கு விஜயம் செய்யக்கோரினர்கள். தர்மஜீவாதுவான அப்பெரியார் பேரன்புடன் அதற்கு இசைந்திருந்தார். அப்படியே குறிப்பிட்ட ஸமயத்தில் அவர்கள் விஜயம் செய்தார்கள். நமது காலக்ஷேபஸபையின் ஸ்திரந்தர அக்ராஸனரான ஸ்ரீமத் உபயவே. V. ராஜகோபாலாசார்ய ஸ்வாமிகள் M.L ; ஸபையின் காரியதரிசிகளான ஸ்ரீமான் C. ஸுப்ராயலு செட்டியார், V. R. எதிராஜுலு செட்டி, மற்றும் ஸபையின்



அங்கத்தினரான ஸ்ரீஉவே. A. ஸ்ரீநிவாஸய்யங்கார், C.P.S. ராகவன், மந்தாரம்மணவாள செட்டியார், A. V. கன்னைய நாயுடு முதலானவர்கள் மிகுந்த குதூஹலங்கொண்டு வரவேற்பு முறைகளைச் செவ்வனே ஏற்பாடு செய்திருந்தபடி வைதிகர்கள் புடைசூழ வேத கோஷத்துடன் பூர்ணகும்பத்தைப் புரஸ்கரித்து ஸ்வாகதம் கூறலாயிற்று. ஐயரவர்கள் பிறகு ஆஸனத்தில் அமர, அன்றைப்பாசுரத்தின் விசேஷார்த்தங்களும் ஸ்வாபதேசார்த்தங்களும் உபந்யஸிக்கப்பெற்றன. "ஜகந்நிர்வாஹம் முழுவதுமே இப்பெரியாருடையது" என்னலாம்படியான பெருமைவாய்ந்த ஐயரவர்கள் ஒருமணி காலத்திற்குமேல் அன்று ஸபையை அலங்கரித்திருக்க ஸௌகரியமில்லையென்று முன்னம் தெரிவித்திருந்தார்களெனினும், ஆண்டாள் ஸ்ரீஸூக்தியின் பெருமை அன்று அப்பெரியாரை இரண்டு மணி காலத்திற்கு மேற்படவே ஸபையை அலங்கரித்திருக்கச்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

செய்தது. அப்போது பல கெட்டங்களில் எடுத்த உருவப்படங்களை அன்பர்கள் இங்கு கடாக்ஷிக்கும்படி ஸபாதிகாரிகள் செய்வித்தது குறிப்பிடத்தக்கது.

நாள்பாட்டின் உபந்யாஸம் முடிந்தபின் ஐயரவர்கள் பேசத்தொடங்கினர்கள். இவர் தமிழில் நன்றாகப் பேச வல்லவராயிருந்தும் ஆங்கிலத்திலேயே பேசுவதென்கிற முறையை நெடுநாளாகவே கைப்பற்றியிருப்பதாகக்கூறி ஆங்கிலத்திலேயே நீண்ட



சொற்பொழிவாற்றினர். இடையிடையே தமிழில் மொழிபெயர்ப்புச் சொற்பொழிவும் நடைபெற்றது. அவருடைய பேச்சுக்கள் அப்போதே சில பத்திரிகைகளில் வெளிவந்து பரவியுள்ளதனல் இங்கு விவரிக்கின்றிலோம். தருமத்திலும் தெய்வத்திலும் சரணகதியிலும் தமக்குப் பூர்ணவிச்வாஸமிருப்பதைச் சொல்லியும், ஆஸ்திக்யம் எங்கும் தழைத்தோங்க வேணுமென்று கூறியும் காலக்ஷேபஸபைக்கு மங்களாசாஸனத்தைச் செய்தும் தமது ஆனந்தபாரவச்யத்தை வெளியிட்டும் சொற்பொழிவை முடித்தார். முடிக்குந்தருணத்தில் பொன்னுடை போர்த்தலாகிற பரிசையளித்தார். ஸத்காலக்ஷேபஸபையின் அக்ராஸனரான ஸ்ரீஉவே. V. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமிகள் மிகவினிமையாகப்பேசி வந்தனோபசாரமளித்தார். ஸ்ரீஐயரவர்கள் ஸபைக்கு விஜயம் செய்ததும் அற்புதமாகப் பேசினதும் உபசாரவகைகள் நடந்ததும் எல்லாம் ஸர்வாத்மநா ஸபையோர்க்குப் பரமானந்த ஸந்தோஷ ஸந்தாயகமாக இருந்தது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சென்ற விகாரிவருஷத்தில் மார்கழித்திங்கள் தொடக்கம் திருவாதிரையன்று நேர்ந்ததனால் முப்பதுபாசுரங்களிலும் எம்பெருமானார் பெருமையையே உள்ளுறை பொருளாக வைத்து அநுபவிக்கக்கடவேனென்று பிரதிஜ்ஞை செய்து அப்படியே முப்பதும்தப்பாமே அநுபவிக்கலாயிற்று. இவ்வாண்டில் ஸ்வாதீநக்ஷத்ரத்தில் மாதப் பிறப்பு நிகழ்ந்தது; அன்று பெரியாழ்வார் ஸ்ரீஸூக்திகளையும், மறுநாள் விசாகத்தன்று



நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளையும், அதற்கடுத்த நாள் அநுஷத்தன்று பட்டர் ஸ்ரீஸூக்திகளையும்........இப்படியே அந்தந்தத் திருநக்ஷத்ரத்திற்கு ஏற்றவாறு ஆழ்வார்களினுடைய அருளிச்செயல்களையும் ஆசாரியர்களினுடைய ஸ்ரீஸூக்திகளையும் மிகுதியாகக்கொண்டு அநுபவிப்பதாக ப்ரதிஜ்ஞைசெய்து அப்படியே அநுபவிக்கலாயிற்று. சில நக்ஷத்திரங்களுக்கு ஆழ்வாராசார்ய ஸம்பந்தம் இல்லையாயிருக்குமன்றோ; அங்கு ஆழ்வார்களில் நம்மாழ்வார்க்கும், ஆசாரியர்களில் எம்பெருமானார்க்கும் ப்ராதாந்யம் கொடுத்து நிர்வஹிக்கப்பட்டது.

இனி, தியாகராயநகர் வாணிமஹால் கோஷ்டியைப்பற்றிச் சிறிது எழுதலாகிறது. மார்கழிமீ இரண்டாந்தேதி முதற்கொண்டே இங்கு உபந்யாஸாரம்பமாயிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்டு போர்டு கமிஷனர் உயர்திருவாளர் A. உத்தண்டராமன் அவர்கள் அந்நாள் விஜயஞ்செய்து தலைமைதாங்கிக் காலக்ஷேபத்தைத் துவக்கி வைத்தார்கள். இவர்கள் பேச்சில் வல்லவர்களென்பது உலகமுணர்ந்ததாதலால் இங்கு நாம் விசேஷித்துத் தெரிவிக்க வேண்டியதொன்றுமில்லை. யாவரும் வியந்து உகந்து கேட்கலாம்படியான முறையில் பேசினார்கள்.

தினப்படியாய் ச்ரோதாக்களாக உபஸ்திதர்களான மஹான்கள் பண்டிதகோஷ்டியிலும் ரஸிககோஷ்டியிலும் ப்ரபுகோஷ்டியிலும் ப்ரணயிகோஷ்டியிலும் பரிகணனீயர்களாக விளங்கினர். காலை 7 மணிக்கு உபந்யாஸத்தொடக்கமென்றால் 6-45க்கே கோஷ்டி நிரம்பியிருக்கும்படியைக் கண்டு கொண்டிருந்ததனால் அவரவர்களின் ச்ரத்தையின்கனமும் ஆஸ்திக்யாதிசயமும் அபிமானமும் அறிந்து அகங்குளிர்ந்ததை இங்குத் தெரிவியாமலிருக்க முடியவில்லை. சில பல ரஸிகர்கள் தினப்படி ஸம்ஸ்கிருதத்திலும் சிறிது உபந்யஸிக்க வேணுமென்று கோரியதனால் ஐந்தாவது நாளிலிருந்து நித்தியம் கால்மணி காலம் ஸம்ஸ்க்ருதோபந்யாஸமும் நடைபெற்று வந்தது.

மார்கழி முடிவுநாளில் டவுனில் ஸத்காலக்ஷேபஸபையில் திருப்பாவை சாத்துமுறை நடைபெற்றதனால், வாணிமஹாலில் தைமீ 2உ (15—1—61) ஞாயிற்றுக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கிழமை காலையில் சாத்துமுறை நடைபெற்றது. அன்றைய கோஷ்டியை உலகம் போற்றும் புகழாளரான ஸ்ரீமதுபயவே M. அனந்தசயனமையங்காரவர்கள் ஸபையாருடைய வேண்டுகோளுக்கிணங்கி விஜயம் செய்து மிகமிகச் சிறப்பித்தார்கள். அன்று காலை 8 மணியிலிருந்து ஒருமணி வரைக்கும் *பொலிக பொலிக பொலிகவென்னு மாழ்வாருடைய மங்களாசாஸனம் இன்றுதான் அவதரித்ததோ! என்னலாம்படியிருந்தது. ஸ்ரீஅனந்தசயனமையங்காரவர்களுடையவும், எழும்பூரில் ஸுப்ரஸித்தமேதாவியாக விளங்கும் ஸ்ரீமத் பரசுராமையர் (The Minerva Tutorial College Principal) அவர்களுடையவும் மற்றும் சில கனவான்களுடையவும் உருக்கமான பேச்சுக்கள் ஸபையை மிகமிக ரஞ்ஜிப்பித்தன. .... *

"செல்வத்திருமாலால் எங்குந் திருவருள் பெற்றின்புறுக இவ்வுலகம்"

இவ்வாண்டில்செய்த திருப்பாவைஸேவை

"அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதமே" என்பதற்கு முக்கிய லக்ஷ்யமான திருப்பாவையைப்பற்றி ஆண்டுதோறும் ஒரு கிஞ்சித்காரம் யதாசக்தி செய்யவேணுமென்பது அடியேனுடைய அவா. பெரும்பாலும் செய்துகொண்டிருக்கிறேன். இவ்வாண்டில் ஒருவிதமான ஸேவைசெய்தேன்; அதாவது, அனேகமாகப் பாசுரந்தோறும் விளியுள்ளதன்றோ; (விளியாவது ஸம்போதனம்.) முதற்பாட்டில் *நேரிழையீர்!, செல்வச்சிறுமீர்காள்* இரண்டாம் பாட்டில் *வையத்துவாழ்வீர்காள்!* மூன்றும் பாட்டிலும் ஐந்தாம் பாட்டிலும் இல்லை.) (4ல்) *ஆழிமழைக்கண்ணா!* (6ல்) *பிள்ளாய்* (7ல்) *பேய்ப்பெண்ணே!, நாயகப்பெண்பிள்ளாய்!, தேசமுடையாய்* (8ல்) *கோதுகலமுடையபாவாய்!* (9ல்) *மாமான்மகளே!, மாமீர்!* (10ல்) முதலடியும் ஏழாமடியும். (11ல்) *கோவலர்தம் பொற்கொடியே!, புனமயிலே! செல்வப்பெண்டாட்டி* (12ல்) *நற்செல்வன் தங்காய்!* (13ல்) *போதரிக்கண்ணினாய்!, பாவாய்!* (14ல்) *நங்காய்!, நாணாதாய்!, நாவுடையாய்!* (15ல்) *இளங்கிளியே!* (16ல்) *கோயில் காப்பானே! வாசல் காப்பானே!* (17ல்) *நந்தகோபாலா!, அசோதாய்!, உம்பர் கோமானே!* செல்வாபலதேவா* (18ல்) *மருமகளே நப்பின்னாய்!, கந்தங்கமழுங்குழலீ!, பந்தார்விரலி!* (19ல்) *மலர்மார்பா!, மைத்தடங்கண்ணினாய்!* (20) *கப்பந்தவிர்க்குங்கலியே!, நப்பின்னைநங்காய்! திருவே!* (21ல்) *ஆற்றப்படைத்தான்மகனே! ஊற்றமுடையாய்! பெரியாய்! சுடரே!* (22ல்) இல்லை. (23ல்) *பூவைப்பூவண்ணா!* (24ல்) *உலகமளந்தாய்!.... (25ல்) *நெருப்பென்னநின்ற நெடுமாலே! (26ல்) *மாலேமணிவண்ணா!, ஆலினிலையாய்!* (27ல்) *கூடாரைவெல்லுஞ்சீர்க்கோவிந்தா!* (28ல்) *குறையொன்றுமில்லாத கோவிந்தா!* (29ல்) கோவிந்தா!* (30ல்) இல்லை.

ஆக இந்த விளிச்சொற்களை யெடுத்துக்கொண்டு இவற்றைவிவரிக்கும் முகத்தால் ரஸாநுபவம்செய்து வியாஸமெழுதத் தொடங்கினேன். அது மிக வளர்ந்துவிட்டது. அதை இந்த மாதப்பத்திரிகையிலேயே வெளியிட ஆவலிருந்தது. அவகாசப்படவில்லை. ஸமயாந்தரே வெளிவரும். .... *

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

பன்னிரண்டு பத்திரிகைகளின் பரிசீலனம்

மாதந்தோறும் வெளிவருகின்ற நமது ஸ்ரீராமாநுஜன் சென்ற 1960ஆம் ஆண்டில் ஜனவரிமீ முதல் டிஸம்பர்மீ வரையில் பன்னிரண்டு பத்திரிகைகளாகத் தன்னை வெளிக்காட்டியுள்ளது. அவற்றில் வெளிவந்துள்ள விஷயங்களை ஈண்டு வரிசையாக எடுத்துக் காட்டுகின்றோம் ரஸிகர்களுக்குப் பேருபகாரமாகுமென்றெண்ணி. 1959ஆ டிஸம்பர் மாதத்தில் (அதாவது விகாரிஆ மார்கழி மாதத்தில்) 132 லக்கமுள்ள பத்ரிகை வெளிவந்தது. பிறகு 1960 ஆம் ஆண்டில் 133 to 144. ஆக பன்னிரண்டு பத்ரிகைகள் வெளிவந்தன. ஆகஸ்டு, நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் மட்டுமே ஒற்றை ஸஞ்சிகையாக வெளிவந்தது மற்றவை இரட்டையாகச் சேர்ந்து வெளிவந்தன.

இனி விஷய ஸூசிகை

திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரங்களுக்கு விரிவுரை தொடர்ச்சியாகப் பிரசுரமாகி வருகிற முறையில் (24 to 35) பன்னிரண்டு பத்ரிகைகளிலும் பன்னிரண்டு பாசுரங்களின் விரிவுரை வெளிவந்துள்ளது.

133, 134 இவ்விரண்டு லக்கங்கள் கொண்டது ஒரே பத்திரிகை இதில் வெளிவந்த விஷயங்கள்

(1) கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்தி பரிஷ்காரம். (அதாவது) கூரத்தாழ்வானருளிச்செய்த பஞ்சஸ்தவத்தில் தவருக வழங்கிவந்துள்ள பாடங்களை ப்ரமாணோபபத்தி ப்ரதர்சன புரஸ்ஸரமாகப் பரிஷ்கரித்தது. (2) ஸ்தோத்ரரத்ன பாட பரிஷ்காரம். இவை தனிப்புத்தகமாகவும் கிடைக்கும். (3) நித்யாநுஷ்டாநபத்ததி, (அதாவது) லௌகிக வ்ருத்தியிலுள்ளவர்களுக்கு, பின்மாலை துயில் விட்டெழுந்தது முதல் மீண்டும் துயில்கொள்ளும்வரை அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை திருவாராதன ப்ரயோகமுட்பட விளக்கமாகத் தெரிவிப்பது. இதுவும் தனிப்புத்தகமாகக் கிடைக்கும். (4) சாடுச்லோகசதகம்—உரையுடன். ஸமயோசிதங்களான 108 சுலோகங்கள். இதுவும் தனிப்புத்தகமாகக் கிடைக்கும்.

135, 136 இவ்விரண்டு லக்கங்கொண்ட பத்ரிகையின் விஷயங்கள்

(1) திவ்யப்பிரபந்தங்களில் அருமையான 16 கதைகளின் விவரணம்.
(2) பிரபந்தஸாரதத்வப்ரதிஷ்டா.
(3) ஸ்ரீரங்கநாதனும் யுகாதியுத்ஸவமும்.
(4) விளக்கொளி கோவிலைப்பற்றின வியவஹாரத்தீர்ப்பு. (ஆங்கிலம்.)
(5) அதன் தமிழ் மொழிபெயர்ப்பு.
(6) வேதாந்தவாரியரின் விபவமும் அர்ச்சையும்.(ஸ்ரீசைல. கிருஷ்ணர்)
(7) பாரிஜாதாபஹரணம். ஷை
(8) ப்ரபந்தஸாராஸ்வாதிநீப்ரஹரணம். (தி. வி. சிங்கராசாரியர்).
(9) விப்ரலம்பவித்வம்ஸநம். ஷை

ஆக இவ்வொன்பது விஷயங்கள் 135, 136ல் வெளிவந்துள்ளன. இவற்றில் 2 to 9 விஷயங்களைப்பற்றிச் சிறிது விளக்கமாகத் தெரிவிக்கலாகிறது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

1959 டிஸம்பர் பத்ரிகையான 132ல் பிரபந்தஸாரதத்வஸாரம் என்றொரு நூல் நான்கு பரிச்சேதங்கள் கொண்டது (56 பக்கம்) வெளியிட்டிருந்தோம். அதில் 1 to 45 பாராக்களில் பிரபந்தசாரமும் மற்றும் ஏழு வாங்மயங்களும் கோவில் சண்டைகள் தொடங்கினபோது நவீநர்களால் கல்பிக்கப்பட்டன வென்பதை அசைக்க முடியாதபடி பரக்க வுபபாதித்திருக்கிறோம். 46 to 61 பாராக்களில் வேதாந்தவாசிரியர் தமது ஐந்து க்ரந்தங்களில் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளைத் தஞ்சமாகக் கொண்டும் அவரை ஆசார்யரென்று வ்யபதேசித்தும் போந்த விடங்களை மறுவாய்திறக்க முடியாதபடி யெடுத்துக் காட்டியுள்ளோம். அதற்குமேல், "தனியனுக்கு உத்ஸவம் கொண்டாடுவ தென்பதே புதிது; தேசிகனுடைய அத்விதீயமான பெருமைக்காக அப்படி கொண்டாட வேணுமானல் உண்மையான பெருமைவாய்ந்ததும் ப்ராமாணிக மும் ஸகலஸாத்விக பரிக்ருஹீதமுமான *ஸ்ரீமாங்வேங்கடநாதார்ய தனியனுக்கே அது யுக்தம்" என்பதை (66 பாராவளவும்) பரக்க நிரூபித்தோம். (67, 68, 69 பாராக்களில்) ஓராசாரியர்க்கு இரண்டு தனியன்கள் அஸம்பாவிதமென்பதை மூதலித்தோம். பிறகு 82 பாராவரையில் ராமாநுஜ பாத்ரத்தனியன் புதியதே யென்பதைப் பரக்க நிரூபித்தோம். மேல் 92 பாராவளவாக 'பாத்திரவாழித் திருநாமங்களில் காண்கிற இரண்டு பத்ததிகளுள் ஒன்றுதான் ப்ராமாணிகமா யிருக்க முடியும்' என்பதையும் அப்ராமாணிகபத்ததி இன்னதென்பதையும் மூதலித்தோம். நவீனர்கள் *ஸ்ரீமான் வேங்கடதனியனுக்குக் கூறும் குறை சரியல்லவென்று 93, 94 பாராக்களில் விரித்துரைத்தோம். (95 பாராவில்) *லக்ஷ்மீநாதஸமாரம்பாமித்யாதி நான்கு சுலோகங்களில் நவீனர்களுக்கு அந்வய ப்ரஸக்தியில்லாமையை நன்கு அறிவித்தோம். (101 பாராவரையில்) *நமோ ராமாநுஜார்யாய* என்கிற அப்புள்ளார் தனியனைக் கொண்டு நவீனர்களின் சூதுகளை விளக்கினோம். (104, 105 பாராக்களில்) அஹோபிலமடத்துத் தனியன்களில் நேர்ந்துள்ள குஸ்ருஷ்டிகளை மறுவாய் திறக்க முடியாமே மூத லித்தோம். (106 to 110 பாராக்களில்) நவீநர்களுக்கு வேதாந்தவாரியரோடு உறவு புதியதென்பதைப் பரக்க நிரூபித்தோம். (111 to 114 பாராக்களில்) அப்பயதீக்ஷிதர் காஞ்சியில் குடிவாழவந்து சேர்ந்து அஷ்டபுஜத்தான் ஸன்னிதி ஸமீபத்தில் தும்பைவனமென்னும் பெயரால் ப்ரதிஷ்டை செய்த அக்ரஹாரமே தூப்பிலென்று கொச்சையாக வழங்கிவரத் தொடங்கிற்றென்றும், தீபப்ரகாச ஸன்னிதி பரிஸரத்திற்குத் தண்கா என்கிற திருநாமமே தேசிகனுட்பட யாவரு மாதரித்ததென்றும், தூப்புலென்னுஞ் சொல்லைக் கொண்ட க்ருதிகள் முந்நூறு ஆண்டுகட்குப் பிற்பட்டதாகவேயிருக்கத் தக்கனவென்றும் அபேத்யமாக அறி வித்தோம். (115 பாராவில்) நவீநர்கள் குருபரம்பரையென்று சரித்திர புத்தக மொன்று ஸ்ருஷ்டித்ததும், அதை இவர்களது ஸயூத்த்யர்களே கண்டித்ததும் நிரூபிக்கப்பட்டது. (பாரா 117ல்) முக்கூரில் நடந்த ஸம்பாஷணையொன்றை விளக்கினோம். (அதாவது) திருவரங்கத்தமுதனார் காலத்தில் ஸ்ரீரங்கத்தில் நடந்த நிமந்த்ரண கதையையெழுதி 'நிர்ப்பந்தத்தின்மேல் கோவில் கொத்துச் சாவியை வாங்கி ஸ்ரீரங்கநாத ஸன்னிதியெல்லாம் தென்கலையாக்கப்பட்டது' என்று எழுதியச்சிட்டிருந்த D. T. T. அவர்களுக்கும் ஸ்ரீஸ்வாமியவர்களுக்கும் முக்கூரில் நடந்த ஸம்வாதம் விளக்கப்பட்டது. பிறகு முடிவில் (118, 119, 120 பாராக்களில்) "சந்தமிகுதமிழ்மறை—முதலாயிரம்" என்றொரு புதிய பதிப்புப் புத்தகம் வெளிவந்தது பற்றிய அஸங்கதங்கள் அலசிக்காட்டப்பட்டன.

ஆக இவ்வளவு விஷயங்கள் அந்த பிரபந்தசாரதத்வஸாரத்தில் வெகு விரிவாகவும் ப்ராமாணிக போக்யமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதன் முகப்பில் ஸாரமான சில வார்த்தைகள் என மகுடமிட்டு எழுதியிருப்பதாவது—

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"இச்சிறு நூலில் நவீனர்களின் நூதனஸ்ருஷ்டிகள் முதலிய ஸகலங்களும் கண்ணாடிபோல் காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் விடைதர வேண்டியது மிகவும் அவசியம். 'பிரபந்தசாரத்தையும் பிள்ளையந்தாதியையும் அண்ணங்கராசாரியரே இளமையில் ஒப்புக்கொண்டிருக்கிறாரே' என்கிற ஒரு வார்த்தையினாலேயே நாங்கள் இதை எளிதாகக் கண்டித்துவிட முடியுமென்று சிலர் சொல்லிக்கொண்டிருப்பதும் நமது காதில் விழுகிறது. 'எம்பெருமானார் தரிசனம் நவீனமென்பதை யதிராஜஸப்ததியில் தேசிகனே ஒப்புக்கொண்டிருக்கிறார்' என்று பிறர் எழுதியிருப்பதோடொக்குமிது. ஆராய்ச்சி செய்ய ப்ரஸக்தி ஏற்படாத காலங்களில் கதாநுகதிகந்யாயத்தாலே எழுதியிருப்பதை விட்டிட்டு, நிபுணநிரூபணங்களுக்குத் தகுதியான நிரூபணங்களைக்காட்டி உலகத்தை உகப்பிப்பதே நிபுணக்ருத்யமாகும்"—என்று.

இத்தகைய பிரபந்தசாரதத்வஸாரத்தின்மீது மறுப்பெழுத நவீனர்களுக்கு விஷயலேசமுமில்லையாயிருக்கச் செய்தேயும் சிலர் வாளாவிருக்கமாட்டாமல் சில தூஷணபாஸங்களை வெளியிட்டதனால் அப்போது பிரபந்தஸாரதத்வ ப்ரதிஷ்டா என்னும் நூலை வெளியிட்டிருக்கிறோம். அது இந்த ஸஞ்சிகையில் இரண்டாவது விஷயம். அந்த ஸந்தர்ப்பத்தில் பொறுமையின் பெருமையினால் சில பெரியார்கள் அநாமதேயத் துண்டுப்பிரசுரங்களையும் அவ்யபதேச்ய நாமதேயத் துண்டுப் பிரசுரங்களையும் பண்டிதநாமதேயத் துண்டுப்பிரசுரங்களையும் செய்தார்கள். அவர்கள் ஆர்ஜவத்தைமீறிச் செய்திருந்தாலும், ஸ்ரீராமாநுஜன் ஆர்ஜவம்குன்றாத பதிலுரைகளையே வெளியிட்டு வந்தது. மேலேகாட்டிய விஷயங்களெல்லாம் தத்ஸம்பந்தமானவை. (7) பாரிஜாதாபஹரணம் என்பது D. T. தாதாசாரியருடைய விவேகபாரிஜாதமென்னும் சுவடிக்கு ப்ரத்யக்ஷரகண்டனம். அதில் 24 பாராக்களும் பரமார்த்த ப்ரசுரங்கள். 8, 9 இவையிரண்டும் ஈகை வேதாந்ததேசிகதாதாசாரியருடைய ப்ரபந்தஸாரஸ்வாதிநியென்கிற சிலகாகிதங்களுக்கு 67 பாராக்களினால் பரிபூர்ணமான ப்ரத்யாக்யானங்கள். (அம்ருதலஹரியின் அநுபந்தமாகவும் சில வியாஸங்கள்.

ஸ்ரீராமாநுஜன் 137, 138 இரண்டு லக்கங்கள் கொண்ட ஸஞ்சிகையொன்றின் விஷயங்களாவன

1. திருமலை திருப்பதியில் ஜீயர் ஸ்வாமிகளின் ஆஸ்தாநாலங்கரணம்.
2. விசிஷ்டாத்வைத ஸர்வஸ்வம். சார்வரிஷு சித்திரைத்திங்களில் ஸ்ரீபெரும்பூதூரெம்பெருமானார் மஹோத்ஸவத்தில் ஐந்துநாள் நடைபெற்ற விசிஷ்டாத்வைத வித்வத் பரிஷத்தின் நீடூழி நினைவு மலராக (ப்ர. அ.) எழுதியது. இது ஸம்ஸ்க்ருத பாஷாநுவாதத்துடனும் ஹிந்திய நுவாதத்துடனும் தனிநூலாகவும் பதிப்பிக்கப்பட்டுளது.
3. அண்ணங்கராசாரியருடைய ஜபதாா.
4. தேவப்பெருமாள் ஸந்நிதி ஸமாசாரம். (நம்மாழ்வார் ஸந்நிதியை வடகலையாக்க முயன்றபோது விளைந்த நீதிமன்ற விவாதத்தில் தோன்றிய ஜட்ஜ்மெண்டும், அதன் மொழிபெயர்ப்பும். தேவராஜ ஸ்வாமி ஸந்நிதியிலுள்ள தென்கலை பாத்யதைகள் விஷயமான ஹைகோர்ட்டு ஜட்ஜ்மெண்டும், அதன் மொழிபெயர்ப்பும்).
5. பக்தஹஸ்தபூஷணம்.
6. ஸ்ரீமத் ராவ்ஸாஹிப் S. Raghavayyangar ஸ்வாமியின் ஸ்ரீமுகம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

7. மதுரோக்தி மஞ்ஜரீ. (தி. வி. சிங்கராசாரியர்).
8. ஸ்ரீ நடாதூர் தேவநாதய்யங்காருடைய அபிநந்தனப்பத்திரிகை.

இவற்றில் 'அண்ணங்கராசாரியருடைய சபதம்' என்கிற (3வது) விஷயம் சிறிது விவரிக்கப்படுகிறது. இதன் முகப்பில் 'முக்கியமான அறிவிப்பு' இது—

"தேசிகனைப்பற்றியோ அவருடைய அமுதமொழிகளைப்பற்றியோ விசார ப்ரஸக்தி சிறிதும் ஏற்பட்டிருக்கவில்லை. நவீனர்களின் கற்பனைகளிலுள்ள அபத்த அஸம்பத்தங்கள்மட்டும் பலவாண்டுகளாக நிரூபிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு நேர்மையான வழியில் பதில்கள் தெரிவிக்கமுடியாமல் பூர்வாசார்ய நிந்தைகளில் கைவைப்பது மிகத் தவறான வழி. "திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே" என்ற கற்பனை வாக்கியம் தலை கீழாக விழுந்துவிட்டதென்றால் அதற்கு பதில் சொல்லவேண்டும். தேசிகன் ஸ்ரீவிஷ்ணுகண்டாவதாரமென்பதில் யாதோராக்ஷேபமும் விளைந்ததில்லை. அதைச் சொன்னவர் தவறாகச் சொன்னாரென்பதுமட்டும் இங்கு விஷயம். ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "கண்டா ஹரேஸ் ஸமஜநிஷ்ட யதாத்மநா" என்று ஸ்வாமி ஸாதித்தாரேயொழிய, "ய: கண்டாத்மநா ஸமஜநிஷ்ட" என்றாரில்லை. "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத்" என்றாரேயொழிய "யதிபதி: விஷ்வக்ஸேநோபூத்" என்றாரில்லை. "திருமலைமால் திருமணியேயெனவந்தான் வாழியே" என்று திருத்தும் வழியைவிட்டு *செய்யதாமரைத் தாளிணையிலே அபசாரப்படுவது அநீதி. மேலே முழுவதும் கவனித்து வாசிப்பது. 3-6-60"

இதற்குமேல் "இதுவே என்னுடைய தீவிரமான சபதம்" என மகுடமிட்டு நாம் வெளியிட்டிருப்பதாவது,

1. நவீனர்கள் பதில் சொல்லவேண்டியதாக எனது நூல்களில் பொறிக்கப்பட்டுள்ள விஷயங்கள் நூறுக்குக் குறைந்தவையல்ல. இவற்றில் ஒன்றுக்காவது ஒரு பண்டிதர் தமது உண்மையான பெயருடனே வசவு இல்லாமல் பதில் வெளியிட்டாலும் ஸரி;

2. இவர்கள் எமது ஸம்பிரதாயத்தில் ஏறிட்டுக்கூறும் குற்றங்குறைகளில் ஒன்றுக்காவது பரிஹாரம்செய்ய நாம் தாமதித்தோமாகிலும்ஸரி,அன்றே இனி நான் எழுத்துக் கருவியைக் கையால் தொடுவதில்லையென்று லேகனஸந்ந்யாஸம் செய்துவிடுகிறேனென்பதே என்னுடைய சபதம். இங்ஙனே தாமும் சபதம் செய்து ஒரு பண்டிதர் வெளிவருக. 3—6—60.

இதற்குமேலுள்ள சில பாராக்களையும் இங்கு எடுத்துக்காட்டுகிறோம். "எதிர்த்தரப்பில் ஏற்பட்டுள்ள கற்பனைகளையெல்லாம் நாம் (P. B. A) அலசி யலசி எடுத்துக்காட்டிப் பல புத்தகங்கள் எழுதி வெளியிட்டோம். அவற்றை இவர்கள் பலகாலம் பாராததுபோலவே பாவனைசெய்து வந்தார்கள். இன்னமும் அப்படியே யிருந்துவிட்டால் க்ஷேமமேயாகும். அப்படி யிருக்கமுடியாமல் ஏதாவது எதிர்மூச்சு போட்டுக்கொண்டிருக்கவேவேணுமென்றுஇவர்களுக்குத் தோன்றியதனால் விஷயங்களில் அணுவளவும் வாய்திறக்க முடியாமையாலே நம்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் முதலான ஆசாரியர்களை தூஷித்தும், மற்றும் காசுக்குமுதவாத வம்புவிஷயங்களை நிரப்பியும் சே.கி.வ. என்றிட்டு நித்தியம் ஒருதுண்டுக் காகிதமாகப்பிரசுரம் செய்துவந்தார்கள். பிறகு விஷயத்தில் பேசியே தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் D. T. தாதாசாரியர் என்பவரையும், ஈகை வேதாந்த தேசிகாசாரியர் என்பவரையும் அணுகி அவர்களைக் கட்டாயப்படுத்தி அவ்விருவர் பெயராலும் இரு சிறு நூல்களை வெளி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யிடுவித்தார்கள். அவை அடுத்த நாளிலேயே முடிந்துபோனதனால் ஒரு வழியும் தோன்றாமல் 'மணவாளமாமுனிகளை ஆசைதீர நிந்திப்பதுதான் கை கண்டஒளஷதம்' என்று முடித்துக்கொண்டு அதிலேகைவைத்தார்கள். அதனாலென்ன? நிந்தைகளின் நடுவிலே விஷயமும் தெரிவிப்பதுபோல் சிலவற்றை எழுதியிருப்பதால், அவற்றுக்கு பதில் சொல்லாமல் நம் கண் உறங்காதாதலால் அந்த பதில்களை முன்னம் தெரிவிக்கிறோம். இவர்களின் மதத்திற்போலே நம்மதத்திலும் விஷயதுர்ப்பிக்ஷம் இருக்குமானால் நாமும் இவர்களைப் போலே நிந்திக்கத் தொடங்கவேண்டியதாகும். அந்த துர்ப்பிக்ஷம் நமக்கு ஏழேழ் பிறப்பிலும் நேராது. ஆகவே இவர்களையும் நிந்திக்க நினையோம்; இவர்கள் கொண்டாடும் ஆசார்யர்களையும் நிந்திக்க நினையோம். இத்தகைய விவாதத்தில் நாம் செய்யவேண்டிய காரியம் இரண்டு. (1) நமது ஸம்ப்ரதாயத்தில் இவர்கள் கூறும் குற்றங்குறைகளை லவலேசமும் விடாமல் களைந்தொழிப்பது ஒன்று. (2) இவர்கள் பக்கலில் நாம் பல்லாண்டுகளாக நிரூபித்துவருகிற குற்றங்குறைகளை எள்ளளவும் அசைக்கவொண்ணாதபடி ஸ்தாபிப்பது மற்றொன்று. இவ்விரண்டும் முக்கியமானவை. நம்முடைய எழுதுகோல் இவர்களுடைய நூதன ஸ்ருஷ்டிகளில்மட்டும் வியாபரிப்பதேயொழிய ஸ்ரீவைஷ்ணவாசார்ய ஸார்வபௌமரான வேதாந்தவாசிரியர்மீது லவலேசமும் வியாபரிப்பதன்று. இவர்கள் சில பாமரர்களை வஞ்சிப்பதற்காக 'P. B. A. அநியாயமாய் தேசிகனை தூஷிக்கிறார்' என்று மருளச்செய்வதுண்டு அது அபத்தம்! அஸம்பத்தம்!! அத்யந்தம் அஸம்பத்தம். ப்ராக்ருத விவாதங்களில் வேதாந்த தேசிகன்மீது அவத்யாரோபணம் செய்வதற்கு அவகாசலேசமும் கிடையாதென்பதைத் திண்ணமாகவெண்ணுக."

"இத்தகைய விவாதத்தில் நாம் செய்யவேண்டிய காரியம் இரண்டு" என்று நாம் விவரித்துத் தெரிவித்த இரண்டு காரியங்களையும் குறையறச் செய்திருக்கிறோமென்பதை நமது ஸ்ரீராமாநுஜன் அன்பர்கள் பத்ரிகைகளை ஆர அமர வாசித்துத் தெரிந்துகொண்டேயிருக்கிறார்கள். இதற்குமேல் எதிர்த்தரப்பில் விளைந்த காரியம் இன்னதென்பதை மேலே 140 லக்கமுள்ள பத்திரிகையின் பரிசீலனையிற் காண்பது.

ஸ்ரீராமாநுஜன் 139 பத்திரிகையின் விஷயங்கள்

இதில் (1) ஸ்ரீகாஞ்சீ ஸ்தோத்ரமாலிகா என்பது வெளியிடத் தொடங்கியிருக்கின்றது. யதோக்தகாரி ஸ்தோத்ரம், அஷ்டபுஜாஷ்டகம், காமாஸிகாஷ்டகம் என்கிற தேசிக ஸ்தோத்ரங்கள் மூன்றுக்கு இதில் விரிவானவுரை வெளியிட்டு முடித்திருக்கிறோம். சரணாகதிதீபிகையென்கிற தீபப்ரகாச ஸ்தோத்ரவுரை ஸசேஷமாயிருக்கின்றது. சேஷபூரணம் விரைவில் ஆகும்.

(2) உபதேசவிம்சதி—ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகையில் சிறிய திருமடல் உரை என்று வெளிவந்த வியாஸத்திற்குப் பரிபூர்ணமான மறுப்பு. அந்த வியாஸத்தை யெழுதினவர்க்கு இதில் இருபது ஹிதோபதேசங்கள் கல்லும் கரையும் படி செய்யப்பட்டிருக்கின்றன. இது தனிப்புத்தகமாகவும் கிடைக்கும். ரஸிக வித்வான்கள் ஓவாதவூணாக உண்ணவேண்டிய அமுதமிது. இது வெளிவந்து எட்டு மாதங்களுக்கு மேலாகிறது. உபதேசபாத்ரபூதவ்யக்தி என்ன பண்ணுவர் பாவம்! 'மறுபடியும் பேனாவைக் கையிலெடுக்க நினைக்கவும் முடியாதபடி செய்திருக்கிறதே!' என்று *சித்ரபுங்கப்ரகாசாகாமித்யாதி ஸ்ரீராமாயண ச்லோகத்தின்படி அலமருகின்றமை தவிர வேறில்லை. *ஸ்மரந் ராகவபாணாநாம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வ்யதே ராக்ஷஸேச்வர:* என்னப்பட்ட அவ்வரக்கர் கோமான் வாளாவிருந் திலனே; மீண்டும் போர்க்களத்தேறப் போந்ததுபோல, இந்த வ்யக்தியும் மீண்டும் சேஷ்டை செய்யத் தொடங்கி பங்கப்பட்ட பரிசுகள் (ஸ்ரீராமாநுஜன்) 143ல் வெளிவந்துள்ள துர்க்கந்ததூரீகரண வியாஸத்தினுல் விளங்கும். [இதன் சேஷத்தை மேலே பக்கம் 24ல் கண்டு கொள்வது.]

ஸ்ரீராமாநுஜன் 140 பத்திரிகையின் விஷயங்கள்

1 ஸ்ரீராமாநுஜன் அன்பர்களுக்கு அறிவிப்பு.

2. உபந்யாஸவிம்சதியின் முகவுரை.

3. உபந்யாஸவிம்சதி. (1 to 8 உபந்யாஸங்கள். இதன் பூர்த்தி நெ. 141ல்)

4. மெய்ஞ்ஞான மேன்மைவிளக்கமென்கிற ராமஸாமிராமாயணம். (A.M.கண்ணன்)

இந்த நான்கு விஷயங்களும் ஆஸ்திகர்களுக்கு அவசியம் அநுதினமும் ஒருவிசை பாராயணம் செய்யத்தக்கவை. இந்த நான்கு விஷயங்களின் ஸாரமாகச் சில வார்த்தைகள் தெரிவிக்கிறேன். சென்னையிலிருந்து ஒரு அட்வகேட் அடிக்கடி காஞ்சிக்கு வருவர். பரம பக்தர்போலக் கண்ணை மூடிமூடித் திறப்பர். கண்ணநீர் சொரிவர். ஆர்த்தியை அபிநயிப்பர். அஸூயைக்கு ஆகரம். வம்புதும்பு விஷமச்செயல்களுக்கு பீஜபூதர். இராமபிரானை அடர்ப்பது ஸர்வாத்மநா அஸாத்யமென்கிற உணர்ச்சி ராவணகும்ப கர்ணுதிகளுக்குக் குறையற்றிருக்கவும் எப்படி வாளாவிருக்க முடியவில்லையோ அப்படியே இவரும் 'நெறிதவறிச் செல்லகில்லாத அண்ணங்கராசாரியரை அபிபவிப்பது திரள் திரளாகத் திரண்டாலும் ஆகாததொன்றே' என்பதை நன்கு உணர்ந்தவரும் பிறர்க்கு உபதேசிப்பவருமாயிருந்தும் மூர்த்தந்யலிபிவசத்தால் விஷமச்செயல்களில் ஸத்வாரகமாகவும் அத்வாரகமாகவும் முயன்றே திருவர். கம்பராமாயணம் யுத்தகாண்டத்தில் இராவணனை நோக்கிக் கும்பகரணன் சொல்லுவதாக ஒரு செய்யுள் உள்ளது; இதிலுள்ள விஷயம் வான்மீகி ராமாயணத்தில் இல்லையாகிலும் "தேவபாடையிலிக்கதை செய்தவர் மூவரானவர்" என்று கம்பர்தாமே முதலில் கூறியுள்ளபடி அவர்கண்ட ராமாயணங்களுள் ஒன்றில் உள்ளதாகும். அச்செய்யுள் யாதெனில்;

> "சிட்டர்செயல்செய்திலை குலச்சிறுமைசெய்தாய்
> மட்டவிழ்மலர்க்குழலினுளை யினிமன்னு!
> விட்டிடுதுமேல் எளியமாதும் அவர்வெல்லப்
> பட்டிடுதுமேல் அதுவுநன்று பழியன்றுல்"

என்பதாம். 'ராவண! நமதுகுலம் மிகச்சிறந்த குலம்; இக்குலச் சீர்மைக்குத் தக்கவாறு நீ நடந்து கொண்டிலை; அநியாயமாகக் குலத்தைக்கெடுத்தாய்; இராமபிரானோடு நாம் எதிரம்புகோப்பது நியாயமன்று; எனினும் எதிரம்புகோத்தே தீரவேண்டும்; நமக்குத் தோல்வியேயொழிய வெற்றிக்குச் சிறிதுமவகாசமில்லை கிடாய்; அதனுலென்ன? இராமபிரானது திருச்சரங்களால் தலையறுப்புண்டு மடிவது நமக்குப் பெரும்பேறுகாண்' என்று கும்பகரணன் கூறுவதாக வைத்து இச்செய்யுளியற்றப்பெற்றது. இத்தகைய பேச்சுக்களையே இவ்வட்வகேட் தமரது திரளிலே கூறிவருகின்றுரென்று கேள்விப்படுகிறோம். அனுட்டானமும் இத்தகைத்தே. வீணை ஆக்ரஹம் அளவு கடந்திருத்தலால் இவர் பிரகாசமாகவே வெளிவந்து பூர்வாசார்ய நிந்தைகளை மிகத் தண்ணிய புத்தியோடு வெளியிட்டிருப்பவர். அந்த அநியாய நிந்தைகளை மேன்மேலும் மறுபதிப்புகளும் செய்து போருமவர். இந்தப் பழைய புராணம் கிடக்க. பிரபந்த சாரதத்வஸாரம் வெளிவந்தது முதலாக இதிகர்த்தவ்யதாமுக்தராய்ப் படுகிறபாடு வாசாமகோசரம். ஞானச்சுடர் விளக்கென்று ஒரு அபத்தச்சுவடியைத் தாமொரு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வராகவேயோ மற்றும் சிலரோடு கூடியோ எழுதி முடித்தார். அதை ஒரு அஜ்ஞாதஸ்தனத்தின் பெயரால் வெளியிடுவித்தார். அதை சென்னையில் ஒரு அச்சுக்கூடத்தில் அச்சிடுவித்துத் திருவுள்ளூர் மடத்தில் சேர்ப்பித்தார். அதில் தமக்கு யாதொரு தொடர்புமில்லையென்று பலரிடம் சொல்லிக்கொண்டார். நாமும் அதனை நம்பியிருந்தோம். திருவுள்ளூரில் கண்ணாடியறை நிர்மாணமாகி ப்ரதிஷ்டை நடந்தபோது, அங்குச் சென்றிருந்தவிவர் அந்த அபத்தபுத்தகக் கட்டைச் சுமந்து கொடுவந்தாரென்பதைச் சில ஆப்தமணிகள் தெரிவித்தது கொண்டு "கிம் கிம் ந ஸம்பாவ்யதே" என்பதையுன்னினோம். மூர்த்தர்யலிபியின் வலிமை தவிர வேறொன்றும் நினைப்பதற்கில்லை. நெ. 140, 14: இவற்றைப் பூர்த்தியாக வாசித்தால் எல்லாம் விசதமாகும்.

ஸ்ரீராமாநுஜன் 141, 142ல் உள்ள விஷயங்கள்

1. **வேதபாஷ்யவிமர்சநம்** க்ருஷ்ணயஜுர்வேத பாஷ்யகாரர்கள் பதபாடத்தையும் ஸ்வரஸந்நிவேசத்தையும் நோக்காமலே பாஷ்யம் செய்துள்ளார்களென்பதை விவரிப்பது இது ஸம்ஸ்க்ருதபாஷை மொழிபெயர்ப்புடன் தனிப்புத்தகமாகவுமுள்ளது. ஸம்ஸ்க்ருதபாகம் தேவநாகரலிபி.
2. **விளக்கொளியெம்பெருமானும் வேதாந்ததேசிகனும்.** தேசிகனுடைய உண்மை ஸ்வரூபம் விளங்குமாறு ஸேவாபத்ரிகை வெளியிட்ட திருவுருவப்படத்தோடுங் கூடியது.
3. **திருவேங்கடமுடையான் மஹோத்ஸவம்.**
4. **திருவேங்கடமுடையான் ஸேவையும் சித்ரகவித்வமும்.** சித்ரகவித்வம் உரையோடும்.
5. **தேசிகஹ்ருதயம்.** வேதாந்தவாசிரியரின் ஸ்ரீஸூக்திகள் தென்னாசார்ய ஸம்பிரதாயஸ்தர்களால் ஆதரிக்கப்படும் அர்த்தங்களையும் அநுஷ்டானங்களையுமே ஆதரிப்பவையென்று நன்கு நிரூபிக்கும் விலக்ஷணக்ரந்தம். இது ஸம்ஸ்க்ருதபாஷை மொழிபெயர்ப்புடன் தனிப்புத்தகமாகவுமுள்ளது.
6. **உபந்யாஸவிம்சதி.** ஸ்ரீராமா. 140ல் வெளிவந்துள்ள எட்டு உபந்யாஸங்களுக்கு மேற்பட்ட பாகம் இதில் முடிந்தது. அதில் **லோகாபிராம**மென்கிற முன்னுரை முதற்கொண்டு முழுதும் ஓரெழுத்து விடாமல் பன்முறையும் வாசிக்கத்தக்கது. ஞானச்சுடர் விளக்கென்கிற அபத்தச்சுவடி எற்றைக்கு மேமேழும்பிறவிக்கும் தலைகாட்டாதபடி செய்திருக்கிற உபந்யாஸவிம்சதியைப்பற்றி ஸ்ரீஉவே. ராவ் ஸாஹிப் S. ராகவையங்கார்ஸ்வாமி அபிநந்தனம் செய்து எழுதியிருக்கின்ற ஸ்ரீமுகங்கள் அபரிமிதம்.

ஸ்ரீராமாநுஜன் 143ல் உள்ள விஷயங்கள்

1. **மிகுஞானச்சிறுகுழவியின் மறைவு.** ஸ்ரீகாஞ்சியில் ப்ரஹ்மவித்யாநிதியாயும் பௌமப்ருஹஸ்பதியாயும் விளங்கின உபயவேதகேஸரி ஸ்ரீராமாநுஜாசாரியர் ஆசாரியன் திருவடி சார்ந்ததுபற்றிய நிர்வேதவியாஸம்.
2. **ஐப்பசித்திருமூல நன்னாட்சிறப்பு.** *செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்தித்யாதி திருநாள்பாட்டின் விவரணம்.
3. **பாரிஜாதபுஷ்பமானால் துர்நாற்றம் வீசுமோ?** இப்பத்ரிகையிலேயே வெளிவந்திருக்கின்ற துர்க்கந்ததூரீகரணமென்னும் பரகீய வியாஸத்தின் பரிசுரைக்கும் முகவுரை.
4. **கம்பர்கண்ட கண்டீரவம்.** கம்பராமாயண யுத்தகாண்டத்திலுள்ள இரணியன் வதைப்படலத்திற் காண்கிறபடி நரஸிம்ஹைகதாஸாரம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

5. **கண்டீரவாவதார காரணநிருபணம்.** ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்கள் ஊன்றியநுபவிக்க வேண்டிய வியாஸமிது. D. T. T. அவர்களின் வியாஸமொன்றுக்கு மறுப்பிது.

6. **துர்க்கந்ததூரீகரணம்.** ராஜமன்னுர் ஸன்னிதி ஸ்ரீஉவே. ஜ்யோதிர்பூஷணம் வங்கிபுரம் ராஜமையங்கார் ஸ்வாமி யெழுதியது. இது பாரிஜாதபுஷ்பமென்னுமொரு சுவடிக்கு ஏகதேசமறுப்பென்று தெரியவருகிறது. அந்த புஷ்பம் ககநாரவிந்த புஷ்பமாய் விட்டதென்றும். அதையெழுதியவர் வ்ருச்சிகதஷ்டமலிம்லுசபிருதத்தை அங்வர்த்தமாக்கி வருகிருரென்றும் வதந்தி.

ஸ்ரீராமாநுஜன் 144ல் விஷயங்கள்

1. **கன்னனும் திருப்பாணுழ்வாரும்.** கண்ணனுக்கும் திருப்பாணுழ்வார்க்கும் எட்டு வகைகளாலே ஸாம்யமிட்டு நாமியற்றிய ஸ்ரக்தரா ச்லோகமொன்று உரையோடுங்கூடியது.

2. **திருமலையில் வித்வத்பரிஷத்து.** 1960 டிஸம்பர்மீ 10, 11, 12 தேதிகளில் திருமலையில் தேவஸ்தான மூலமாக நடந்த வித்வத்பரிஷத்தின் செய்தியறிவிப்பு.

3. **ஸ்ரீவைஷ்ணவ மாஹநிதி.** இது நான்கு பரிச்சேதங்கள் கொண்டது. ஆழ்வார்களுடையவும் ஆசாரியர்களுடையவும் அவதாரநக்ஷத்ராதிகளையும் அவர்கள் செய்தருளின உபகாரங்களையும் விவரிப்பது முதல்பரிச்சேதம். பூர்வாசாரியர்களின் மஹோபகாரகத்வ விவரணமானது இரண்டாம்பரிச்சேதம். [அவரவர்கள் செய்தருளின க்ரந்தங்களையெல்லாம் விவரிப்பது] நூற்றெட்டுத் திருப்பதிகளின் அகராதியும் அத்திருப்பதிகளின் விசேஷங்களுங் கொண்டது மூன்ருவது பரிச்சேதம். (இதில், ஸ்ரீமத்பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரியஜீயர் ஸ்வாமி சின்னஜீயர் ஸ்வாமிகளின் திருவுருவப்படமும் ஸேவிக்கவுரியது). திருமயிலைப் பேயாழ்வார் திருமஞ்சனக்கட்டியம் நான்காவது பரிச்சேதம். ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதியானவிது தனிப்புத்தகமாகவும் கிடைக்கும். இதில் முதல்பரிச்சேதத்தில் 'மிகவும் ஸாரமான பேச்சு' என மகுடம்புனைந்த வொரு வார்த்தைமட்டும் இங்கெடுத்துக் காட்டலாகிறது;—

"இங்கு ஸாரமாகவொன்றே தெரிவிப்போம். வேதாந்தவாசிரியர் பிரபந்தசாரமென்றொரு நூலைச்செய்து அதில் திருமடல்களை இத்தனையித்தனை பாட்டுக்களென்று பிரித்துக்காட்டினது உண்மையாயிருந்தால் அது அவருடைய காலத்தில் ஸகலாசார்ய ஸம்மதமாகவே யிருந்திருக்கும். தாமாகவொரு புதிய அபிப்பிராயங்கொண்டு ஸ்வேச்சையாகப் பிரித்துக் காட்டியிருக்கவேமாட்டார். ஸ்ரீவைஷ்ணவாசார்ய ஸங்கேதவரம்பைக் கடப்பவரல்லரவர். ஆழ்வார்களின் அவதார ஸ்தலங்களிலும், அவதாரநாட்களிலும், கர்த்ருநாம நிர்தேசம் அடியோடு இல்லாத திருவந்தாதிகள். திருச்சந்தவிருத்தம், அமலனுதிபிரான், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, திருமடல்கள், இராமாநுசநூற்றந்தாதி ஆகிய இவற்றின் கர்த்ருநாமங்களிலும், பரம்பரையாகவந்த பல ஐதிஹ்யங்களிலும், திவ்யப்ரபந்தார்த்த விசேஷங்களிலும் எப்படி அபிப்ராயபேதம் கொண்டிலரோ, அப்படியே திருமடல்களின் பாட்டுலக்க விஷயத்திலும் அபிப்ராயபேதம் கொண்டிருக்க அணுமாத்ரமும் அவகாசமிருந்திராது. ஆக, சிறிய திருமடல் நாற்பது பாட்டென்றும், பெரிய திருமடல் 78 பாட்டென்றும் அவர் காட்டியிருந்தது உண்மையாகில், பிற்பட்டவர்கள் யாரும் அதில் வைமத்யங் கொள்ள நேர்ந்திருக்கவேமாட்டாது. "தேசிகர் அப்படி கணக்கிட்டார்; அப்பிள்ளை இப்படி கணக்கிட்டார்" என்கிற வேற்றுமைப் பேச்சு விளைந்திருக்க ப்ரஸக்தியே கிடையாது. வேற்றுமை காணப்படுவது கொண்டே இவை கற்பனைகளத்தனை என்று கல்வெட்டுச் செய்யக் குறையில்லை. ஆக, திருவெழு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூற்றிருக்கைபோலவே திருமடல்களும் தனித்தனி ஓரேபாட்டென்று திண்ணமாக வெண்ணுக. இதில் யாருடைய எந்தப் பேச்சும் பயன்படாது."

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சிநியின் மூன்றுவது பரிச்சேதமாகிய நூற்றெட்டுத் திருப்பதி விளக்கத்தில் (பக்கம் 22ல்) கூடல் என்றதற்கு அடுத்தபடியாகக் கூடலூர் என்கிற திருப்பதி இருக்கவேணும். இஃது அச்சில் விடுபட்டது. சேர்த்துக்கொள்க. கூடலூர்—ஆடுதுறைப்பெருமாள் கோயிலென வழங்குவது; திருமங்கையாழ்வார் பதிகம் பாடல்.

ஆக, 1960ஆம் ஆண்டில் வெளிவந்த ஸ்ரீராமாநுஜன் (133 to 144) பன்னிரண்டு பத்திரிகைகளின் ஸாரஸங்க்ஷேபமான விஷயஸூசிகை வெளியிடப்பட்டதாயிற்று. ஸ்ரீராமாநுஜன் பழைய ஸஞ்சிகைகள் யாவும் கிடைக்குமா? என்று பலர் கேட்கிறார்கள். அநுஸ்யூதமாக எல்லாம் கிடைப்பதரிது. சிலவே கிடைக்கக்கூடும். பெரும்பாலும் பூருவர்களின் நூல்களுக்கு உரைகள் வெளியிடப்பட்டபடியால் அவை தனிப் புத்தகமாகவே கிடைக்கும். இப்போது பன்னிரண்டாவது ஸம்புடத்திற்கு விஷய ஸூசிகை வெளியிடப்பட்டது போலவே 1 to 11. ஸம்புடங்களுக்கும் விஷயஸூசிகை சுருக்கமாக இதன்பின் பக்கத்தில் வெளிவரும். அதனால் எல்லாம் விசதமாகும்.

ஸ்ரீராமாநுஜனில் வெளியிடத் தொடங்கிய நூல்களில் அனேகம் முடிவு பெற்றுச் சில நூல்கள் மட்டும் முடிவு பெறுமலிருப்பதுபற்றிப் பலர் கேட்கிறார்கள்; அவர்களுக்குத் தெரிவிக்கலாகிறது. கம்பரின்பக்கவித்திரட்டு என்பதில் 16 பாரங்கள் (பக்கம் 128) மட்டுமே வெளியாகியுள்ளன. இதில் அயோத்தியாகாண்டம் பாதிபாகம் வரையில் வெளிவந்துள்ளது. இக்காண்டத்தை முடித்து முதற்பகுதியாகத் தனிப்புத்தகம் வெளியிட்டிருக்கிறோம். அதன் விலை 2 ரூ. மேற்பகுதிகளும் இரண்டிரண்டு காண்டமாகப் புத்தக ரூபமாய் வெளிவரும். முதற்பகுதியின் முடிவு பாரங்கள் ஸ்ரீராமாநுஜனிலும் வெளிவரவேண்டுமாதலால் அவை அடுத்த இதழில் வெளிவரும். (2) தேசிக ஸ்தோத்ரங்களில் ஹயக்ரீவஸ்தோத்ரம், வைராக்யபஞ்சகம், பரமார்த்தஸ்துதி, கோதாஸ்துதி, ந்யாஸதசகம், பகவத்த்யாநஸோபானம், தசாவதாரஸ்தோத்ரம், யதோக்தகாரிஸ்தோத்ரம், அஷ்டபுஜாஷ்டகம், காமாஸிகாஷ்டகம் ஆகிய இவற்றுக்கு விரிவுரை பூர்த்தியாக வெளியிடப்பட்டுள்ளது. மற்றவையும் க்ரமேண வெளியிடப்படும். (3) தேசிகப்பிரபந்தமென வழங்கும் தமிழ்ப்பிரபந்தங்களுக்கு உரை வெளியிடத் தொடங்கி (ஸ்ரீராமாநுஜனில்) ஏழெட்டு பாரங்கள் வெளியிட்டிருந்தோம்; தேசிக ரஹஸ்யங்களில் ஆதியந்தங்களிலும், ஓரோரதிகாரத்தில் ஆதியந்தங்களிலும் ஸாதிக்கப்பட்டுள்ள ச்லோகங்கள் போலவே பாட்டுக்களும் ஸாதிக்கப்பட்டிருக்கின்றனவன்றோ. அவற்றைத் தனிப்படப் பிரித்தெடுத்து, புதிதாகப் பிரபந்த நாமமிட்டுக் கோவில் சண்டைக்குச்செய்த சூதுகளிவை என்பது நமக்குத் திண்ணமாகத் தெரிந்ததனால் 'தேசிகரஹஸ்யங்களுக்கு உரைசெய்ய நேர்ந்தால் அப்போது அந்தப் பாட்டுக்களுக்கும் உரைசெய்ய ப்ராப்தமாகலாமத்தனையொழிய, தனிப்பிரபந்தமாக வைத்து உரைசெய்வது மிகத்தவறென்று தோன்றி அதை அறவே நிறுத்திவிட்டோம். ஸ்ரீராமாநுஜன் 140ல் வெளிவரத்தொடங்கிய நமது உபந்யாஸவிம்சதியில் எட்டாவது உபந்யாஸத்தை வாசித்தால் இன்னமும் தத்துவம் விசதமாகும். "தேசிகப்பிரபந்தாநுஸந்தானம் தென்கலையார் ஏன் செய்வதில்லை?". என்ற மகுடம் புனைந்தது அவ்வுபந்யாஸம். (4) பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய அஷ்டப்பிரபந்தங்களுக்கு எளிய உரை வெளியிடத்தொடங்கி நூற்றெட்டுத் திருப்பதியந்தாதிக்கு மட்டும் உரை பூர்த்தியாக வெளியிட்டோம். மற்றவை க்ரமேண வெளிவரும்.

நாலாயிர திவ்யப்பிரபந்தங்களுக்கு ஸம்ஸ்க்ருதத்திலும் ஹிந்தியிலும் டீகை யெழுதி தேவநாகரலிபியில் வெளியிடும் பணியில் முக்கியமாக ஊக்கம் செலுத்தி அதிகமான அவகாசத்தை அதில் செலவிட நேர்ந்திருப்பதனால் அதற்கு அவிரோதமான இதர காரியங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றனவென்றுணர்க. .... *

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் ஸஞ்சிகைகளை ஆதியிலிருந்து அபேக்ஷிப்பவர்களுக்கு இது தெரிவிக்கலாகிறது. ஸஞ்சிகையாகக் கிடைப்பது அரிதானாலும் அவற்றில் வெளிவந்துள்ள நூல்களும் முக்கியமான வியாஸங்களும் சேமிக்கப்பட்டிருப்பதால் அவை கிடைக்கும். அவற்றுக்கு அகராதி அட்டவணை.

அத்புதோபந்யாஸமாலை
அங்கண்மாஞாலத்தமுது
அபூர்வ ராமாயணம்
அர்ச்சாவதார வைபவம்
அறுபத்திரண்டு உபந்யாஸமாலை
அறுபத்துமூன்று உபந்யாஸமாலை
அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்
அறுபத்துநான்கு நன்மொழிகள்
ஆசார்ய ஹ்ருதயம் மூலம்
ஆசார்ய ஹ்ருதயப் பெருமை விளக்கம்
ஆசார்ய ஹ்ருதயத்தில் தவறுள்ள பாடத்திருத்தம்
ஆச்சான் பிள்ளை யஷ்டாத்யாயி
ஆச்சான் பிள்ளையாறு ரஹஸ்யம்
ஆராய்ச்சிக்கு அருமருந்தான மறுமொழிகள் 64
இராமானுச நூற்றந்தாதி விளக்கம் (இது 1 to 108ல்)
இளையபெருமாளின் அஸத்யவாதித்வ கண்டனம்
உத்தரதேச யாத்திரை விளக்கு
உபய ராமாயண கதாஸாரம்
உள்ளுறை பொருள் விளக்கு
எம்பெருமானார் அறுபத்திரண்டு
எம்பெருமானார் பெருமை விளக்கங்கள் பல
ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலை
கண்ணனும் கலியனும்
கம்பரின்பக் கவித்திரட்டு
காஞ்சீ ஹஸ்திகிரி வைபவம்
க்ஷமாஷோடசியுரை
கூரத்தாழ்வானும் சோழராஜ ஸபையும்
கோதைத் தமிழ்ச் சுவையமுதம்
கோயில் மஹாஸம்ப்ரோக்ஷணம்
ஸ்ரீபாஷ்ய ஸாரார்த்த ஸங்க்ரஹம்
ஸ்ரீரங்கச் செய்தி
ஸ்ரீரங்கநாத பாதுகா ஸமீக்ஷா
ஸ்ரீரங்கராஜஸ்தவவுரை 1, 2 சதகம்
ஸ்ரீஜயந்தியநுபவம்
ஸ்ரீமஹாவிஷ்ணு ஸாம்ராஜ்யம்
சக்ரவர்த்தி திருமகனறுபத்துநான்கு
சாங்கர சிரோபூஷாவிபூஷணம்
சாஸ்த்ரார்த்த சந்திரிகை 10 மலர்கள்
சிங்கப்பெருமாள் திருவாக்கு வெற்றி
சிங்கப்பெருமாள்... ஆறுவது மலர்
ஜகதாசார்ய ஸந்நிதி
ஞானஸாரப்ரமேயஸாரஸப்த காதையுரை
டில்லிவிழாக் குதூஹலக் கொண்டாட்டம்
த்ரமிடாத்ரேய தர்சன விமர்சம்
த்ரௌபதீப்ரபத்திப்ரதிஷ்டா
தயிரரவப் பாடத்திருத்த மறுப்பு
தாடிபஞ்சகவுரை
தானே மொழிந்த தன் சரிதை
திவ்யப்ரபந்த பகவத் கதாம்ருதம்
திவ்யப்ரபந்தத் திருநாம மாலை
தேசிகன் சரித்திரம்
தேசிக ஸஹஸ்ரநாம விமர்சம்
தேசிக ஸ்தோத்திரங்கள் பத்துக்கு உரை
தேவப்பெருமாள் ஸுப்ரபாதம்
தேவராஜாஷ்டக தேவராஜ மங்களவுரை
தேவாதிராஜ பஞ்சகவுரை
நக்ஷத்ரமாலிகையுரை
நப்பின்னையின் அவதார ரஹஸ்யம்
நான் கண்ட நல்லது
நூற்றந்தாதியிராமானுசமாலை
நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியுரை
பரபந்தஸார தத்வஸாரம்
பராங்குசாஷ்டகம் உரை
பூர்வாசார்ய ப்ரபாவம்:
மதுரோபந்யாஸமாலை
மந்தோதரிப்ரலாபதத்வநிரூபணம்
மாமுனிவரருள் வெற்றி
மாமுனிவன் மேற்கோள் விளக்கு
ரோதஸீ தத்வ போதினீ
வடநாட்டுத் திருப்பதி விசேஷங்கள்
வரதன் ஸன்னிதி வரலாறு
வரவரமுநிதிநசர்யா 1, 2 உரை
வாக்யஜன நிகழ்ச்சி வைபவங்கள்
வான்மீகி ராமாயண வசனம்
விமர்சபரீக்ஷா விமர்சம்
விஷ்ணு கோவில்களும் விசேஷாதர்ம பரிபாலனமும்
விஷ்ணு ஸஹஸ்ரநாமவுரை
வேங்கடேச ஸ்தோத்ரவுரை
வேங்கடார்ய சதகம் உரையுடன்
வைதிகலௌகிகமஹநீயமண்டலி
ஸத்யவாதிஸமாச்வாஸனம்
ஸ்வாபதேச பரமார்த்தம்
ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸாரநிதி
ஸத்ஸம்ப்ரதாயபாஸ்கரன்
ஸம்ப்ரதாயப்ரதீப விமர்சம்
ஸாரார்த்த ஸங்க்ரஹம்
ஸாதுஸாத்விக ஸம்வாதம்

ஸ்ரீராமாநுஜன் 1 முதல் 132 வரையில் வெளிவந்துள்ள இவையெல்லாம் கிடைக்கும். 133 முதல் 144 வரையில் உள்ளவற்றைப்பற்றி முன் பக்கங்களில் காண்க.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமியின்

சார்வரி.ஹூ மீன விசாகோத்ஸவப் பத்திரிகை

ஸ்ரீஸ்வாமியின் எழுபதாம் திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு
நாளது பங்குனிமீ 6உ முதல் 22உ திருவிசாகம் வரை
ஸ்ரீகாஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்

19—3—61 TO 4—4—61

வேதபாராயணம் திவ்யப்ரபந்தஸேவை ரஹஸ்யாநுஸந்தானம் ஸ்தோத்ர பாடம் வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும்.

ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

வேதபாராயண கோஷ்டிகள் கடந்த ஸம்வத்ஸரங்களிற்போலவே ஸாமவேதம், சுக்லயஜுஸ், யஜுர்வேதம் க்ரமாந்தம் திருவீதி வலத்துடன் நடைபெறும்.

வேதபாராயணங்கள் மட்டும் 19—3—61 தேதியிலிருந்து நடைபெறும். 24—3—61 தேதி காலையில் திவ்யப்ரபந்தஸேவை தொடக்கமாகும். திருவிசாகத்தன்று

வேதசாத்துமுறையும் திவ்யப்ரபந்தசாத்துமுறையுமாகும்.

விசேஷக் குறிப்பு

இவ்வருஷம் ஸ்ரீஸ்வாமிக்கு எழுபதாவது திருநக்ஷத்ர பூர்த்தியென்னும் விசேஷத்தை முன்னிட்டு சென்னைவாஸிகளான பக்தவர்க்கங்கள் விசேஷித்துச் சில சிறப்புகள் செய்யக் குதூஹலம் கொண்டிருக்கிறார்கள்; அவற்றுள் தலையானது, வேதகோஷ்டியிலும் திவ்யப்ரபந்த கோஷ்டியிலும் வித்வத் கோஷ்டியிலும் ஸ்தோத்ர கோஷ்டியிலுமாகச் சேரந்து எழுபது ஸ்வாமிகள் ஸேவை ஸாதிக்கும்படியாகச் செய்வது.

இங்ஙனம்

காஞ்சீபுரம்,
1—3—1961

பிரதிவாதிபயங்கரம் செல்வமணி என்கிற
ரங்கநாத தாஸன்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Srimathe Ramanujaya Namah

Sri Kanchi Maha Vidwan

Jagadacharya Simhasanadhipathi

P. B. Annangaracharya Swami's

SEVENTIETH BIRTHDAY CELEBRATIONS

The Seventieth Birth day of Sri Swami is being celebrated this year at his residence in Kanchi, from 13—3—61 to 4—4—61 Vedas, Divya Prabandhams, Stotras and Rahasyas will be chanted. Procession of the Veda Goshti and religious lectures will also take place as usual. Vedaparayanam only will commence from 19—3—61. Divya Prabanda will commence on 24—3—61.

SPECIAL NOTE

In view of the completion of the Seventieth Holy Birthday of Shri Swamy this year Devotees of Madras have taken great zeal to honour the Swamy with special and significant programmes. Foremost of these is to arrange for assembling Seventy Swami's in all in the Veda, Divya Prabandha, Sthothra, Rahasya and Vidvath Goshtis.

P. B. CHELLAMANI alias

RANGANATHACHARYA

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்
நமது எழுபதாவது வயதின் பூர்த்திக்கு நினைவுமலராக எழுதிய

எழுபது நல்வார்த்தைத் திரள்

(ச்லோ.) ஸப்ததிவய:ப்ரபூர்த்திஸ்மாரகசிஹ்நம் ப்ரபந்தரத்நமிதம்.
ஸப்தத்யா ஸத்விஷயைஸ் ஸஹ்ருதயஹ்ருதயப்ரஹர்ஷமாதநுதாம்.

1. பேரருளாளன் பேரருளின் பலன்

அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினை கெடச் செங்கோல் நடாவுதிர் என்று நம்மாழ்வாரும், *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற வெம்பெருமான்* என்று ஆண்டாளும் எம்பெருமானை உபயவிபூதி நிர்வாஹகனென்று பேசினார்கள். நித்யவிபூதிக்கு எதிராயிருக்கின்ற இந்த லீலாவிபூதியை மாஞானிகள் 'இருள் தருமாஞாலம்' என்று வழங்குகிறார்கள். இம்மண்ணுலகம் இருளே மலிந்ததென்று சொல்லப்படுகிறது. ஸூர்யன் சந்திரன் அக்னி முதலிய சுடர்ப் பொருள்களால் போக்க முடியாத அகவிருள் [அஜ்ஞாநாந்தகாரம்] இங்கு இருளெனப்படுகிறது. "அந்தம் தம இவாஜ்ஞாநம்" என்று ஸ்ரீபராசர மஹர்ஷியும் சொல்லிவைத்தார். இப்படிப்பட்ட அகவிருளை அகற்றுவதற்காகவே பேரருளாளனை எம்பெருமான் *கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து* என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளான நாநாசாஸ்த்ரங்களை யுபகரித்தருளினான். அப்படி உபகரித்தவிடத்தில் ஸத்வாரகமாகப் பல நூல்களையும் அத்வாரகமாகச் சில நூல்களையும் இவ்வுலகின்கண் அவதரிப்பித்தருளினன். வ்யாஸபராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளை த்வாரமாகக்கொண்டு அவர்கள் வாயிலாக வெளியிட்டவை ஸத்வாரக மெனப்படும். அப்படியன்றிக்கே தானே ஸாக்ஷாத்தாக வெளியிட்ட கீதாசாஸ்த்ரம் அத்வாரகமெனப்ப்டும். இதுவே பேரருளாளன் பேரருளின் பலன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

2. அருளாளனருளிய நூல்களில் தலையானது கீதாசாஸ்த்ரம்

"வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம்" *வேதங்களுக்குள்ளே புருஷஸூக்தமும் தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ளே மநுஸ்ம்ருதியும், மஹாபாரதத்திற்குள்ளே ஸ்ரீகீதையும், புராணங்களுக்குள்ளே ஸ்ரீவிஷ்ணுபுராணமும் சிறந்தவையென்று சொல்லிற்று. பஞ்சமவேதமாகப் புகழப்படுகின்ற மஹாபாரதத்தினுள்ளே கீதோபநிஷத்தென்று குலாவப்படுகின்ற பகவத்கீதையானது பெரும்பாலும் ஸகலமதஸ்தர்களாலும் உச்சிமேல்வைத்து மெச்சப்படுகின்றதென்பது உலக மறிந்தது. உபநிஷத்துக்களின் அரியபெரிய பொருள்களெல்லாம் இதுதன்னில் அடங்கிக் கிடக்கின்றமையால் எப்படிப்பட்ட பண்டிதர்களுக்கும் வியாக்கியானங் களின் உதவியின்றி இதன் பொருள் அறிய முடியாததாயிருக்கும். ஆனது பற்றியே பலபல மஹான்களும் மஹாசார்யர்களும் மேதாவிகளும் இதற்கு அனேக வியாக்கியானங்கள் இயற்றியுள்ளார்கள். மூலத்தின்மேல் ப்ரதிபத வியாக்கியானமாகவும் பொழிப்புரையாகவும், கருத்துரையாகவும், உபந்யாஸ ரூபமாகவும், ஆராய்ச்சி யுருவமாகவும் மற்றும் பலவிதமாகவும் கீதைக்கு அமைந்திருக்கின்ற விவரணங்கள் எண்ணுதற்கரியன. இவை இரண்டொரு பாஷைகளிலல்ல; ஐந்தாறு பாஷைகளிலுமல்ல; உலகில் எத்தனை பாஷைகள் நடையாடுகின்றனவோ, அத்தனை பாஷைகளிலும் தோன்றியுள்ளன. இது கொண்டே இதன் ஒப்புயர்வற்ற மஹிமை அறியற்பாலது. இத்தகைய மஹா சாஸ்த்ரத்தை அருளிச்செய்த அருளாளனது அருளே அருள். .... (2)

3. கீதாபாஷ்யங்களின் பரிஸ்திதி

மதத்ரய பாஷ்யங்களென்று குலாவப்படுகின்ற கீதாபாஷ்யங்கள் ஸம் க்ஷேபமான முறையில் அவதரித்தவை யெனினும், மத்வாசார்ய பாஷ்யமானது மிகவும் ஸம்க்ஷிப்தமாகத் தோன்றியது. சங்கராசார்ய பாஷ்யமானது அதை விட சிறிது விரிவாகத் தோன்றியது. பகவத் ராமாநுஜ பாஷ்யமானது ஆவச்யக விஷயங்களைச் சிறிதும் விடாமலும் அநாவச்யக விஷயங்களை அடியோடு தொடாமலும் பரமபோக்யமான பத்ததியில் அவதரித்துள்ளது. உலகில் அவரவர்கள் தம்தம் ஸம்பிரதாய நூல்களைப் புகழப் பிறந்தவர்களாதலால் அதற்குச்சேர நாம் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை ப்ரசம்ஸிப்பதாகச் சிலர் நினைக்கவுங்கூடும். வஸ்து ஸ்திதியில், எந்த மதத்தைச் சேர்ந்தவரும் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தைக்கண்டு ஈடுபடுவதை நாம் காண்கிறோம். மூலத்தி லுள்ள ஒரு பதத்திற்கும் அர்த்தம் செய்வதை விடாமலும் பொருத்தமான அந்வயக்ரமங்களையும் அர்த்தங்களையும் காட்டியும் அருளிச்செய்யப்பட்ட பாஷ் யம் இதொன்றேயென்று நாம் கூசாமல் கூறலாம். இது அபிமானத்தினால் சொல்லப்படுகிற வார்த்தையென்று பிறர் நினைத்தாலும் நினைத்திடுக. விவேகி களான யாவருடைய மனமும் ஒருங்கே இசையக்கூடிய வார்த்தையே இது என்பது வஸ்துஸ்திதி. அநுபவரஸிகர்களின் உள்ளமே இதற்கு ஸாக்ஷி. (3)

4. கீதாசாஸ்த்ரத்தின் அவதாரிகை கீதையிலேயேயுள்ளது

பொதுவாக ஒவ்வொரு க்ரந்தத்திற்கும் அவதாரிகையுண்டு. ஆனால் அந்த அவதாரிகையானது பெரும்பாலும் வியாக்கியானகாரர்களால் விவரிக்கப் படும். அது மூலக்ரந்தத்தில் இல்லாமலிருக்கும். திருவாய்மொழிக்கு முதல் ச்ரிய:பதியென்றும் இரண்டாம் ச்ரிய:பதியென்றும் மூன்றாம் ச்ரிய:பதியென் றும் அவதரித்துள்ள அவதாரிகைகள் வியாக்கியானகாரர்களினால் அமைக்கப்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பட்டவையேயன்றி மூலமான திருவாய்மொழியில் கிடையாது. கீதையில் அப்படியன்றிக்கே முதலத்யாயம் முழுதும் அவதாரிகையாகவே தோன்றியுள்ளது. 'இந்த நூல் எதற்காக அவதரிக்கின்றது' என்பதை விசதமாக நிரூபிப்பது தானே அவதாரிகை. அதனை நாம் பிறர் வாயினால் தெரிந்துகொள்ள வேண்டாமல் கீதையைக்கொண்டே நன்கு தெரிந்துகொள்ளுகிறோமாதலால் இதற்கு அவதாரிகையும் இதிலேயே பொருந்தியிருக்கிறதென்று சொல்லத் தட்டில்லை.

5. கீதையிலுள்ள அவதாரிகையின் விவரணம்

கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதனாதியரிடம் தூதுசென்று ஸமாதான வழிகள் பல பேசியும் "வீரபோக்யா வஸுந்தரா" ஆகையாலே போர்க்களத்தில் வீரத்தனத்தைக்காட்டி வெற்றிபெறுமவர்களே ராஜ்யமாளக் கடவர்கள் என்று த்ருதராஷ்ட்ர வகுப்பினர் கூற, பிறகு யுத்தமே நடத்தக்கடவதாக முடிவுபெற்றது. இருவகுப்பினரும் படைத்துணை வேண்டிக் கண்ணபிரான் பக்கலிலே வந்தார்கள். துரியோதனன் கண்ணபிரானைத் துணையாக விரும்பவில்லை. "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்னும் புகழ்பெற்ற பாண்டவர்களுக்கே கண்ணபிரான் துணைவனாக நிற்க வேண்டிற்று. பக்த பரதந்திரனான ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா தன்னுடைய பரம பக்தனான அர்ஜுனனுக்குத் தேர்ப்பாகனாயிருந்துகொண்டு குருக்ஷேத்திரமென்னுமிடத்தில் வந்து போர்புரிய அணிவகுத்து நின்றனன். அப்பொழுது அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி, 'பெருமானே! இந்தப் போரில் யான் யாருடன் போர் புரிவது தகுதியானது? துர்ப்புத்தி வாய்ந்த துரியோதனனுக்குத் துணைபுரிவதற்காக யார் யார் வந்திருக்கிறார்களென்பதை நான் கண்டு தெரிந்து கொள்ளுமாறு தேரை இரண்டு சேனைகளினிடையில் நிறுத்தவேணும்' என்று கூற, அப்படியே கண்ணபிரான் இரண்டு படைகளினிடையே தேரை நிறுத்தி 'அர்ஜுனா! இவ்விரு படைகளிலுமிருக்கின்ற போர்வீரர்களைப் பாராய்' என்றனன். அப்போது அர்ஜுனன் போர்க்களத்தில் வந்து நின்றிருக்குமவர்கள் தந்தைகளாயும் புத்திரர்களாயும் பேரன்மார்களாயும் தோழன்மார்களாயுமிருப்பதுகண்டு அவர்களிடத்து இரக்கங்கொண்ட மனத்தனாய் ஸ்ரீக்ருஷ்ணனை நோக்கி 'கண்ணா! போர்புரிய ஆயத்தர்களாயிரா நின்ற இந்த உற்றுறவினரைக் காணவே எனது காண்டீவ தனுசு கையில் நின்றும் சோருகின்றது; என்னுடல் எரிகின்றது; மயிர்க் கூச்செறிகின்றது; தேஹம் நடுங்குகின்றது; நான் நிற்கமாட்டேன்; என் மனம் குழம்புகின்றது; அபசகுனங்கள் காண்கின்றன; அமர்க்களத்தில் இவ்வுறவினர்களைக் கொன்று நான் என்ன நன்மையடையப்போகிறேன்? எனக்கு யுத்தமும் வேண்டா, யுத்தத்தில் வெற்றியும் வேண்டா; இராச்சியமும் வேண்டா, இன்பமும் வேண்டா; உறவினர்களோடு கூடிக்களித்து வாழ்வதற்காகவன்றோ பொருட்செல்வம் விரும்பப்படுகின்றது; அன்னவர்களனைவரும் உடலையும் உயிரையும் செல்வத்தையும் பொருள்படுத்தாது போர்புரிய வந்து நிற்கின்றனரே. அவர்களை வென்று கொன்ற பின்பு இந்த ராஜ்யத்தினாலுண்டாகு மின்பம் யாதோ? பிறகு நான் பிழைத்திருந்து தான் என்ன பயன்? மூவுலகவின்பமும் கிடைப்பதாயிருந்தாலும் நான் இவர்களைக் கொல்லமாட்டேன். க்ருஷ்ணா! ராஜ்ய ஸுகங்களுக்காக உறவினரைக் கொல்வது பெரும்பாதகமல்லவோ? ஆகையால் அஸ்த்ர சஸ்த்ரங்களை நான் பிரயோகிக்கப்போகிறதில்லை! பிரயோகியாமல் வாளா நிற்குமென்னைத் துரியோதனாதிகள் கொன்றபோதிலும் அதனால் எனக்கு வருத்தமில்லை; அது எனக்கு க்ஷேமமேயாகும்—என்று கூறி வில்லைக் கீழே பொகட்டு வருத்தமும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கலக்கமும் மிகப்பெற்றுத் தேரிடையே உட்கார்ந்துவிட்டான்; என்கிறவிதுவே நாற்பத்தேழு சுலோகங்கள்கொண்ட முதலத்யாயத்தின் பிரமேயம். இப்படி அஸ்தாநே கலங்கின அர்ஜுனனுடைய கலக்கத்தைப்போக்கி அவனை யுத்தத்திலே மூட்டுவதற்காகக் கண்ணபிரான் இரண்டாமத்யாயத்திலிருந்து பலபல வுபதேசங்களைச் செய்தருள அவனும் தெளிவு பெற்று "ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ" என்று சொல்லிப் போர்புரிய இசைந்தானென்பது கீதையின் முழுப்பொருள். .... (5)

6. கீதாசாஸ்த்ரம்அவதரித்ததன் காரணஜிஜ்ஞாஸை

தனது பகைவர்களையெல்லாம் வதைத்தொழிக்க வேணுமென்கிற ஊக்கங்கொண்டே போர்புரிய ஆயத்தனாய் வந்துநின்ற பார்த்தன் இப்போது இன்னாரின்னார் போர்புரிய வந்திருக்கிறார்களென்பதைக் கண்டறிந்து கொள்ளவேணுமென்றது சிறிதும் பொருத்தமாக இல்லை. இது எப்படி பொருந்தும்? இது முதன் முதலாக ஆலோசிக்க வேண்டிய விஷயம். மேலும், யுத்தம் பண்ண மாட்டேனென்ற அர்ஜுனனை யுத்தஞ்செய்ய இசைவிக்க வேண்டியதுதானே கண்ணபிரானுக்குக் கர்த்தவ்யம்; அதற்கு இவ்வளவு விஸ்தாரமான கீதாசாஸ்த்ரம் வேணுமோ? 'அப்பா! நீ க்ஷத்திரியனாகையாலே யுத்தஞ்செய்யக் கடமைப்பட்டவனாகிறாய்' என்கிற விவ்வளவை உபபத்திகளுடன் சொன்னாற்போதும்; இதற்கு ஒரு அத்யாயமே அதிகம். அத்தனையத்யாயங்கள் வளர்த்திருப்பதேன்? என்னுமிவ்விஷயங்களுக்குப் பொருத்தமான ஸமாதானம் வேண்டும்.

7. கீதாவதாரகாரண நிருபணம்

ஸமாதானம் கேண்மின். பகவான் ஸ்ரீராமாவதாரஞ்செய்து *தசவர்ஷஸஹஸ்ராணி தச வர்ஷசதாநி ச, ராமோ ராஜ்யமுபாஸித்வா* என்றபடி பதினோராயிரமாண்டு இங்கிலவுலகில் வாழ்ந்திருந்தும் ஸம்ஸாரி சேதநோஜ்ஜீவநார்த்தமாக ஒரு சாஸ்த்ரமும் இட்டருளவில்லை; தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின பிறகு திருவுள்ளத்தில் இக்குறை மிகவும் தோன்றிற்று. அப்போதே திடமாக ஸங்கல்பம் செய்து கொண்டான்—அடுத்தபடி மண்ணுலகில் அவதாரம் செய்யும்போது மிகச் சிறந்ததொரு சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தே தீருவேனென்று. சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தலென்றால் ஓலைப்புறத்திலே எழுதிவைப்பதன்று. அப்படி யெழுதி வைத்தால் மஹர்ஷிப்ரணீதங்களான இதிஹாஸபுராணாதிக்ரந்தங்கள் போலே இதுவுமொன்று என்று நினைக்கும்படியாகுமத்தனை. ஒரு உத்தமாதிகாரிக்குத் தன் திருவாக்காலே நேராக உபதேசித்து அம்முகத்தாலே உலகில் பரவ வைக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தான். ஸ்ரீவசநபூஷணத்தில் "ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திகாக்ரேஸரனாய் *கேசவஸ்யாத்மாவென்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுநனுக்கு" என்று பிள்ளை லோகாசார்யர் புகழும்படியான பெருமை வாய்ந்த அர்ஜுனனையே உபதேசஸத்பாத்ரமாகத் திருவுள்ளம்பற்றினான் கண்ணபிரான். அரும்பெரும் பொருள்களை சிஷ்யனானவனுக்கு உபதேசிக்கலாமே யல்லது மற்றையோர்க்கு உபதேசிக்கத் தகாது. அர்ஜுனன் இப்போது நண்பனென்னும் முறையிலுள்ளானே யன்றி சிஷ்யனென்னும் முறையிலில்லை. "அதிபரிசயாதவஜ்ஞா ஸந்ததகமநாத் அநாதரோ பவதி, மலயே பில்லபுரந்த்ரீ சந்தநதருகாஷ்டமிந்தநம் குருதே" என்று ஒரு ஸுபாஷிதமுண்டே; மலயபர்வதத்தில் வாழும் குறத்திகள் சந்தனக்கட்டைகளை விறகாக உபயோகப்படுத்திக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொள்ளுகிருர்களாம்; எதனுலே? அவ்விடத்தில் சந்தனகாஷ்டங்கள் மலிந்து கிடக்கின்றன. அவற்ருேடே அவர்களுக்குப் பரிசயம் அதிகம். அதிக பரிசய முள்ளவிடத்தில் அவஜ்ஞை தோன்றுவது இயல்வு. ஆகவே அவர்கள் சந்தனக் கட்டைகளின் பெருமையை யுணராமல் அவற்றை யிட்டுச் சமையல் செய்வதும் குளிர்காய்வதுமாயிருக்கிருர்கள். அதுபோல, கண்ணன்பக்கல் அதிக பரிசய முள்ள அர்ஜுனனுக்கு சிஷ்யத்வமிருக்க ப்ரஸக்தியில்லையன்ருே. சிஷ்ய வ்ருத்தி செய்யாதவனுக்கு உபதேசிக்கக் கூடாததலால் இவ்வர்ஜுனனை எப்படியாவது சிஷ்யனுக்கிக்கொண்டு இவனுக்கே கீதாசாஸ்த்ரத்தை யுப தேசிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றினுன் கண்ணபிரான். "கண்ண பிரானே! உனக்கு நான் சிஷ்யனுயிருக்கின்றேன், எனக்குத் தத்வோபதேசம் செய்தருளவேணும்" என்று பிரார்த்திக்கும்படியாக அர்ஜுனனைச் செய்து பிறகு அவனுக்கு உபதேசிக்கவேணும்; சிஷ்யத்வமென்பது எளிதாக உண்டாய் விடுமோ? "பரீக்ஷ்ய லோகாந்" இத்யாதியுபநிஷத்தின்படி நிர்வேத முண்டானலல்லது சிஷ்யத்வமுண்டாக மாட்டாதாகையாலே அர்ஜுனனுக்கு சிஷ்யத்வ ஸம்பத்திக்கு அங்கமாக நிர்வேதமுண்டாகவேண்டியது அவசியமாயிற்று. அந்த நிர்வேதத்தை யுண்டாக்குவதற்கு ஸமயமெதிர்பார்த்திருக்கிருன் கண்ணபிரான். இப்பெருமான் ஸந்திபண்ணிவைப்பதாகப் புகுந்து, முடிவில் போர்செய் வதையே திடப்படுத்திக்கொண்டு, ஸமயத்தில் கீதாசாஸ்த்ரத்தையுபதேசிக்க இடம்பெறுவதற்காக அர்ஜுனனேடு ஸாமாநாதிகரண்யம் [சேர்த்தி] ஸித்திக் கும் பொருட்டு அவனுடைய தேரில் இருப்புப் பெறுவதற்குத் தேர்ப்பாகனு யிருக்க இசைந்து அவனேடும் அவனுடையாரோடுங்கூட குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்து, யுத்தத்தைத் தொடங்குவதற்கு முன்னே பந்துக்களைக் கண்டு மோஹிப்பதென்ன, அதனுல் சோகவிஷாதங்களை யடைவதென்ன ஆகிய இவற்றையுண்டாக்கி, ஆக இவ்வளவால் சிஷ்யத்வத்திற்கு அங்கமான நிர் வேதத்தை யுண்டாக்குவதாகத் திருவுள்ளம்பற்றி, மேலே பத்தாவது அத்தியா யத்தில் "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே" என்று தானே யருளிச்செய்கிறபடியே தனக்கு அஸாதாரணமாக விருக்கும் சக்தியினுல் இப்போது போர்புரிய வந்து நிற்கும் உற்ருருறவினர்களைப் பார்க்கவேணு, மென்பதோராசையை அர்ஜுனனுக்கு உண்டுபண்ணினுனுயிற்று.

இரண்டாமத்யாயத்தில் பதினேராவது ச்லோகமாகிய "அசோச்யாந் அந்வசோசஸ் த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே, கதாஸூந் அகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா:" என்கிற ச்லோகந்தான் உபதேசத்தின் உபக்ரமமாக வுள்ளது. இதற்கு முன்னே அர்ஜுனன் வாயில் "சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று வெளிவந்திருக்கிறது. 'கண்ணு! எனக்கு தர்மாதர் மங்கள் தெரியவில்லை; எனக்கு ச்ரேயஸ்ஸென்று நீ அறுதியிட்ட பொருளை எனக்கு உரைப்பாயாக. உனக்கு நான் மித்திரன்மாத்திரமல்லேன்; சிஷ்யனு மாகிறேன்; இதோ உன் திருவடிகளில் வீழ்ந்து யாசிக்கிறேன்காண்; எனக்கு ஹிதா ஹிதங்களை யுபதேசிப்பாயாக' என்று அர்ஜுனன் சொல்லும்படி செய்து விட்டான் கண்ணபிரான். இந்த ப்ரார்த்தனையைப் பெருமல் சிறந்த சாஸ்த் ரத்தை யுபதேசிப்பது தகுதியன்ருதலாலும், நிர்வேதமில்லாதவனது வாயில் இந்த பிரார்த்தனை வெளிவராதாகையாலும் இத்தனையும் கண்ணபிரான் செய்து வைத்தவொரு நாடகம் என்பது அறியத்தக்கது. ஆகவே அர்ஜுனனுக்குண் டான வ்யாமோஹம் அவன் றன்னுடைய ஸ்வபாவத்தாலுண்டானதன்று, மாயப் போர்த்தேர்ப்பாகனுடைய மாயமந்திரம் செய்வித்த செயல் என்றதாயிற்று. இல்லையாகில் கீதாசாஸ்த்ரம் அவதரிக்க அவகாசமே யிராதன்ருே. .... (7)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

8. கீதாசாஸ்த்ரத்தை இவ்வளவு விஸ்தாரமாக்கினதன் காரணம்

போர்புரிய மாட்டேனென்ற அர்ஜுனனைப் போரில் மூட்டுவதற்கு இந்த கீதாசாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற விஷயங்களித்தனையும் வேணுமோ? க்ஷத்ரிய தர்மோபதேசமொன்று போதுமே; ப்ரக்ருதத்திற்கு அநபேக்ஷிதங்களான விஷயங்களை இதில்பரக்கக்கூறியிருப்பது ஏன்? என்றால்,சொல்லுகிறோம். ஏதோவொரு வியாஜத்தையிட்டு அரியபெரிய சாஸ்த்ரார்த்தங்களை வெளியிட வேணுமென்று துணிந்த கண்ணபிரானது திருவாக்கில் இது ஆவச்யகம், இது அநாவச்யகம் என்று வரையறுக்க நாமார்? விஷயங்களானவை ப்ரஸக்தம் அநுப்ரஸக்தம் என்று இருவகைப்படுமன்றோ. எந்த சாஸ்த்ரமும் ப்ரஸக்த விஷயங்களோடுமட்டும் நிற்காது; அநுப்ரஸக்த விஷயங்களும் சேர்ந்தே நிற்கும். ஸ்வாமி யெம்பெருமானார் தம்முடைய கீதாபாஷ்ய அவதாரிகையின் முடிவில் அர்ஜுனனை யுத்தத்தில் உத்ஸாஹப்படுத்துவது என்பது வ்யாஜமாத்ரமென்றும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனமாக வேதாந்தங்களில் ஓதப்பட்டதாய் ஜ்ஞானகர்மங்களை அங்கமாக வுடைத்தாயிருந்துள்ள பக்தி யோகத்தை அவதரிப்பிப்பதுதான் இந்த கீதாசாஸ்த்ரத்திற்கு ப்ரதாந லக்ஷ்யமென்றும் தெரிவித்தருளியுள்ளார். ஆகவே முமுக்ஷுக்களுக்கு வேண்டிய ஸகலார்த்த ஸாரங்களும் கீதாசாஸ்த்ரத்தில் தெள்ளமுதாகவுள்ளன. .... (8)

9. கீதாசாஸ்த்ரத்தின் ஸம்வாதாந்வய நிரூபணம்

இந்த கீதாசாஸ்த்ரமானது அர்ஜுனனுக்கும் கண்ணபிரானுக்கும் ஸம்வாத ரூபமாக அவதரித்திருக்கச்செய்தேயும் த்ருதராஷ்ட்ரனுக்கும் ஸஞ்ஜயனுக்கும் ஸம்வாத ரூபமாகவும் அவதரித்ததாயிற்று. கீதை தொடங்கும்போதே "த்ருதராஷ்ட்ர உவாச" என்று அவன் பெயரைத்தான் நினைக்கவும் சொல்லவும் ப்ராப்தமாகிறது. த்ருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை நோக்கிக் கேட்க, குருக்ஷேத்ரத்தில் நடந்த செய்திகளை யெல்லாம் அவனுக்கு ஸஞ்ஜயன் சொல்லுவதாகவும் கீதாசாஸ்த்ரமும் ஸஞ்ஜயன் வாயிலாகவேவெளிவருவதாகவும் அமைந்திருக்கின்றது. பதினெட்டாமத்தியாயத்தில் எழுபத்து மூன்றுவது ச்லோகத்தோடு க்ருஷ்ணார்ஜுநஸம்வாதம் முடிந்துவிட்டது. அதற்குமேலுள்ள ஐந்து ச்லோகங்களும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி முடிப்பதாக அமைந்துள்ளன.

பாண்டவர்களும் கௌரவர்களுமாகிற இருவகுப்பினருடையவும் சேனைகள் போர்புரிய ஆயத்தமாயிருந்தவளவில் வேதவ்யாஸ பகவான் தன் புதல்வனை த்ருதராஷ்ட்ரனிடம் வந்து 'மன்னவனே! இனி நடக்கப்போகிற யுத்தத்தில் உனது புத்திரர்கள் தவறாது விநாசமடையப் போகிறார்கள்; அந்த யுத்தத்தை நீ நேரில்காண விரும்புகின்றாயாகில் அதைக் காண்பதற்கிடான சக்ஷுஸ்ஸை உனக்கு அளிப்பேன்' என்றார். அதுகேட்ட த்ருதராஷ்ட்ரன் 'நான் அதைக் காண விரும்புகின்றிலேன்; உள்ளபடி அனைத்தையும் கேட்பிக்க வேணும்' என்றான். அப்போது வேதவ்யாஸர் தம்முடைய சிஷ்யனும் த்ருதராஷ்ட்ர ஸாரதியுமான ஸஞ்ஜயனை யழைத்து யுத்தவிஷயத்தில் அவன் ஸர்வஜ்ஞனும்படி அநுக்ரஹம் செய்து, 'ஆதியோடந்தமாக யுத்த விருத்தாந்தங்கள் முழுவதையும் த்ருதராஷ்ட்ரனுக்கு நீ சொல்லக்கடவாய்' என்று நியமித்து (வியாஸர்) தம் இருப்பிடம் சென்று சேர்ந்தார். பிறகு ஸஞ்ஜயன் யுத்தரங்கத்தில் வந்து, அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தருளாநின்ற ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் முகாரவிந்தத்தில் நின்றும் கீதாம்ருதத்தை ஸாக்ஷாத்தாக ச்ரவணம்பண்ணி வியாஸருடைய அநுக்ரஹத்தினால் கிடைத்திருந்த திவ்யஜ்ஞானத்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தாலே விவித விசித்ர யுத்தவிருத்தாந்தங்களெல்லாவற்றையும்தனக்கோர் அபாய
மின்றிக்கே கரதலாமலகமாகக் கண்டுணர்ந்து அந்த யுத்தரங்கத்தில் நின்றும்
போய் த்ருதராஷ்ட்ரனிடம் சேர்ந்து யுத்தத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்
டிருந்த அவனுக்கு யுத்தச்செய்திகளை முதலே பிடித்துச் சொன்னான். இந்த
ஸம்வாதம் கீதாசாஸ்த்ரமாக உலகில் பரவி அனைவரையும் புனிதமாக்கிக்
கொண்டு வருகின்றது. ஆக இரண்டு ஸம்வாதங்கள் கொண்டது கீதாசாஸ்த்ரம்.

10. மாயாவாதிகளின் மாயாவாத பரிசீலனம்

ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா வாஸ்தவமாகத் திருவவதாரம் செய்து, வாஸ்தவ
மான அர்த்தங்களை நிரப்பி, வாஸ்தவமாக கீதாசாஸ்த்ரத்தை யவதரிப்பித்
தருளினதாக ஸ்ரீபகவத் ராமாநுஜ னடியார்களான நாம் நம்பியிருக்கிறோம்.
ஸ்வாமியிட்டருளிள கீதாபாஷ்யத்தின் அவதாரிகையிலும் மேலே பல ச்லோகங்
களின் பாஷ்யத்திலும் இந்த நம்பிக்கையே நமக்கு ஊர்ஜிதமாக்கப்படுகின்றது.
ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளியற்றிய பாஷ்யத்தின் ப்ரக்ரியை இதற்கு
மாறாகவுள்ளது. அவர் தம்முடைய பாஷ்ய அவதாரிகையில் "பகவாந்.......
ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ ச லோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே"
என்றெழுதிவைத்திருக்கக் காண்கிறோம். இதனால், பகவான் உண்மையில்
தேஹபரிக்ரஹம் செய்தருளவில்லை யென்றும், உண்மையாக அவதாரம்
செய்தருளவில்லையென்றும், மாயையினால் ஏதோ ஜனங்களை மயக்கிக் காட்டின
தாகவும் சங்கராசாரியர் அபிப்பிராயப்படுவதாக விளங்குகின்றது. இப்படி
இவர் அபிப்பிராயப்படுவதற்கு ஒரு காரணபாஸ முண்டு; அதாவதென்னென்
னில்; மேலே நான்காமத்யாயத்திலே பகவான் தானே தன்னுடைய அவதாரத்
தைப்பற்றிப் பேசிவருகையில் (4—6) "ஆத்ம மாயயா ஸம்பவாமி" என்றுள்ளது.
இதற்கு உண்மையான பொருள் எதுவோ அது பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில்
ப்ரமாண ப்ரதர்சந புரஸ்ஸரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. வைதிககிகண்டு
வையும் அதையநுஸரித்த அபியுக்த ப்ரயோகத்தையும் காட்டி ஸங்கல்பரூப
ஜ்ஞானமே இங்கு மாயாசப்தார்த்த மென்று ஸ்வாமி நிர்ணயித்திருக்கிறார்.
இதுதான் மஹர்ஷிகளின் அபிப்ராயத்திற்கு மிகவுமிணங்கிய ப்ராமாணிகமான
பொருள். ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (6—5—84) *இச்சாக்ருஹீதாபிமதோரு
தேஹ:* என்று, மாயாசப்தஸ்தானத்தில் இச்சாசப்தத்தை நிஸ்ஸந்தேஹமாக
இட்டு, பகவான் தன்னுடைய இச்சையினாலே தனக்கு அபிமதமான பல திவ்ய
மங்கல விக்ரஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு அவதரிப்பதாகச் சொல்லப்
பட்டுள்ளது. இங்கு சங்கராசார்யர் "ஸம்பவாமி—தேஹவாநிவ பவாமி; ஜாத
இவ; ஆத்மநோ மாயயா; நபரமார்த்தத:; லோகவத்" என்று எழுதியுள்ளார்.
கானலானது தன்னிடத்தில் தண்ணீர் இல்லாமலிருக்கச் செய்தேயும் அது
இருப்பதுபோல் காட்டுகிறதல்லவா? அப்படியே பகவானும் தான் உண்மை
யில் தேஹபரிக்ரஹம் பண்ணுதவனாகையாலே தன்னிடத்தில் தேஹமில்லா
திருக்கச் செய்தேயும் இருப்பதுபோல் மாயையினால் காட்டிக் கொண்டு
நிற்கிறான் என்பது சங்கராசார்யருடைய அபிப்ராயம். மாயா என்னுஞ் சொல்
லுக்கு பொய்யென்பதே இவர் கொண்ட பொருளாகும். அந்த நாலாவது
அத்யாயத்திலேயே மேல் ஒன்பதாவது ச்லோகத்தில் "ஜந்ம கர்ம ச மே
திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:, த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி
மாமேதி ஸோர்ஜுந" என்பதில் பகவான் தானே தன்னுடைய அவதாரத்தை
யும் அவதார சேஷ்டிதத்தையும் ஸத்யமாக எவன் அறிகிறானோ அவன் வர்த்த
மாந தேஹத்தை விட்டொழித்து மறுபிறவியடையாமல் தன்னையே யடைவ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தாகச் சொல்லியிருக்கின்றான். 'மே ஜந்ம கர்ம ச ய: தத்த்வத: வேத்தி' என்றிருப் பதை நன்கு விமர்சிக்க வேணும். .... (10)

11. மாயாவாத பரிசீலனத்தில் சுருதியின் விளக்கம்

ப்ராமாணிகர்கள் இங்கு மத்யஸ்த நிலையில் நின்று ஒன்று குறிக்கொள்ள வேண்டும். தைத்திரிய யஜுர்ப்ராஹ்மணத்தில் காடக ச்ருதியில் மூன்றாம் ப்ரச்னத்தில் "யாவந்த: பாம்ஸவோ பூமே:, ஸங்க்யாதா தேவமாயயா" என்று ஓதப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள மண் துகள்களெல்லாம் தேவர்களின் மாயையினால் கணக்கிடப் பெற்றவையாக இதில் சொல்லப்படுகிறது. இங்கு மாயையென்பதற்குப் பிறர் கூறும் பொருள் பொருந்தமாட்டாதென்பது வெளிப் படை. பூமியிலுள்ள மண் துகள்கள் மனிதர்களின் ஞானத்தினால் கணக்கிட முடியாதவையாயினும் தேவர்களின் ஞானத்தினால் கணக்கிடக்கூடியவையே யாதலால் இங்கு 'தேவமாயயா" என்றதற்கு 'தேவர்களின் ஞானத்தாலே' என்பதுதான் பொருளென்று யாவரும் நிராக்ஷேபமாக இசையத்தக்கதாகும். வித்யாரண்யர் முதலான வேதபாஷ்யகாரர்களும் இப்படித்தான் இங்குப் பொருள் வரைந்துள்ளார்கள். ஆகவே (மாயா) என்பதற்கு 'மித்யா' என்று பொருள் கொள்வது பொருத்தமற்றதென்று தெளியக்கடவது. அஸுரராக்ஷ ஸாதிகள் செய்கிற செயல்களை மாயையென்று சொல்லுவதுண்டு. அங்கும் மித்யா என்கிற அர்த்தம் கிடையாது. ஆச்சர்யகரம் என்பதுபற்றியே அங்கு மாயாசப்த ப்ரயோகம் பண்ணுவது. பிள்ளை லோகாசார்யர் தத்வத்ர யத்தில் அசித் ப்ரகரணத்தில் (10) "மாயையென்கிறது விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே" என்றருளிச் செய்தவிடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "அஸுரராக்ஷஸாதி க்ரியைகளை ஆச்சர்யகரத்வத்தைப் பற்ற மாயாசப்தத்தாலே சொல்லுகிறாப்போலே இத்தையும் [ப்ரக்ருதியையும்] மாயையென்கிறது விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகைபாலே. அதாவது, ஒன்று போலொன்றன்றிக்கே விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜனிப்பிக்கை" என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம். "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா" (7—14) என்ற கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி வெகு விசதமாக நிரூபித்தருளுகிறார். மாயாசப்தத்தின் உண்மைப் பொருளையுணராதே தவறான பொருளைக் கொண்டதன் பயனாகவே மாயாவாதி களின் வாதங்கள் மிகமிக வளர்ந்து விட்டன. .... (11)

12. கீதாசாஸ்த்ரமும் பொய்யா? நமது உஜ்ஜீவனமும் பொய்யா?

கண்ணபிரான் அவதரித்ததும் பொய், தேஹபரிக்ரஹம் பண்ணினதும் பொய் என்று சொல்லும் பக்ஷத்தில் கீதாசாஸ்த்ரம் அவதரித்ததும் பொய் யென்றே சொன்னதாகத் தேறிவிடும். பொய்யான சாஸ்த்ரம் நம்முடைய உஜ்ஜீவனத்திற்கு எப்படி ஸாதனமாகும். வேங்கடாத்வரி இயற்றிய விச்வ குணாதர்சத்தில் வேதாந்திவர்ணனத்தில் "த்ருச்யம் மித்த்யா த்ருஷ்டிகர்த்தா ச மித்த்யா" இத்யாதியான வொரு ச்லோகம் வெகு அற்புதமாகக் காண்கிறது. 'பார்க்கப்படுகிற பொருள்களெல்லாம் பொய், பார்க்கிறவனும் பொய், அவித் யையாகிற தோஷமும் பொய் என்று கொள்ளுகிற இந்த மாயாவாதிகள், இவற்றுக்கு ஆச்ரய பூதமான ப்ரஹ்மமும் பொய்யென்று முடித்திருக்கலாமே; ஏன் அதை மாத்திரம் ஸத்யமென்று கொண்டார்களோ தெரியவில்லை—என் பதே அந்த ச்லோகத்தின் கருத்து. 'பொய்யன் சொல்லுகிற வார்த்தைகளும் பொய்யாகுமாகையாலே தம்மைப் பொய்யரென்று நிலைநாட்டிக் கொள்ளுகின்ற

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மாயாவாதிகள் சொல்லுமதெல்லாம் பொய்யே என்பது இவர்கள் தம்மாலேயே ஸ்தாபிக்கப்பட்டுத் தீருவதனுல் இவர்களைக் கண்டிக்க நாம் சிறிதும் ப்ரயாஸம் கொள்ள வேண்டாவென்றும் ஒருரஸிக பண்டிதர் எழுதிவைத்திருக்கிருர். (12)

13. மாயாவாதிகளின் மாயாவாதத்தை கீதை ஸஹியாது

கீதையின் இரண்டாமத்யாயத்தின் பன்னிரண்டாவது ச்லோகத்திலிருந்தே சாஸ்த்ராரம்பமென்று சொல்லலாம். அதற்குக் கீழுள்ள பாகங்களெல்லாம் அவதாரிகையாக நிற்கிறது. அந்த பன்னிரண்டாவது ச்லோகம் எவ்விதமாகவுள்ளதென்று பார்க்கவேணும். "ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே (நரா) ஜநாதிபா:, நசைவ நபவிஷ்யாமஸ்ஸர்வே வயமத:பரம்" என்பதே அந்த ச்லோகம். இதன் பொருள் யாதெனில், ஸர்வேச்வரனுகிய நானும் இதற்கு முன்கழிந்த அநாதிகாலத்திலும் இருந்தவனே; அர்ஜுநா! நீயும் இந்த அரசர்களுமான க்ஷேத்ரஜ்ஞர்களுங்கூட முன்பும் இருந்தவர்களே. முன்பு இருந்தது மாத்திரமேயன்றிக்கே மேலுள்ள காலமுமெல்லாம் நானும் நீங்களும் இருக்கப்போகிறவர்களே என்பதாம். "ஸர்வேச்வரனுய் பரமாத்மாவான நான் நித்யன் என்பதில் எப்படி ஸந்தேஹமில்லையோ, அப்படியே க்ஷேத்ரஜ்ஞர்களாய் ஜீவாத்மாக்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லை"யென்று பகவான்தானே சோதிவாய்திறந்து பணித்துளன். இதனுல் ஸர்வேச்வரனுன பகவானிற்காட்டிலும் ஜீவாத்மாக்களுக்குண்டான பேதமும், அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரமுண்டான பேதமும் பாரமார்த்திகமென்று பகவான் தானே வ்யக்தமாகத் தெரிவித்ததாய்த் தேறுகிறது. இந்த ச்லோகம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அடிப்படையாகவுள்ளதென்று நன்குணரலாம். நமது பாஷ்யகாரர்-இந்த ச்லோகத்திற்கு இட்டருளியிருக்கின்ற பாஷ்யம் மிகவும்விபுலமாகவுள்ளது. கீழே அர்ஜுனன் (2—7) தத்துவப்பொருள் தெரியாமையினுலே தான் தளும்பியிருப்பதாகவும் தன்னுடைய கலக்கம் தீர தத்துவார்த்தத்தை அறுதியிட்டு அருளிச் செய்யவேணுமென்றும் சொல்லித் திருவடிகளில் விழுந்து யாசித்திருக்கிருன். அப்படிப்பட்டவனுக்கு தத்வோபதேசம் செய்யவே கீதா சாஸ்த்ரம் அவதரித்தது. கீதாசார்யன், கலங்கினவனுக்குச் சொல்லும்போது தெளிவான பொருளைச் சொல்லுவனே யல்லது கலங்கின பொருளையே சொல்ல மாட்டானன்ருே. ஆகவே இந்த சாஸ்த்ரத்தில் கூறப்படும் பொருள்கள் யாவும் ஸர்வாத்மநா பாரமார்த்திகமென்றே வைதிகர்கள் கொள்ளக்கடவர்கள். அதிலும் ஆரம்ப ச்லோகமான விதனில் கூறப்படும் விஷயம் உபநிஷதாதிகளில் வடிக்கட்டின பொருளாகவே யிருக்கத்தகும். இதில் ஜீவாத்ம பரமாத்மபேதம் முதலியன தெரிவிக்கப்படுமவை அபாரமார்த்திகமாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லை. ஆக இந்த நிரூபணங்களினுல் ஸ்வாமி யெம்பெருமானுர் உபநிஷத்து, ப்ரஹ்மஸூத்ரம், கீதை முதலானவற்றின் பொருள்களை ஆர்ஜவத்துடன் அறிந்து அறுதியிடுபவர் என்பது நிஷ்பக்ஷபாதர்களுக்குக் கையிலங்கு நெல்லிக்கனியாகும். இப்பெருமை பொலியவே யதிராஜஸப்ததியில் "யதா பூதஸ்வார்த்தா யதிந்ருபதிஸூக்திர் விஜயதே" என்று வேதாந்தவாசிரியரால் மிகப் பொருத்தமாகப் பேசப்பட்டது. .... (13)

14. கீதாசாஸ்த்ரம் விசிஷ்டாத்வைதிகளுக்கே

ந த்வேவாஹம் ஜாது நாஸம் என்கிற ச்லோகத்திலே ஜீவாத்ம பரமாத்ம பேதமும் ஜீவர்களுக்குப் பரஸ்பர பேதமுமாகிற விவை காட்டப்பட்டதுபோல அதற்கடுத்த (13ஆம்) ச்லோகத்தில் "தேஹிநோஸ்மிந் யதா

எழு—2

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தேஹே" இத்யாதியில் ப்ரக்ருத்யாத்ம விவேகமும் காட்டப்பட்டது. அசேதநம் வேறு, சேதநன் வேறு என்கிற பகுத்துணர்வே ப்ராக்ருத்யாத்ம விவேகமெனப் படும். நிர்விசேஷ சிந்மாத்ரமான ப்ரஹ்மமொன்று தவிர வேறு சேதநா சேதநங்கள் உண்மையில் கிடையா என்கிறவாதம் இங்கு நிராகரிக்கப்பட்டதாகிறது. "அந்தவந்த இமே தேஹா:". "நஜாயதே ம்ரியதே வா கதாசித்" "வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய" இத்யாதிகளான ச்லோகங்களினால் ஆத்மா நித்யனென்றும், தேஹம் அநித்யமென்றும் பரக்கச் சொல்லுகிற முகத்தாலும் சேதநா சேதநங்களின் ஸத்பாவம் பாரமார்த்திகமாகவே மூதலிக்கப்பட்டதாகிறது. ஆக, கீதாசாஸ்த்ரம் விசிஷ்டாத்வைதிகளுக்கே நிதியானதென்றும் மற்றையோர்க்கு இதுகொண்டு பணியில்லையென்றும் சொல்லிற்றாயிற்று. (14)

15. "த்ரைகுண்யவிஷயாவேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந"

[த்ரைகுண்யவிஷயாவேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந!] (கீதை—2·45). இங்கு சங்கராசார்யருடையபாஷ்யத்தில், த்ரைகுண்யமாவது ஸம்ஸாரம் என்றும், 'நிஸ்த்ரைகுண்யோ பவ' என்பதற்கு (நிஷ்காமோ பவ) என்று பொருளென்று மெழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தில் மிக விளக்கமும் விரிவுமுள்ளது. ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற முக்குணங்கள் மலிந்த புருஷர்கள் இங்கு த்ரைகுண்ய சப்தத்தினால் சொல்லப்படுகிறார்கள். அன்னவர்களைப் பற்றியவை வேதங்கள் என்றபடி. வேதங்களானவை கேவலம் ஸாத்விகர்களுக்கே வழிகாட்டுகின்றன வென்றில்லை. உலகிலுள்ள சேதநர்கள் சிலர் ஸாத்விகர்களாயும் பலர் ராஜஸர்களாயும் தாமஸர்களாயு மிருக்கக் காண்கிறோம்; வேதங்கள் எல்லார்க்கும் வழிகாட்டியாக வேண்டும். பலசரக்குக்கடைகளில் சர்க்கரை வெல்லம் குங்குமப்பூ கடுகு மிளகு சீரகம் முதலிய எல்லாப் பொருள்களும் (நேர்வாளமுட்பட) விற்கப்படுவதுபோல், வேதங்கள் முமுக்ஷுக்களுக்கும் வழிகாட்டுகின்றன; புபுக்ஷுக்களுக்கும் வழிகாட்டுகின்றன; பரஹிம்ஸைக்குரிய உபாயங்களையும் காட்டுகின்றன. ஆனால் வேதம் காட்டுகின்றவற்றை யெல்லாம் நாம் கொள்ளவேணுமென்பது கிடையாது. கடையில் விற்கப்படுகிற விஷத்தையுமா நாம் வாங்கிக்கொள்ளுகிறோம்; இல்லையே. அது போல, ராஜஸர்களுக்கும் தாமஸர்களுக்கும் வேதம் காட்டுகிற வழிகளை நாம் பற்றலாகாது. [நிஸ்த்ரைகுண்யோ பவ அர்ஜுந!] *என்கிற மூலத்தை நோக்கும் போது 'ஸத்வகுணமுட்பட ஒரு குணத்தையும் நீ கைக்கொள்ளாதே' என்று கண்ணபிரா னருளிச்செய்வதாகத் தோன்றும். "முக்குணத் திரண்டவை யகற்றி, ஒன்றினி லொன்றி நின்று" என்று திருமங்கையாழ்வார் திருவெழுகூற்றிருக்கையிலருளிச் செய்தபடியே ரஜஸ்தமோ குணங்களைவிட்டு ஸத்வ குணமொன்றிலேயே ஊன்றியிருக்கக்கடவாய் என்று ஸ்வாமி பாஷ்யமருளிச் செய்துள்ளார். இதற்கு மூலத்தில் ஆதாரமில்லைபோல் தோன்றும். மேலே உத்தரார்த்தத்தில்* 'நித்ய ஸத்வஸ்த:' *என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதற்குச்சேரவே ஸ்வாமி உரைத்தருளினரென்று உணர்க. ஆனாலும்* 'நிஸ்த்ரைகுண்ய:' *என்பதற்கு முக்குணங்களு மில்லாதவனென்றுதானே பொருள்படும்; ஸத்வகுண ப்ரசுரன் என்று பொருள்பட வழியுண்டோவென்று கேள்வி தோன்றும். கேண்மின். (நிஸ்த்ரைகுண்ய:) என்பதற்கு மூன்று குணங்களும் பிசிறியிருக்கப் பெறுதவன் என்பதே அக்ஷரலப்யமான பொருள். "அந்யோந்ய ஸங்கீர்ண குணத்ரயப்ரசுரோ நபவ" என்று ஸ்வாமியருளிச்செய்தது பொருத்தமானதே. வேதங்களில் ராஜஸதாமஸர்களுக்குக் காட்டியுள்ள உபாயங்களில் கண்வையாதே ஸாத்விகர்களுக்குக் காட்டியுள்ள உபாயங்களில்மட்டுமே நீ கண்வைக்கக் கடவாய் என்றதாகத் தேறுகின்றது. .... (15)*

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

16. நாமாக ஒரு பலனையும் விரும்பலாகாது

கர்மண்யேவாதிகாரஸ் தே மா பலேஷு கதாசந (கீதை 2—47) நித்யம் நைமித்திகம் காம்யம் என்று சொல்லப்படுகிற கருமங்களைச் செய்வதில் மட்டும் நீ அதிகரிக்கலாமே யல்லது அவற்றின் பலனில் அதிகரிக்கலாகாது என்பதாக இதற்குப் பொருள். பலனை விரும்பக்கூடாதென்று சொல்லப்படுகிறதாவென்று இங்கு விமர்சிக்க நேர்கின்றது. “ப்ரயோஜந மநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே” என்று, பலனை விரும்பாமல் மூடன்கூட ஒரு காரியத்தில் கைவைக்க மாட்டானென்று சாஸ்த்ரமே சொல்லுகையாலே பலனை விரும்பக்கூடாதென்கை பொருந்தாது. பலன் கிடைத்தால் அதை யநுபவியாமல் விட்டுவிடுவது புருஷதந்த்ரமன்றே. ஸுகமோ துக்கமோ எது நேர்ந்தாலும் அநுபவித்துக்கொண்டுதானே யிருக்கிறோம். அநுபவிப்பதும் விட்டிடுவதும் நம்மிஷ்டமன்றே. ஆகவே, பலன் கிடைத்தாலும் அதனை யநுபவிக்கலாகாதென்று சொல்லப்படுவதாகக் கொள்வதற்கும் ஔசித்யமில்லை. பின்னை யாது பொருளென்னில்; செய்கிற காரியங்களுக்குப் பலன் கிடைத்தே தீரும்; பலனை நீ கோலாதே. உன்னுடைய அற்ப புத்தியினால் நீ கோலுவாயாகில் க்ஷுத்ரபலனுக்கு மேற்பட உத்தம பலனைக் கோலுவதற்கு உனக்குத் தெரியாது. அந்தப் பொறுப்பை என்னிடமே விட்டுவிடுவாயாகில் என் கருத்தால் உத்தமமான பலனே உனக்குக் கொடுக்கப்படும்—என்று இங்ஙனம் திருவுள்ளம்பற்றியே கீதாசார்யன் “மா பலேஷு கதாசந” என்றருளிச் செய்ததாகக் கொள்க. (16)

17. நாம் காண்பனவும் நல்லோர் காண்பனவும்

“யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ, யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:” (2-69) என்னுமிந்த கீதாச்லோகம் புதிர்போலுள்ளது. ஸர்வப்ராணிகளுக்கும் எது இரவோ அவ்விரவில் ஜிதேந்த்ரியனானவன் விழித்துக்கொண்டிருக்கிறான்; ஸர்வப்ராணிகளும் கண்விழித்துக்கொண்டிருக்கும்படியான பகலானது ஜிதேந்த்ரியனுக்கு இரவாகிறது, என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. நாம் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாமல் வெறுத்திருக்கும் விஷயத்தை ஜிதேந்த்ரியர்கள் விரும்பிப் பார்க்கிறார்களென்றும், நாம் விரும்பிப் பார்க்கும் விஷயங்களை அவர்கள் காணகில்லாமல் வெறுக்கிறார்களென்றும் சொல்லப்பட்டதாகிறது. பகவத் பாகவத விஷயங்களை நாம் விரும்பிப் பாராமல் வெறுப்புக் கொண்டிருக்கிறோம்; அவ்விஷயங்களையே ஸாதுக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். லௌகிக விநோதங்களை நாம் விரும்பிப் பார்க்கிறோம்; அவற்றைக் காணக் கண்கூசியிருக்கிறார்கள் ஸாதுக்கள். எனவே, நம்முடையபகல் ஸாதுக்களுக்கு இரவாகிறது; ஸாதுக்களின்பகல் நமக்கு இரவாகிறது. ஸ்வரூபாநுரூபங்களான விஷயங்களில் கண்ணோட்டம் செலுத்தாமல் ஸ்வரூபநாசகங்களான விஷயங்களிலேயே நாம் கண்ணோட்டம் செலுத்தியிருப்பது வர்ஜிக்கத் தகுந்தது என்னுமிடம் இதனால் சிக்ஷிதமாகிறதென்க. (17)

18. நெஞ்சையுருக்கும் ஸ்ரீஸூக்தியதிசயம்

கீதாபாஷ்யத்திலோ ஸ்ரீபாஷ்யத்திலோ ஸ்வாமியருளிச்செய்யும் ஸ்ரீஸூக்திகளில் நெஞ்சையுருக்கும்படியானவொரு அதிசயம் அடியேனுடைய அநுபவத்தில் காண்கிறது. இவ்வதிசயம் வேறு எந்த பாஷ்யத்திலும் ஈஷத்தும் காணமுடியாது. அஃது என்னென்னில், மூலத்தில் பரமபுருஷனுடைய ப்ரஸ்தாவம் வருமிடங்களில் பெரும்பாலும் அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிப்பெருமை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

களை விளக்கிப் பல விசேஷணங்களை யடுக்கடுக்காக அருளிச் செய்தாலொழிய ஸ்வாமிக்குத் தரிப்பு உண்டாவதில்லை. இங்கு ஒரிடமெடுத்துக் காட்டுகிறேன்.

பகவத்கீதையில் ஒன்பதாமத்யாயத்தில் முடிவு ச்லோகம் *மந்மநா பவ மத்பக்த:* என்பது. இதில் (மந்மநா பவ) என்பதற்கு என்னிடத்தில் மனத்தை வைத்திடு என்று பொருள். இப்பொருள் யாவர்க்கும் தெரிந்ததே, எளிதில் தெரியக்கூடியதே என்கிற கருத்தினால் மத்வபாஷ்யகாரர் அடியோடு அர்த்தம் செய்யவேயில்லை. சங்கராசாரியர் "மயி வாஸுதேவே மந: யஸ்ய தவ ஸ த்வம் மந்மநா பவ" என்று உரைத்தார். என்னிடத்தில் என்பதற்கு வாஸுதேவனாகிய என்னிடத்தில் என்று அர்த்தம் என்பதாக விவரித்தாராயிற்று. இனி ஸ்வாமி பாஷ்யத்தை யெடுத்துக் கொள்வோம்; அவ்விடத்துப் பங்க்திகளை ஸேவிக்கும்போது கல்நெஞ்சினனுக்கும் கண்ணீர் பெருகும்;

> "மந்மநா பவ-மயி ஸர்வேச்வரே நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநே ஸர்வஜ்ஞே ஸத்யஸங்கல்பே நிகிலஜகதேககாரணே பரஸ்மிந் ப்ரஹ்மணி புருஷோத்தமே புண்டரீகதலாமலாயதேக்ஷணே ஸ்வச்சநீலஜீமூத ஸங்காசே யுகபதுதித திநகரஸஹஸ்ரஸத்ருசதேஜஸி லாவண்யாம்ருத மஹோததௌ உதாரபீவரசதுர்பாஹௌ அத்யுஜ்ஜ்வல பீதாம்பரே அமலகிரீட மகரகுண்டல ஹாரகேயூரகடகபூஷிதே அபாரகாருண்ய ஸௌசீல்ய ஸௌந்தர்ய மாதுர்யகாம்பீர்யௌதார்யவாத்ஸல்யஜலதௌ அநாலோசிதவிசேஷாசேஷ லோகசரண்யே ஸர்வஸ்வாமிநி தைலதாராவத் அவிச்சேதேந நிவிஷ்டமநா பவ"

,என்கிற இவ்வளவும் அதிகம்பீரமாக அவதரித்துள்ள ஸ்வாமி ஸூக்தியாகும்.

இந்த மஹாவாக்யத்தில் எம்பெருமானைப்பற்றிய விசேஷணங்கள் பதினெட்டு உள்ளன. இத்தனை விசேஷணங்கள் இங்கு அவசியமோவென்று சிலர் நினைக்கக்கூடும். உண்மையில் அவச்யமன்றென்றும் சொல்லலாம். விஸ்தரத்தில் ருசியில்லாதவரான ஸ்வாமி இவ்வளவு ஏன் அருளிச்செய்தாரென்று ஆலோசிக்க வேண்டும். ஸ்ரீவைஷ்ணவர்களிலும் பலர் இதற்கு நிதானமறியாரென்றே அடியேன் எண்ணுகிறேன். ஸ்வாமி யெம்பெருமானார் *பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட வெங்களி ராமானுசமுனி வேழம்* என்றும், *கலிமிக்க செந்நெற்கழனிக் குறையல் கலைப்பெருமானொலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமானுசன்* என்றும் நூற்றந்தாதியில் அமுதனார் அருளிச்செய்தபடியே ஆழ்வாரருளிச் செயற்கடலில் அநவரதம் அவகாஹித்தவராதலால் அதன் பலனாகவே இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை ஸ்வாமி பலகாலும் அருளிச்செய்ய ப்ராப்தமாகிறது. கண்ணபிரான் தன்னிடத்தில் பக்தி பண்ணும்படி விதிக்கிற இவ்விடத்தில் எம்பெருமான்றன்னுடைய இத்தனை விசேஷங்களை யெடுத்துக் காட்டாவிடில் எங்ஙனே பக்தியுண்டாகும். அவனுடைய ஸ்வரூப வைலக்ஷண்யத்தையும் திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தையும் திவ்ய பூஷணாதி வைசிஷ்ட்யத்தையும் திருக்கல்யாண குண பௌஷ்கல்யத்தையும் எடுத்துக் காட்டுவதானது கண்ணபிரான் தானே இவற்றை யெடுத்துரைத்து இவற்றிலே யீடுபடும்படி சொல்லுவதாகவன்றோ வுள்ளது. இதர பாஷ்யகாரர்களுக்கு திவ்யப்ரபந்தாம்ருதஸாகராவகாஹன ஸம்பத்து சிறிதுமில்லாமையினாலேயே அவர்கள் இப்படிப்பட்ட விசேஷணங்களை ஒரிடத்தில்கூட எழுதிவைக்க ப்ரஸக்தியில்லையாயிற்று. ... (18)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

19. அங்ஙனே மற்றோரிடமும் காண்க

ஸ்ரீபாஷ்யத்திலும் ஓரிடம் காட்டுகிறோம் காண்மின். அதில் கடைசியான ஸூத்ரம் *அநாவ்ருத்திச் சப்தாத் அநாவ்ருத்திச் சப்தாத்* என்பது. இங்கு மூலத்தில் பரமபுருஷனுடைய ப்ரஸ்தாவமேயில்லை. பரமபுருஷனைச் சென்றடைந்த முக்தர்கள் மீண்டும் இந்நிலத்தில் திரும்பிவருவது உண்டா இல்லையா? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக இந்த ஸூத்ரம் அவதரித்துள்ளது. 'புநராவ்ருத்தி கிடையாதென்று சாஸ்த்ரம் சொல்லியிருக்கையாலே அது இல்லை' என்றிவ்வளவே ஸூத்ரம் சொல்லி நின்றது. இதை விவரிக்குமிடத்து ஸ்வாமி யெம்பெருமானார் "பகவானொருவ னுளனென்று எந்த சாஸ்த்ரம் அறிவிக்கின்றதோ அந்த சாஸ்த்ரமே பகவானை அடைந்தவர்க்குப் புநராவ்ருத்தியில்லை யென்றும் தெரிவிக்கின்றது" என்றருளிச் செய்கிறார். இங்கு ["யதா பரமபுருஷ: அஸ்தீதி சப்தாத் அவகம்யதே"] என்றிவ்வளவே அருளிச்செய்தால் போதுமானது. ஆயினும், ஸ்வாமி இங்கே அந்த பரமபுருஷனுக்கு இட்டருளுகிற விசேஷணங்களைப் பாரீர் :—

'யதா நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந: ஜகஜ்ஜந்மாதிகாரணம் ஸமஸ்த வஸ்துவிலக்ஷண: ஸர்வஜ்ஞ: ஸத்யஸங்கல்ப: ஆச்ரித வாத்ஸல்யைகஜலதி: நிரஸ்த ஸமாப்யதிகஸம்பாவந: பரமகாருணிக: பரப்ரஹ்மாபிதாந: பரமபுருஷ:......."

என்று இவ்வளவு விசேஷங்களை யருளிச்செய்கிறார்.

இங்ஙனே ஓரிடமன்று இரண்டிடமன்று; பலபலவிடங்கள் காணலாம். மற்ற பாஷ்யகாரர்களுக்கு இப்படிப்பட்ட வாக்விந்யாஸம் பண்ணத்தெரியாமையில்லை. பகவானிடத்தில் பக்தியில்லாமையுமில்லை. ஆயினும் அவர்களுடைய கையிலிருந்து இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளில் ஏகதேசமும் அவதரிக்கக் காண்கின்றிலோம். *செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரையடிக்கள் செம்பொன் திருவுடம்பே* என்றும் *கைவண்ணம் தாமரை வாய் கமலம்போலும் கண்ணிணையுமரவிந்த மடியுமஃதே* என்றும் *செக்கமலத்தலர் போலும் கண்கைகால் செங்கனிவாய், அக்கமலத்திலைபோலுந் திருமேனி யடிகளுக்கே* என்றும் வாய்வெருவுகின்ற ஆழ்வார்களின் ஈரச்சொற்களிலே ஆழங்காற்பட்டிருக்கு மாசிரியர்கட்கு இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திவிந்யாஸ வைபவம் வாய்ப்பது வியப்பன்றே. .... (19)

20. கீதாசார்யன் உத்தேசித்த ஸாதுக்கள்

பகவத்கீதையில் *பரித்ராணாய ஸாதூநாம்* என்றவிடத்திற்கு பாஷ்யமருளிச் செய்யா நின்ற ஸ்வாமி, ஸாதுக்கள் யாவர்? என்பதை விவரிக்குமிடத்து ஆழ்வார்களே ஸாதுக்களென்று ஸுஸ்பஷ்ட சப்தங்களால் விளக்கியருளினார். *காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்து, *ஒருபக லாயிரமூழியாலோவென்று தளர்ந்து, *நினைந்துநைந்துள் கரைந்துருகி நிற்பவர்களே ஸாதுக்களென்று அங்கு அருளிச்செய்திருக்கிற பரமபோக்ய பங்க்திகளை திவ்யஸூக்தி ரஸிகர்கள் சிந்தனை செய்யவேணும். அந்த விசேஷணங்களுக்கு உரியவர்கள் ஆழ்வார்கள் தவிர மற்று யாருமிலர். அவர்களைப் பரித்ராணம் செய்ய அவதாரமென்றால் என்ன கருத்தென்னில்; அவர்களுக்கு வேண்டியது திவ்யகுணாநுபவம். அந்த குணங்கள் வெளிப்பட்டது அவதாரங்களிலே. ஆகவே அவதாரங்கள் குணலோலுபர்களான ஆழ்வார்களுக்காக வென்னத்தட்டில்லை.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

21. ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தஜிஜ்ஞாஸை

ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தில் காணும் விலையுயர்ந்த ரத்னங்களில் "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே" என்கிற இது வொரு ரத்னம். (70-ஆம் சூர்ணை இது). அடைகிறவனும் எம்பெருமானே; அடைவிப்பவனும் எம்பெருமானே, அடைந்ததற்குத் திருவுள்ள முகப்பவனும் எம்பெருமானே என்கிறது இந்த சூர்ணையில். தைத்திரீயோபநிஷத்தில் *ப்ரஹ்மவித் ஆப்நோதி பரம்* என்று ஓதப்பட்டிருக்கின்றது. ப்ரஹ்ம ஜ்ஞானி யானவன் பரம புருஷனை அடைகிறான் என்பது இதன்பொருள். இப்படிச் சொல்லியுள்ளவிடம் ஒன்றிரண்டல்ல; பலபலவுண்டு. எம்பெருமானைச் சென்று கிட்டவேணுமென்று மநோரதிப்பவனும், அதற்குரிய க்ருஷிகளைச் செய் பவனும், க்ருஷி பலித்து அவன் திருவடிகளைச் சென்று சேர்பவனும் சேதநனா யிருக்க, 'ப்ராப்தா அவனே' என்று சொல்லிவிடுவது சாஸ்த்ரார்த்தமாகுமோ வென்று சங்கையுண்டாகிறது. "ப்ராபகன் அவனே" என்பது பொருந்தும்; "ப்ராப்தாவும் ப்ராப்திக்குஉகப்பானும்அவனே" என்று சொல்லுவதில் ஔசித்ய மில்லையே யென்று ஜிஜ்ஞாஸை உண்டாகும். அவர்கள் தெளியும்படி கேண்மின்;

22. ஸ்ரீவசநபூஷணார்த்த தத்வவிசதீகரணம்

சேதநன்தான் பகவானை அடைகிறானே யொழிய பகவான் சேதநனை யடைகிறானல்லனே யென்று நினைப்பதில் தவறில்லை, இது யுக்தமே. ஆனால் ஆழ்ந்து பார்க்குமளவில் இந்த நினைவு ப்ரதிஷ்டிதமாகிறதாவென்று விமர்சிக்க வேணும். எம்பெருமான் நம்மைப் பெறுதற்காக எவ்வளவோ கிருஷிகளைப்பண் ணிப் போருகிறான். நாம் கரணகளேபர தரித்ரர்களாய் போகமோக்ஷசூந்யர் களாய் அசித்திற்காட்டில் வாசியற்றவர்களாய்க் கிடக்கிற தசையிலே நமக்குக் கரணகளேபரங்களையும் தந்து, ஞான விகாஸத்தையும் தந்து, இவ்வழியாலே நம்மை சிருஷ்டித்து நம்மை அங்கீகரிக்கைக்காகத்தான் அனேக அவதாரங்களை யும் செய்தருளி, அப்படி அவதரித்த விடங்களிலே ஆச்ரயிப்பதற்கு ருசியை விளைக்கவேண்டித் தன்னுடைய திருக்குணங்கள் திவ்யசேஷ்டிதங்கள் முதலான வற்றைப் பிரகாசிப்பித்து இவ்வழியாலே அவன் பண்ணின க்ருஷி பலித்த தையே நாம் நமது பற்றுதலாக நினைக்கிறோமத்தனை. ஆகவே அவனே ப்ராப்தா.

23. ப்ரக்ருதோபயுக்தமான அருளிச்செயல்

இவ்விஷயத்தை நம்மாழ்வாருடைய வொரு பாசுரம் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது: திருவாய்மொழியில் (8—8—3) *உணர்விலும்பரொருவனை அவன தருளாலுறல் பொருட்டு, என்னுணர்வினுள்ளேயிருத்தினேன்* என்னு மளவால் எம்பெருமானைத் தாம் ஸ்வீகரித்ததாகப் பேசி, உடனே *அதுவுமவனதின் னருளே* என்று, அந்த ஸ்வீகாரந்தானும் அவனுடைய நிர்ஹேதுக கிருபையி னாலே யுண்டானதென்று ஆழ்வாரருளிச் செய்கையாலே நாம் ஸ்வீகரித்ததாக நினைக்கிற ஸ்வீகாரமும் அவனுடைய க்ருஷியின் பலமென்றே கொள்ளவேணும் என்பது ஆழ்வார் திருவுள்ளமாகத் தேறுகின்றது. எம்பெருமான் ஸித்தோபாய மென்றும் ஸஹாயாந்தர நிரபேக்ஷனென்றும் சொல்லியிருக்கையாலே அந்த ஸித்தாந்தம் ஜீவிக்கவேண்டில் நாம் நினைக்கவேண்டிய நினைவு எப்படிப்பட்ட தாக இருக்கவேணுமென்பதை நம் ஆசாரியர்கள் காட்டியருளுகிறார்கள்— "இத்தையொழியவும் தானே கார்யஞ் செய்யுமென்று நினைக்கக் கடவன்" என்று. நாம் செய்ததாக நினைக்கப்படுகிற ஸ்வீகாரத்துக்கும் எம்பெருமான்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தானே க்ருஷி பண்ணுமவனுகையாலே, இந்த ஸ்வீகாரத்துக்காகவன்று அவன் நமக்குக் காரியஞ் செய்கிறது; இத்தை யொழியவும் இவ்வாத்மோஜ்ஜீவனத்தில் ப்ராவண்ய முடையனுன தானே நம்முடைய இஷ்டங்களைத் தருகையும் அநிஷ்டங்களைத் தவிர்க்கையுமாகிற காரியத்தைச் செய்தருள்வனென்று நினைக்கக் கடவன் முமுக்ஷுசேதநன் என்றபடி. .... (23)

24. பண்டை நாளில் பிறவி

நம்முடைய பூருவாசாரியர்கள் கம்பீரமாகச் சில ஸ்ரீஸூக்திகளையருளிச் செய்து வைக்கின்றனர். அவை ஸங்கேதச் சொற்களாக வழங்குகின்றன. அவற்றின் பொருள்கள் ஆங்காங்கு வியாக்கியானங்களினுல் தெரியவரும். அப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளில் சில காட்டி விவரிக்கிறோமிங்கு. "பண்டை நாளிற்பிறவி" என்பதுஸங்கேதமாய்வந்தபரமபோக்யமான ஸ்ரீஸூக்தி. ஆசார்ய ஹ்ருதயத்தில் (81) "பண்டைநாளில் பிறவி உண்ணுட்டுத்தேசிறே" என்று வருகிறது. திருவாய்மொழியில் ஒன்பதாம்பத்தில் இரண்டாம்பதிகம் *பண்டை நாளாலே நின் திருவருளும்* என்று தொடங்குவது. அதில் முதல் மூன்று பாசுரங்களில் வரிசையாக ஒரு விலக்ஷண விஷயம் சொல்லப்படுகிறது. முதற் பாட்டில் "நின்கோயில் சீய்த்துப் பல்படிகால் குடிகுடிவழிவந் தாட்செய்யுந் தொண்டர்" என்கிறது. இரண்டாம்பாட்டில் "உன் பொன்னடிக்கடவாதே வழிவருகின்றவடியர்" என்கிறது. மூன்றும் பாட்டில் "தொடர்ந்து குற்றேவல் செய்து தொல்லடிமை வழிவருந்தொண்டர்" என்கிறது. ஆத்மாவின் இயற்கை வடிவமான தாஸ்யத்திற்கு நேரே விரோதியான அஹங்காரம் குடிபுகாததாய், கைங்கரியத்திற்கு அநுரூபமான குடிப்பிறவி இவ்வளவு விசதமாக வேறு எந்த பதிகத்திலுங் காணப்படவில்லை. இச்சிறப்பைத் திருவுள்ளம்பற்றியே பூருவர்கள் "பண்டைநாளில் பிறவி" என்று ஒரு ஸங்கேத மிட்டனர். *பண்டை நாளாலே யென்கிற பதிகத்தில் சிறப்பித்துக் கூறப்பட்ட பிறவி என்றபடி.

25. திவ்யதேசங்களில் ஐந்து நகர்கள்

தென்னகர், நன்னகர், மாநகர், நீணகர், பெருநகர் என்று ஐந்து நகர்கள் ஆசார்யஹ்ருதயம் மூன்றும் ப்ரகரணத்தில் குறிக்கப்படுகின்றன. தென், நன், மா, நீள், பெரு என்று விசேஷணங்களில் பேதமொழிய, நகர் என்பதே ஐந்திடங்களிலும் விசேஷ்யம். மேலேகுறித்த விசேஷணங்கள் பொதுவாகச் சிறப்பையே தெரிவிக்கும். எவ்வூருக்குத் தென்னகரென்று பெயர்? எவ்வூருக்கு மாநகரென்று பெயர்?........என்று கேட்டால் பாசுரங்களின் உபஸ்திதியும் விசேஷாநுபவமுமில்லாதவர்கள் விடையிறுக்க முடியாது.

(1) மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றுன திருவல்லவாழென்னும் திருப்பதியைப்பற்றி நம்மாழ்வாரருளிச்செய்த *மானேய்நோக்குப் பதிகத்தில் ஈற்றுப் பாசுரத்தில் "ஆயிரத்துள்ளிவைபத்தும் திருவல்லவாழ்ச் சேமங்கொள் தென்னகர்மேல்" என்றருளிச்செய்திருக்கையாலே திருவல்லவாழ் தென்னகராம்.

(2) ஒப்பிலியப்பன் ஸன்னிதியென்கிற திருவிண்ணகர்ப்பதிக்கு இட்டருளின திருவாய்மொழியில் (6—3—2) *தெண்டிரைப்புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே* என்றருளிச் செய்திருக்கையாலே திருவிண்ணகர் நன்னகராம்.

(3) தென் திருப்பேரைத் திருப்பதிக்கு இட்டருளின *வெள்ளைச்சுரிசங்கு பதிகத்தில் *ஏர்வளவொண்கழனிப் பழனத் தென் திருப்பேரெயில் மாநகரே* என்றருளிச் செய்திருக்கையாலே தென் திருப்பேரை மாநகரெனப்படும்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

(4) திருவாறன் விளையென்னும் மலைநாட்டுத் திருப்பதிக்கு இட்டருளின *இன்பம் பயக்கவென்னும் பதிகத்தில் "திருவாறன்விளை யென்னும் நீணகர மதுவே" என்றருளிச் செய்திருக்கையாலே திருவாறன்விளை நீணகரென்பதாம்.

(5) சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான அப்பக்குடத்தான் ஸன்னிதிக்குத் திருமங்கையாழ்வாரிட்டருளின *கையிலங்காழி சங்கன்* என்னும் பதிகத்தில் *பெருவரை மதில்கள் சூழ்ந்த பெருநகர் அரவணைமேல்* என்றருளிச் செய்திருக்கையாலே அத்தலம் பெருநகராம். இவை சுவைமிக்க ஸங்கேதங்கள்.

26. உறையிலிடாதவர் திருமழிசைப்பிரான்

திருமழிசைப்பிரானுக்கு உறையிலிடாதவரென்று ஸங்கேதத் திருநாமம். (ஆசார்யஹ்ருதயம் 155.) எதை உறையிலிடாதவர்? என்று கேள்விபிறக்கும். உறையிலிடுவதென்கிற வழக்கு கத்தியைப் பற்றியதாதலால், உருவின வாளை உறையிலிடாதவர் என்பதாகும். *வாள் வீசும் பரகாலன் கலிகன்றி* என்கிற படியேதிருமங்கையாழ்வார்க்குக்கத்தி நிரூபகமாகவுண்டே யல்லது திருமழிசைப் பிரானுக்குக் கத்தியிருந்ததாக ப்ரஸித்தியில்லையே; ஆகவே உருவினவாளை உறையிலிடாதவரென்று திருமழிசைப்பிரானை எப்படிச் சொல்லலாம்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். 'உருவினவாளை உறையிலிடாதவர்' என்பதற்கு ஸ்வாபதேசார்த்தரீதியில் பொருள் கொள்ளவேணும். ப்ரதிபக்ஷிகளை நிரஸிப்பதற்காகவே கத்தியை உறையிலிடாமல் கையிலே கொண்டிருப்பது வீரர்களின் வழக்கம். அப்படியே, தேவதாந்தரங்களுக்குப் பரத்வஞ் சொல்லுகிற ப்ரதிபக்ஷிகளை நிரஸித்து ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை ஸ்தாபித்து வெற்றி பெறுவதற்கு எப்போதும் ஸன்னத்தராயிருப்பவர் இவ்வாழ்வார்—என்பது பற்றியே இவர்க்கு உறையிலிடாதவரென்று திருநாமஸங்கேதமாயிற்று. இவர் பிரபந்தம் தொடங்கும்போதே *நான்முகனை நாராயணன் படைத்தான்; நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்* என்றார். இடையில், *பொல்லாத தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு* என்றருளிச்செய்தார். முடிவில் *இனியறிந்தேனீசற்கும் நான்முகற்குந்தெய்வம், இனியறிந்தே னெம்பெருமானுன்னை* என்றார். திருச்சந்த விருத்தத்திலுமிப் படியே பல பாசுரங்கள் காணலாம். *காணிலு முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரந்தரமிடுக்கிலாத தேவரை, ஆணமென்றடைந்துவாழு மாதர்காள்!* என்றும் *வந்தவாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த நாள், அந்த வந்த வாகுலம் அமரரேயறிவரே* என்று பலபாசுரங்கள்காண்க. (26)

27. புஷ்ப த்யாக போக மண்டபங்கள்

'கோயில் திருமலை பெருமாள்கோயில்' என்று மூன்று திவ்ய தேசங்களையே நூற்றெட்டுத் திருப்பதிகளுள் தலையாகக் கொண்டு எங்கும் வழங்கி வருகிறார்கள். இம்மூன்று திருப்பதிகட்குத் தலைமையுண்டானதற்கு யாது காரணமென்னில், நம்மாழ்வார் தமது முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் இம்மூன்று திவ்யதேசங்களை மாத்திரமே மங்களாசாஸனம் செய்தருளியது தான் காரணம். இம்மூன்று திவ்யதேசங்களைப் புஷ்ப த்யாக போகமண்டபங்களென்றும் பூருவர்கள் ஸங்கேதித்ததுண்டு. (ஆசார்யஹ்ருதயம்—85.) புஷ்ப மண்டபமென்பது திருமலை; த்யாக மண்டபமென்பது பெருமாள் கோயிலென்கிற ஸ்ரீகாஞ்சி; போகமண்டபமென்பது கோயில். எங்ஙனேயென்னில்; நம்மாழ்வார் திருமலைவிஷயமாக அருளிச்செய்த *ஒழிவில்காலப் பதிகத்தில் "வானவர் வானவர்கோனொடுஞ்சிந்து பூமகிழும் திருவேங்கடம்" என்று அருளிச்செய்திருக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கையாலே திருமலை புஷ்பமண்டப மெனப்பட்டது. *வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம், வரதஸ் ஸர்வ பூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே* என்கிற புராண வசனப்படியே வேண்டுவார் வேண்டினபடியே தியாகம் செய்யும் வரதன் எழுந்தருளி யிருக்குமிடமாகையாலே பெருமாள்கோயில் த்யாகமண்டபமெனப்பட்டது. *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ்சோராமேயாள்கின்ற வெம்பெருமானுறையுமிடமான திருவரங்கம் பெரிய கோயிலானது *தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளி கொள்ளும்* என்கிறபடியே திவ்யபோக ஸ்தானமாயிருக்கையாலே போகமண்டபமெனப்பட்டது. .... (27)

28. எம்பெருமானை க்ருதஜ்ஞனென்பது எப்படி? என்கிற சங்கை

எம்பெருமானுடைய பல திருக்குணங்களைத் திரட்டி ஆளவந்தார் ஒரே ச்லோகத்தில் அருளிச் செய்கிறார் ஸ்தோத்ரரத்னத்தில்; *வசீ வதாந்யோ குணவாந் ருஜுஶ்சுசி: என்று தொடங்குவது அந்த ச்லோகம். அதில் க்ருதஜ்ஞ: என்பதும் ஒரு குணமாகப் பேசப்பட்டிருக்கிறது. செய்த நன்றியை மறவாதவனுக்கு க்ருதஜ்ஞனென்று பெயர். மனிதர்களுக்கு உரிய குணங்களுள் இக்குணமே முதன்மைபெறும். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது திருக்குறள். வடமொழியறநூல்களும் "க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:" என்று அறைகின்றது. எல்லாப் பாவங்களுக்கும் ப்ராயச்சித்தங்களினால் போக்கடியுண்டு; செய்நன்றி மறக்கை அல்லது செய்ந்நன்றி கொல்லுகையாகிற பாவமொன்றுக்கு மாத்திரம் பிராயச்சித்தம் ஒரு சாஸ்த்ரத்திலும் காணக் கிடைக்காதென்றே வடநூலாரும் தமிழ் நூலாரும் ஒருமிடறாகக் கூறியுள்ளார்கள்.

இந்த க்ருதஜ்ஞதை நம்போன்ற மனிதர்கட்கு இருக்க ப்ராப்தம். எம்பெருமானுக்கு இக்குண மிருக்கவேண்டியது அவசியமோ? நாம் பரஸ்பரம் உதவிகளை அபேக்ஷித்திருப்பவர்க ளாகையாலே நம்முடைய உதவியைப் பிறர் மறவாதிருத்தலும் பிறருடைய உதவியை நாம் மறவாதிருத்தலும் ஆவச்யகமாகும். நம்மாலே எம்பெருமானுக்கு ஆகவேண்டிய உதவி அணுவளவுமில்லை. அவன்றான் அவாப்தஸமஸ்தகாமனாகையாலே அவனுக்கு நாம் செய்யவேண்டுமுதவி என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை யென்பது புநருத்தம். ஆகவே அப்பெருமானை க்ருதஜ்ஞன் என்று கொண்டாடுவதற்கு விஷயமில்லையே! விஷயமுள்ளதென்னில்; எம்பெருமான் நம் போல்வாரான க்ஷுத்ரர்களிடத்தும் உதவியை எதிர்பார்க்கக் கூடியவனென்று அவனுக்குக் குறையே தேறும்; ஆதலால் அவனுக்குக் குணமாகச் சொல்லப்பட்ட க்ருதஜ்ஞதையை எங்ஙனம் நிர்வஹிப்பது? என்று சிலர் சங்கிப்பர்கள். .... (28)

29. மேலேகாட்டிய சங்கைக்குப்பரிஹாரம்

ஆளவந்தார் பகவத்குணமாக அநுஸந்தித்த க்ருதஜ்ஞதையை நிர்வஹிக்கின்ற பூருவாசிரியர்கள் "ந ஸ்மரத்யபகாராணாம் சதமபி ஆத்ம வத்தயா, கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி* என்கிற ஸ்ரீராமாயண சலோகத்தைக் கொண்டு நிர்வஹித்திருக்கக் காண்கிறோம். இந்த ச்லோகமானது இராமபிரானுடையதான க்ருதஜ்ஞதா குணத்தை நன்கு வெளியிடுகின்றது. ஏதேனுமொரு விதத்தில் யாரேனும் ஒருதவி செய்தாலும் அதனால் இராமன் எப்போதும் உள்ளம் பூரித்திருப்பதாகவும் நூற்றுக்கணக்கான தீங்குகளிழைத்தாலும் அவற்றைச் சிறிதும் நெஞ்சிற் கொள்வதில்லையாகவும் இந்த ச்லோகத்தில்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமகுணதிசயம் கூறப்பட்டுள்ளது. இதில் க்ருதஞ்சீத் என்று முன்னம் ப்ரயோகிக்கப்பட்டுள்ள பதம் குறிக்கொள்ளத்தக்கது. உபகாரம் செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு செய்கையன்றியே அபுத்தி பூர்வகமாகச் செய்ததாயிருந்தாலும் அதையும் பேருதவியாகக் கொண்டு மகிழ்பவனும் இராமன். நெஞ்சாரவே நூற்றுக்கணக்கான தீங்குகள் செய்யினும் அவற்றை நெஞ்சிற் கொள்ளானும்.

ஆனால் இங்கு ஒன்று சொல்லவேண்டியதாகிறது; *வெறிதேயருள் செய்வர்* என்று ஆழ்வாரருளிச் செய்தபடி ஒன்றுமே செய்யாதவர்கட்குங்கூட மிகச் சிறந்த அருளைச் செய்யுமியல்வினரான பெருமாள் ஒன்று செய்தவர்களுக்கு உகந்திருக்கிறுரென்றால் இது வியப்போ? இது பாராட்டத்தக்கதொரு குணமாகுமோ? ஆகாதுதான். ஆனாலும் இராமன் தன்னை ஒரு மனிதனாக நடித்துக் காட்டினனாதலால் 'உலகில் மனிதர்களிடத்துக் காணும் குணங்களெல்லாம் இராமபிரானிடத்து உள்ளன' என்று காட்ட வேண்டுவது ப்ராப்தமாகிறபடியால் அந்த முறையில் காட்டலாமன்றோ! .... (29)

30. ஸுக்ரீவமஹாராஜர் பெருமாளுக்குச்செய்த உதவி யாது?

குரக்கரசனான ஸுக்ரீவனிடத்திலும் அரக்கர் கோமானான விபீடணனிடத்திலும் இராமபிரான் காட்டியருளின திருவருள் வாயால் சொல்லவொண்ணாதது, நெஞ்சாலும் நினைப்பரிது. இதற்கீடாக அவர்கள் செய்த நன்றி யாதென்று பார்க்குமளவில், விபீஷணன் சரணாகதி செய்தானென்றாவது சொல்லத்தக்கதுண்டு. ஸுக்ரீவனிடத்திலோ; *லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி* என்றும் *ஸுக்ரீவம் சரணம் கத:* என்றுமுள்ள பிரமாணங்களின்படி இராமன் ஸுக்ரீவனைச் சரணம்புக்கதாகக் காண்கிறோமே யல்லது ஸுக்ரீவன் இராமனைச் சரணம் புக்கதாக இல்லை. ஆனாலும் இராமபிரானது திருவுள்ளத்தினால் ஸுக்ரீவன் பேருதவி செய்தானாகக் கொள்ளப்பட்டான். அவ்வுதவி யாதெனில்; இராமன் பிராட்டியைப் பிரிந்து மிகவருந்தி இன்னது செய்வதென்று தோன்றாமல் சென்று கொண்டிருக்கையில் *பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ* என்னும்படி பம்பைக் கரையில் அனுமன் வந்து சந்தித்தனனன்றோ. இது ஸுக்ரீவனது கட்டளையினால் தானே நிகழ்ந்தது. அனுமன் இராமனிடம் வந்து சேர்ந்ததும் 'நான் ஸுக்ரீவனால் அனுப்பப்பட்டு இவ்விடம் வந்தேன் உங்களைக் காண' என்றே சொல்லியிருக்கின்றனன். இத்தகைய மஹாகுணசாலியான திருவடியை யனுப்பினது ஸுக்ரீவன் தன்னுடைய காரியத்திற்காகவாயினும், இராமன் அங்ஙனம் கொள்ளாது அதனைத் தனக்குச் செய்த பேருதவியாகக் கொண்டே [அதாவது, தனக்கு உசாத்துணையனுப்பி வைத்ததாகக்கொண்டே] ஸுக்ரீவனிடத்தில் பேரருள் புரிந்தனன். இப்படி கதா ஸந்தர்ப்பங்களைக் கொண்டு இராமபிரானிடத்திலே நாம் க்ருதஜ்ஞதா குணத்தை நிரூபித்துக் காட்டுவது இருக்கட்டும். ஆளவந்தார் *வசீ வதாந்ய:* என்கிற ச்லோகத்தில் அநுஸந்தித்த திருக்குணங்கள் பரந்தாமனான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியிடத்தே யாதலால் அக்குணங்களுள் ஒன்றான க்ருதஜ்ஞதையை ஒன்றான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடத்திலேயே நிரூபித்துக் காட்ட வேணும். அதை நம் ஆசாரியர்கள் நிரூபிக்கும் விதம் மிகவும் ஆச்சரியமானது, அதனை விவரிக்கும் நல்வார்த்தைகளை மேலே காண்க. .... (30)

31. ஸுக்ருதங்களின் விசேஷங்கள்

க்ருதஜ்ஞ: என்னும்சொல்லுக்கு செய்கிற காரியங்களையுணருபவன் என்று பொருள்; சேதநர்களாகிய நாம் செய்கிற காரியங்களை யுணருபவர் பகவான்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என்றதாயிற்று. அனந்தகோடி ஜீவராசிகள் ஒவ்வொரு க்ஷணத்திலும் செய்யுங் காரியங்களை எம்பெருமான் தனது சிறந்த சக்தி விசேஷத்தினால் உடனிருந்து அறிகிறானென்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமன்றோ. அதையா இங்குச் சொல்லுகிறது? என்னில்; கேண்மின்.

ஸர்வேச்வரன் நம் போன்ற சேதநர்களைத் தன்னருளுக்கு இலக்காக்கிக் கொள்வதற்கு உறுப்பாக நாம் செய்ய வேண்டிய காரியங்களை சாஸ்திரங்களில் பலவாறு சொல்லி வைத்திருக்கிறானென்பதை யாவருமறிவர். அவற்றுக்கு ஸுக்ருதமென்று பொதுவான பெயர் வழங்கும். 'நன்றாகச் செய்யப்பட்டது' என்பது இதன் பொருள். நாம் செய்யும் காரியங்களில் நன்றாகவும் செய்யப் படுவாதக இரண்டு வகைகளுள்ளனவன்றோ. அவை வடமொழியில் ஸுக்ருத, துஷ்க்ருத பதங்களாலும், தென்மொழியில் நல்வினை தீவினை யென்னுஞ் சொற்களாலும் வழங்கப்பெறும். ஸுக்ருதத்தைப் பற்றியே இங்குப் பேசுவோம், இது பொதுவாக இருவகைப்படும்—ஜ்ஞாதஸுக்ருதமென்றும் அஜ்ஞாதஸ்ஸுக்ருதமென்றும். மனப்பூர்வமாகத் தெரிந்து செய்யும் நன்மைகள் ஜ்ஞாதஸுக்ருதமெனப்படும். நமக்கும் தெரியாமல் விளையும் நன்மைகள் அஜ்ஞாதஸுக்ருதமெனப்படும். இவற்றுள் முதல் வகுப்பான ஜ்ஞாதஸுக்ருதங்கள் பல பலவாயிருக்கும். தவம்புரிவது, தானஞ்செய்வது, யஜ்ஞயாகங்களைச் செய்வது, கங்கை யமுனை காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்களிற் சென்று குடைந்தாடுவது, கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் முதலான திவ்யதேசங்களிற் சென்று பகவத் ஸேவை செய்வது, 'பேராயிரமு மோதுமின்கள்' என்கிற கட்டளைக்கு உட்பட்டு ஸஹஸ்ரநாமம் முதலான துதிகளை வாயாரச்சொல்லுவது திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை யென்று சொல்லப்படுகிற பலவகைக் கைங்கரியங்களைச் செய்வது. ஆகிய இப்படிப்பட்ட காரியங்களை 'இது செய்யக்கடவோம்' என்று ஸங்கல்பித்துக் கொண்டு மனஸ்கரித்துச் செய்வதானது ஜ்ஞாதஸுக்ருத மெனப்படும்.

கீழே சொன்னபடி இன்ன நல்வினையைச் செய்யவேணுமென்று நாம் ஸங்கல்பித்துக்கொண்டு செய்யாவிடினும் கோல் விழுக்காட்டாலே நல்வினையாகப் பரிணமிக்கும் செய்கைகள் அஜ்ஞாத ஸுக்ருதமெனப்படும். நல்லது செய்யவேணுமென்று நாம் நினைத்துச் செய்யாதவற்றை ஸுக்ருதமென்கிற சொல்லால் வழங்கலாமோ? சாஸ்த்ரங்களினால் விதிக்கப்பட்டதாய் கர்த்தாவான சேதநனாலே புத்திபூர்வ மநுஷ்டிக்கப்பட்டதான செய்கையையன்றோ ஸுக்ருதமென்று வழங்கலாம். இன்ன ஸுக்ருதம் பண்ணினேனென்று கர்த்தாவான சேதநன் அறியாதவற்றை ஸுக்ருதமென்று எப்படிச் சொல்லக்கூடும்? என்று ஆக்ஷேபிக்க இடமுண்டு; இதற்கு நம் பூருவாசாரியர்கள் அருளிச்செய்யும் ஸமாதானத்தையே இங்குத் தெரிவிக்கிறோம். .... (31)

32. ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியமுதம்

ஸ்ரீவசநபூஷணத்தில் பகவந் நிர்ஹேதுக க்ருபாவைபவப்ரகரணத்தில் (396) "சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிற வித்தை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில்; நாமன்று, ஈச்வரனன்று கேட்டிருக்கையாயிருக்கும்" என்றுள்ளது. நம்மையறியாமல் நேர்ந்தநல்வினைக்கு ஸுக்ருதமென்று பேரிடுகிறது நாமன்று; ஸர்வமுக்திப்ரஸங்கம் வாராமைக்காக ஸர்வஜ்ஞனான ஸர்வேச்வரன்தான் ஸுக்ருதமென்று பேரிட்டுவைத்தான் என்று ஆசாரியர்கள் அருளிச் செய்வர்களாம். இதனால், என்ன தேறுகிறதென்னில்; நமக்குத் தெரியாததாயிருந்தாலும் எம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெருமானுக்குத் தெரிந்திருக்கையாலே அவன் கருத்தாலே ஸுக்ருதமென்னக் குறையில்லை என்றதாயிற்று. .... (32)

33. அந்த ஸ்ரீஸூக்தியில்தோன்றும் சங்கை

மேல் ஒரு கேள்வி பிறக்கும். எம்பெருமானே யதார்த்தஜ்ஞானமுள்ளவன். அவனுக்கு அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்கள் கிடையாதென்று சாஸ்த்ரங்களாலறிகிறோம். நாம் மனஸ்கரித்துச் செய்யாததொன்றை அவன் ஸுக்ருதமென்று கொண்டானாகில் அது யதார்த்த ஜ்ஞானமாகுமோ? ஒருவன் ஸந்நிபாத ஜ்வரம் முதலிய கொடிய நோய்களினால் துன்பப்படுங் காலங்களில் தன்னையறியாமல் ஏதேதோ உளறுகிறான்; அபுத்திபூர்வமாக வெளிவருமந்த வுளறல்களில் யாராவது அர்த்தம் காண்கிறார்களோ? இல்லையன்றோ. அப்படியே நம்மையறியாமல் நாம் செய்யும் செயல்களை எம்பெருமான் ஸுக்ருதமென்று எப்படிக் கொள்ளக்கூடும்? .... (33)

34. அந்தசங்கைக்குப் பரிஹாரம்

கேண்மின்; எம்பெருான் சேதநர்களிடத்தில் இயற்கையான இன்னருள் பொருந்தியவன். இவனை எவ்வகையினாலாவது தான் அங்கீகரிப்பதற்கு அப்பெருமான் வழிதேடுபவன். இச்சேதநன் புத்திபூர்வமாகச் செய்யும் நல்வினைகளை முன்னிட்டே இவனை அங்கீகரிப்பதாக எம்பெருமான் வைத்துக்கொண்டால் ஒருவனைக்கூட அங்கீகரிக்க அவகாசம் நேராது. ஏனெனில், நாம் புத்திபூர்வமாகச் செய்வது தீவினைகளையே யாதலாலும் நல்வினையை நாம் நெஞ்சாலும் நினைப்பவர்களல்லோமாதலாலும் நம்மை அங்கீகரிக்க எம்பெருமானுக்கு அவகாசமேது? நாமும் இழந்து அவனும் இழந்துபோக வேண்டியதாகிறது. நம்முடைய இழவு கிடக்கட்டும். இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே யிருக்கிற நாம் நம்மிழவைப்பற்றிக் கவலைப்படா தொழிந்தாலும் ஸொத்துக்கு உடையவனாய் ஸ்வாமியென்று பேர்பெற்றிருக்கு மெம்பெருமான் இழந்துதரிக்கமாட்டானன்றோ. 'ஸுக்ருதம் செய்தவர்களையன்றி மற்றையோரை நான் அங்கீகரிக்க மாட்டேன்' என்று சாஸ்த்ரங்களில் அவன் பொறித்துவைத்திருப்பதனால் ஸுக்ருதம் செய்யாதவர்களை அங்கீகரிக்க முடியாமலிருக்கிறது. ஆகவே எம்பெருமான் இழந்தேபோக வேண்டியதாகிறது. இழவாமைக்காக அப்பெருமான் ஒரு கள்ள வழியில் நுழைகிறான். (அதாவது) கரண களேபரங்களைப்பெற்றிருக்கிற சேதநன்வாளாகிடப்பதில்லை; "ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டதி அகர்மக்ருத்" என்று கீதையில் சொன்னபடி எப்போதும் ஏதாவதொரு காரியம் செய்துகொண்டே போதைப்போக்கிவருகின்ற சேதநன் செய்யும் காரியங்களிலே நாம் நன்மை (ஸுக்ருதம்) என்று பேரிட்டுக்கொள்ளும்படியான காரியம் ஏதாவதிருக்குமாவென்று பார்ப்போம்—என்று ஆராயத் தொடங்குகிறான். அவனுடைய அத்ருஷ்டத்தாலே அப்படிப்பட்ட காரியங்கள் நம்மிடத்திலே அவனுக்குக் கிடைத்துவிடுகின்றன; அவற்றை ஸுக்ருதமாகவே அவன் திருவுள்ளம் பற்றுகிறான். நாம் மனப்பூர்வமாக ஸுக்ருதமென்று செய்யாததாகையாலே அஜ்ஞாத மென்கிறது. அவன் திருவுள்ளத்தாலே இது ஸுக்ருதமாகக் கொள்ளப்பட்டுவிட்டபடியால் ஸுக்ருதமென்கிறது. ஆகவே அஜ்ஞாத ஸுக்ருதமென்று பேர்பெற்றுவிட்டது. .... (34)

35. அஜ்ஞாதஸுக்ருதப்ரபேதங்கள்—"என்னாரைச் சொன்னாய்"

இந்த அஜ்ஞாதஸுக்ருதமானது—யாத்ருச்சிகஸுக்ருதமென்றும் ஆநுஷங்கிக ஸுக்ருதமென்றும் ப்ராஸங்கிக ஸுக்ருதமென்றும் பல பெயர்களை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யுடையதாயிருக்கும். இவை நம்போல்வாரிடமிருந்து எம்பெருமானால் எவ்விதமாகக் கொள்ளப்படுகின்றன வென்பதைச் சிறிது நிரூபிப்போம்; நாம் ஸம்ஸாரிகளாகையாலே மக்களைப் பெறுகிறோம். மகளை ஒருவனுக்கு மணம் புரிவிக்க வேண்டியதாகிறது. மகனுக்கு ஒரு பெண்ணை கொள்ளவேண்டியதாகிறது. ஆகவே ஸ்ரீரங்கத்திலுள்ள ஒரு வரனுக்குத் தன் மகளைக் கொடுக்கவும், திருவெள்ளறையிலுள்ள வொருபெண்ணைத் தன் மகனுக்குக் கொள்ளவும் நேருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஸம்ஸாரி அடிக்கடி வாய்ப் பேச்சுக்களில் ஸ்ரீரங்கத்தையும் திருவெள்ளறையையும் வாயாரச் சொல்ல வேண்டி வருகிறது. "என்னுடைய மாப்பிள்ளை ஸ்ரீரங்கத்திலிருக்கிறார்—ஸ்ரீரங்கத்திலிருந்து என்னுடைய மாப்பிள்ளை நேற்று வந்தார்—மாப்பிள்ளையை யழைத்துவர ஸ்ரீரங்கம் போய் வரப்போகிறேன்; என்னுடைய நாட்டுப்பெண் திருவெள்ளறையிலிருந்து இன்று வந்தாள்" என்றிப்படி பலகால் வ்யவஹரிக்க நேர்கின்றது. இந்த வ்யவஹாரங்களில் திருவரங்கத்தையும் திருவெள்ளறையையும் பலகால் சொல்லுவதானது 'இந்த திவ்யதேசங்களை நாம் சொன்னால் ஸுக்ருதமுண்டு' என்கிற எண்ணத்தினாலன்று; அம்பத்தூர் ஆவடி என்கிற ஊர்ப் பெயர்களைச் சொல்லுவதுபோலவே திருவரங்கம் திருவெள்ளறையென்னும் ஊர்ப் பெயர்களையும் இவன் சொல்லா நின்றான். ஆனாலும் ஏதேனுமொரு வியாஜத்தை எதிர்பார்ப்பதில் நோக்குடையனான எம்பெருமான் 'என்னூரைச் சொன்னானிவன்' என்று இதை ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான். .... (35)

36. "என்பேரைச் சொன்னாய்"

மற்றுங் கேண்மின்; ஸம்ஸாரிக்குப் பிறக்கும் மக்களுக்கு ரங்கன் ராகவன் திருவேங்கடன் கோவிந்தன் கோபாலன் நாராயணன் மாதவன் என்றிப்படி பெயரிட்டு அந்தப் பிள்ளைகளை ஆர்வத்தோடு அழைக்கும்போதெல்லாம் இந்தப் பெயர்களைச் சொல்லியழைக்க நேர்கின்றது. தவிரவும் வாய்ப்பேச்சுக்களில் 'ரங்கன் வந்தான், ராகவன் போனான், க்ருஷ்ணனைக் கண்டேன், ராமனோடு பேசினேன்' என்றிப்படி பலகாலும் சொல்ல நேருகின்றது. எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லுகிறோமென்கிற எண்ணம் சிறிதுமில்லாமல் இங்ஙனே நிகழும் ஸம்ஸாரிகளின் வ்யவஹாரங்களில் 'என் பெயரைச் சொன்னானிவன்' என்று எம்பெருமான் இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான். (36)

37. "என்னடியார்களை நோக்கினாய்"

சில பாகவதர்கள் திருவேங்கட யாத்திரியையாக வழிகடந்து சொல்லா நிற்கையில் கள்ளர்கள் அவர்களையடித்துப் பொருள்களை யபஹரிப்பதாக அணுகினார்கள்; அதே சமயத்தில் சில ராஜஸேவகர்கள் தங்களுடைய காரியமாக ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு அவ்வழியே அவர்கள் பின்னால் வந்துகொண்டிருப்பதை கள்ளர்கள் கண்டு, இவர்கள் இந்த பாகவதர்களுக்குத் திருமேனிக் காவலாக வருகின்றார்கள்போலும் இங்கு நம்முடைய எண்ணம் ஒன்றும் நிறைவேறாது' என்றெண்ணி வாளா விலகியொழிந்தனர். இந்த நிகழ்ச்சி அங்கு யாத்ருச்சிகமாக வந்த ராஜஸேவகர்களுக்கும் தெரியாது, யாத்திரை செல்லுகின்ற பாகவதர்களுக்கும் தெரியாது; ஆனாலும் அங்கீகரிக்க அவகாசம் பார்க்கிற ஸர்வேச்வரன் அந்த ராஜஸேவகர்களை பாகவதரக்ஷணம் பண்ணின ஸுக்ருதிகளாகத் திருவுள்ளம் பற்றுகிறான். அந்த ராஜஸேவகர்கள் அந்த பாகவதர்களின் வழியில் சென்றது தன்னையே ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

38. "அவர்கள்விடாயைத் தீர்த்தாய்"

ஒருவன் ஓரிடத்திலே நிலம் வாங்கி அதிலே வெங்காயம் உள்ளி முதலான வற்றைப் பயிர் செய்கின்றான். தண்ணீரிறைக்க அங்கே ஸௌகரியமில்லாமை யால் நெடுந்தூரத்திலே நீருள்ளவிடத்தில் துலையிட்டு, தன் வயலிலே வந்து சேரும்படி தண்ணீரிறைக்கின்றான். அந்நீர் ஒருபெரிய வாய்க்காலாகப் பெருகி வயலுக்குச் செல்லாநின்றது. யாத்திரை செல்கின்ற சிலபாகவதர்கள் தாபார்த் தர்களாய் தாஹம் மிகுந்து எங்கும் தண்ணீர் கிடைக்காமல் வருந்தி வருகையில் இந்தத் தண்ணீர்ப் பெருக்கைக் கண்டு பரமானந்தங்கொண்டு காலுங்கையும் முகமுங்கழுவி விடாய் தீர்ந்து வாழ்த்திச் சென்றார்கள். நெடுகந்தூரத்தில் துலையிட்டுத் தண்ணீரிறைக்கின்ற அவன் இதைச் சிறிதுமறியாதவனாயிருந் தாலும் ஸர்வஜ்ஞனான எம்பெருமான் 'என்னடியார்களது விடாயைத் தீர்த் தானிவன்' என்று இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான் .... (38)

39. "அவர்களுக்கு ஒதுங்க நிழலைக்கொடுத்தாய்"

ஒருதனிகன் தான் சூது சதுரங்கமாடுவதற்காக ஒருசாவடி கட்டி அதிலே சூதாடிக் காலங்கழிக்கிறான். ஆனால் இரவு முழுதும் சூதாடிக் கண் விழித் திருக்க முடியாதே நடுநிசி வரையில் சூதாடிவிட்டு உறங்குவதற்கு வீடுபோய் விடுகிறான். அப்போது, யாத்திரையாக வழிநடந்து வருகின்ற சில பரம பாகவதர்கள் தாங்கள் சயனிப்பதற்கு இடம் கிடைக்காமல் வருந்தியிருந்து இந்தச் சாவடியிலே யொதுங்க நேர்கின்றது, இப்படி ஒரு நாளல்ல; நாடோ றும் நேர்கின்றது. இதை அந்தத் தனிகன் அறிதான்; அறிந்தானாகில் ஒரு வரும் உள்ளேபுகாதபடி கதவுகளிடவும் ஏற்பாடு செய்திடுவன். இங்ஙனே சில பாகவதர்கள் தங்கிப்போகிறார்களென்பதை அவனறியாமையாலே சேமக்காப்பு செய்யப்படாமலிருந்து யாத்திரை செய்வார்க்குப் பேரின்பமளிக்கும் வசதியாக இருந்து வருகின்றது. இது எம்பெருமான் திருவுள்ளத்திலேபட்டு 'என்னடி யார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தானிவன்' என்று ஸுக்ருதமாகக் கணக் கிடலாகிறது. .... (39)

40. ஸுக்ருத வார்த்தைகளின் உபஸம்ஹாரம்

இங்ஙனே பல நிகழ்ச்சிகள் ஸம்ஸார வாழ்க்கையில் ஸம்பவிப்பவையுள. இவையே அஜ்ஞாதஸுக்ருதமெனப்படுவன. மேலே நிரூபிக்கப்பட்டவற்றில் யாத்ருச்சிகஸுக்ருதகோஷ்டியில் சேர்வனசில; ப்ராஸங்கிக-ஆநுஷங்கிககோஷ்டி யில் சேர்வன சில. ஆக இப்படிப்பட்ட ஸுக்ருதங்களை எம்பெருமான் தானாக அறிந்து நம்மை விஷயீகரிப்பதற்கு இவற்றை ஹேதுவாகவோ வியாஜமாகவோ கொள்ளுகிறானென்று இதுதன்னையும் நாம் சாஸ்த்ரங்கொண்டேயறிகிறோம். இப்படிப்பட்ட ஸுக்ருதஜ்ஞானம் எம்பெருமானுக்கு உள்ளதுபற்றியே அவனுக்கு க்ருதஜ்ஞன் என்னும் புகழ் தோன்றியது. ஆளவந்தார் *வசீ வதாந்ய:* என்னும் ச்லோகத்தில் க்ருதஜ்ஞ: என்று கூறியது இவ்வளவு விஷயங்களைத் திருவுள்ளம்பற்றியே. வால்மீகிபகவான் இராமனைப்பற்றிச் சொல்லுமிடத்து "கதஞ்சிதுபகாரேண க்ருதே நைகேந துஷ்யதி" என்றதில் கதஞ்சித் என்றது இவ்வளவு பொருள்களையும் உட்கொண்டிருக்கும். கதஞ்சித் க்ருதேந ஏகேந உபகாரேண துஷ்யதி—கதஞ்சித்காரணமாவது என்ன? என்று விமர்சிக்கவேணும். மநஸ்கரித்துச் செய்யாமல் கீழ் நிரூபித்தவகைகளிலே செய்வதேயாம் அது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

41. "யதி வா ராவணஸ் ஸ்வயம்"

விபீஷண பரிக்ரஹ விஷயமான விவாதங்கள் தீர்ந்து அவனைத் தன்னிடம் அழைத்து வரும்படி பெருமாள் ஸுக்ரீவனுக்குக் கட்டளையிட்டுச் சொல்லும் போது "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா" என்றார். ஸுக்ரீவ! விபீடணனுக்கு நாம் அபயமளித்தோமாதலால் அவனை நீயேயழைத்து வா என்று சொல்லி, உடனே "விபீஷணோ வா ஸுக்ரீவ யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்றார். இதன் பொருளாவது, ஸுக்ரீவ! நம்மை அடைக்கலம் புகுவதாக வந்து நிற்பவன் விபீஷணனென்று நீங்கள் சொல்லுவதனால் அவனை யங்கீகரித்த தாகச் சொன்னேன்; ஒருகால் விபீஷணனல்லாமல் இராவணனே அவனது வேடம் பூண்டு வந்திருப்பதாகத் தெரியவந்தால் அவ்விராவணனை அங்கீகரிப்ப தாவென்று மறுபடியும் ஒருவிசாரம் வைத்துக்கொள்ளாமல் அவனையே தாராள மாக அழைத்துவா என்றபடி. இங்ஙனம் தம்முடைய உதாரமான திருவுள்ளத் தைக் காட்டுகின்ற பெருமாள் இராவணனிடத்தில் என்ன ஸுக்ருதங்கண்டு இந்த வார்த்தை சொன்னாரென்று ஆராயுமளவில், மஹாபாபியான அவ்விரா வணனிடத்தில் புத்திபூர்வமான ஸுக்ருதம் காணமுடியாமற் போனாலும் மேலே விவரித்தவகையில் யாத்ருச்சிகம் முதலிய ஸுக்ருதங்கள் காணநேருமென்கிற துணிவுகொண்டே அங்ஙனமருளிச் செய்யலாயிற்றென்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகிறார்கள். இவ்வகைகளை நன்கு விமர்சிக்குங்கால் எம்பெரு மானே ப்ராப்தாவென்று சொல்லலாம்படி யிருக்கும். தன் ஸொத்தைச் சோர விடாமல் தான் ப்ராபிக்குமவனென்க. .... (41)

42. "மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே".

நம்முடைய ஸம்பிரதாயத்தில் உபதேச க்ரந்தங்களென்று சில அருமை பெருமைவாய்ந்த நூல்கள் வழங்குவதுண்டே; முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசநபூஷணம், ஆசார்ய ஹ்ருதயம் என்றாற்போன்ற திவ்யக்ரந்தங்களுக்கு உபதேச க்ரந்தங்களென்று பெயர். இவற்றால் உண்டாகும் ஞானம் மிகத்தெளி வாகவே யிருக்கும். இவற்றில் அருளிச் செய்யப்படுகிற அர்த்தங்களெல்லாம் நாநா சாஸ்த்ரங்களிலிருந்து தொகுக்கப்பட்டனவேயன்றி ஒன்றுகூட ஸ்வக போலகல்பிதமாக அருளிச் செய்ததன்று. அந்த சாஸ்த்ரங்களிலிருந்தே நாமும் தெரிந்துகொள்வோமே யென்று நம் போன்றவர்கள் நினைக்கலாகாது. அந்த சாஸ்த்ரங்கள் நமக்குத் தெளிவான ஞானத்தைப் பிறப்பிக்கமாட்டா. கடல் நீரைக் கொண்டுதான் மேகம் வர்ஷிக்கிறது; ஆனாலும் அந்தக் கடல்நீர் நமக்கு உபஜீவ்யமாகிறதில்லை. அது பாநத்துக்கும் உதவுவதில்லை, அபாநத்துக்கும் உதவுவதில்லை. அதுபோல சாஸ்த்ரங்களிலிருந்து நாம் நேராகக் கொள்ளும் பொருள்கள் நமக்குத் தெளிந்த ஞானத்திற்கு ஸாதன்மாகமாட்டா. பரமகாரு ணிகர்களான பிள்ளை லோகாசாரியர் மணவாள மாமுனிகள் போன்ற பேராசிரி யர்கள் ஸ்வயம் ஸகல சாஸ்த்ரஜ்ஞான ஸம்பந்நர்களாயிருந்து நம் போன்ற மந்த மதிகளை உஜ்ஜீவிப்பிக்கக் கோலியே உபதேச க்ரந்தங்களென்று சில வற்றை அவதரிப்பித்தருளினார்கள். நாம் தெளிந்த ஞானம் பெறவேண்டுமா னால் நமக்கு அவையே தஞ்சம். அந்த க்ரந்தங்களை நாம் வரியடைவே கற்றாலுங் கூட உபதேஷ்டாக்களான ஆசாரியர்களிடமிருந்து ஸாரஸங்க்ரஹமான சில உப தேசங்களைத் தனிப்படவும் கேட்டே தெளிவுபெற வேண்டியதாகும். .... (42)

43. முன்னோர் மொழிகளில் பரஸ்பர விரோதசங்கை.

ஒரு விஷயத்தை இரண்டொரு வார்த்தைகளாகச் சொல்லாமல் பலபல வார்த்தைகளாகச் சொன்னால் அவற்றில் பூர்வோத்தர விரோதமிருப்பது போல்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தோன்றும். உண்மையில், மஹான்களுடைய திருவாக்குகளில் விரோத லேசமுமிராது. மந்தமதிகளுக்கு விரோதமிருப்பதுபோல் தோன்றும். ஒரு சிறிய நிதர்சனம் காட்டுகிறோமிங்கு. பிள்ளை லோகாசாரியர் முமுக்ஷுப்படியில் (ஆரம்பத்தில்) "மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ர ப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்கவுண்டானால் கார்யகரமாவது" என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். இதன் கீழிலும் "திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கவேணும்" என்றார். அவ்விடத்து வியாக்கியானத்தில் "இப்படி யநுஸந்திக்கவேணுமென்கையாலே ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது" என்று மணவாள மாமுனிகள் அருளிச் செய்தார். இவற்றால், ஸக்ரமமாக அநுஸந்தித்தாலொழிய மந்த்ரம் கார்யகரமாகாதென்று தெரிவிக்கப்பட்டதாகிறது. இது இப்படியிருக்க, மேலே (17ம் சூர்ணிகை.) "சொல்லும் க்ரம மொழிபச் சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது" என்றருளிச் செய்யப்படுகிறது. 'ப்ரேமத்தோடே பேணி யநுஸந்தித்தால் கார்ய கரமாகும்' என்ற முந்தின வார்த்தைக்கும், அக்ரமமாகச் சொன்னாலும் கார்யகரமாகும் என்கிற பிந்தின வாக்யத்திற்கும் பரஸ்பரம் விரோதமுள்ளதாக ஸ்பஷ்டமாய்க் காண்கிறது. இப்படியே மற்றொன்றும் காணலாம். ஸ்ரீவசநபூஷணத்தில் ப்ரபத்திக்குப் பலநியமமில்லாமையை விவரிக்கும் சூர்ணையில் "த்ரௌபதிக்குப் பலம் வஸ்த்ரம்" என்றருளிச் செய்தார். முமுக்ஷுப்படியிலே "த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்றருளிச் செய்கிறார்; த்ரௌபதிக்கு ஸித்தித்த வஸ்த்ர வ்ருத்தியானது ப்ரபத்தியின் பலனென்று ஓரிடத்தில் சொல்லி, அது தன்னையே நாமஸங்கீர்த்தநத்தின் பலனாக மற்றோரிடத்தில் சொல்லுவது விருத்தமென்று தோன்றக்கூடியது. .... *(43)*

44. விரோத சங்கா பரிஹாரம்.

இதெல்லாம் மந்த மதிகளுக்குத் தோன்றக்கூடிய விரோத சங்கைகளேயொழிய மஹா ப்ராஜ்ஞர்களுக்குத் தோன்றக் கூடியவையல்ல. இவற்றுக்குப் பரிஹாரங்களை உபதேச முகத்தாலேயே கேட்டறியவேண்டும். இங்கு நாம் ப்ரஸ்தாவித்த இருவிரோதங்களுக்குப் பரிஹாரமுறை எங்ஙனே யென்று சிலர் கேட்கக்கூடும். ப்ரஸக்தமானபடியால் இதைப்பற்றிச் சிறிது எழுதுகிறோமிங்கு. 'திருமந்த்ரத்தை ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கவேணும்' என்றும் '....ப்ரேமம் கனக்கவுண்டானால் கார்யகரமாவது' என்றும் அருளிச் செய்ததானது, மந்த்ரத்தை யநுஸந்திக்கவேண்டிய அதிகாரிகளை நோக்கிச் சொன்னது. 'சொல்லும் க்ரமமொழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது' என்றது மந்த்ரத்தின் பெருமை சொன்னது. இவை பரஸ்பர விருத்தங்களாக மாட்டா. இதற்கு இணங்க ஒரு லௌகிக த்ருஷ்டாந்தம் காட்டுகிறோம் காண்மின்; புக்ககம் செல்லுகிற பெண்ணைக் குறித்துத் தாய்தந்தையர் ஹிதோபதேசம் பண்ணும்போது 'பெண்ணே! நீ புக்ககத்தில் மிகவும் குணசாலினியாய் வாழவேண்டும்; தளிகை செய்கையில் மிகுந்த கவனிப்புடனிருக்க வேண்டும்; உப்புப் புளி காரங்களைத் திட்டமாகச் சேர்க்கவேண்டும்; இல்லையாகில் மாமிமார் மாமனார் பர்த்தா முதலானவர்களின் அன்பை நீ பெற முடியாது' என்று நன்மை சொல்லுகிறார்கள். இதில் ஒரு தவறுமில்லை; யுக்தமான வார்த்தை தானே இது. மற்றொருகால் மாமியார் மாமனார் முதலானாருடைய நற்குண நற்செய்கைகளைப் புகழ்ந்து பேசும்போது 'இவர்கள் எமது பெண் தளிகையைச் சிறிதும் தூஷிப்பதில்லை; உப்புப் புளி காரங்களை இரட்டிப்பாக விட்டு அவள்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தளிகை செய்தாலும் பரம போக்யமாக அமுது செய்கிருர்கள்' என்று சொல்லுகிருர்களென்று வைத்துக்கொள்ளுவோம். இதிலும் தவறில்லை. இவ்வார்த்தைகளில் பரஸ்பர விரோதம் ஏது மில்லையன்ருே. மகளிருக்கவேண்டிய விதத்தை சிக்ஷிப்பது முந்தின வார்த்தை. பெரியார்களின் கம்பீர ஸ்வபாவத்தைத் தெரிவிப்பது பிந்தின வார்த்தை; நம்முடைய தோஷங்களையும் பெரியார்கள் குணமாகக் கொள்ளுகிருர்களென்பதைக் கொண்டு நாம் குற்றம்செய்யலாகாதன்ருே. சாஸ்த்ரார்த்தங்களில் தெளிவு பிறப்பது எளிதன்று. த்ரௌபதியானவள் திருநாமஸங்கீர்த்தந பூர்வமாக ப்ரபத்தி பண்ணிஞள். இரண்டும் சேர்ந்து ஒரே செயல். ஒரு க்ரந்தத்தில் வஸ்த்ரவ்ருத்தியை ப்ரபத்தியின் பலனுகச் சொல்லி மற்ருெரு க்ரந்தத்தில் அதைத் திருநாமஸங்கீர்த்தநத்தின் பலனுகச் சொன்னதனுல் யாதொரு விரோதமுமில்லையன்ருே. .... (44)

45. வேதாந்திகளுக்குள் விசிகித்ஸை.

எம்பெருமானை நிர்ஹேதுக க்ருபாளு வென்றும் அவ்யாஜதயாளுவென்றும் சொல்லிவருகிருேம். ஸ்வாமி யெம்பெருமானுர் *அநாலோசித விசேஷாசேஷ லோகசரண்ய!* என்று அடிக்கடி எம்பெருமானை ஸம்போதிக்கிருர். இதன் பொருள் என்ன? சிலரிடத்தில் ஏற்றமும் சிலரிடத்தில் தாழ்வுமாகிய வாசி பாராமல் எல்லோரையும் ஒருங்கே ரக்ஷிக்கவல்லவனே! என்பதுதானே இதன் பொருள். வேதாந்ததேசிகனும் "நிஷ்கிஞ்சநஜநஸ்வயம் ரக்ஷாதீக்ஷா ஸமதிகஸமிந்தாநயசஸே" என்று ஓலமிடுகிருர். ஒரு கைம்முதலுமில்லாதவர்களைத் தானுகவே மேல்விழுந்து ரக்ஷிப்பதிலேயே தீக்ஷைகொண்டு அதனுல் புகழ் மிக்கவன் எம்பெருமான் என்பதன்ருே இதன் பொருள். இங்ஙனே நம் முன்னேர்கள் ஏககண்டமாக அருளிச் செய்யுமவற்றை உற்றுநோக்குமிடத்து நம்மிடத்தில் ஒரு வகையான கைம் முதலும் இருக்கலாகாதென்றும், ஏதாவது இருந்தால் அது எம்பெருமானுடைய திருவருளுக்கு இடையூருகுமென்றும் தெரியவருகிறதல்லவா? இதுவே சாஸ்த்ரார்த்தமானுல் *மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு* இத்யாதிகளான பல்லாயிரம் விதிகள் பழுதாகியொழியுமன்ருே? குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினுற்போலே எத்தனை கர்த்தவ்யங்களை யேறிட்டு சாஸ்த்ரங்கள் விதித்திருக்கின்றன வென்று பார்த்தால் அவை கங்குகரையில்லாமலன்ருே காண்கின்றன. அவையெல்லாம் அர்த்தமில்லாத வார்த்தைகளென்ரு சொல்லி விடுவது? நாம் அகிஞ்சநர்களாகவே யிருக்கவேண்டுமென்பது சாஸ்த்ரார்த்தமா? விதிசாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டு விஹிதங்களைக் குறையறச் செய்யவேணுமென்பது சாஸ்த்ரார்த்தமா? என்று வேதாந்திகளுக்குள் விசிகித்ஸை தோன்றக்கூடியதுண்டு. (45)

46. விசிகித்ஸாபரிஹார அவதாரிகை

பகவத்விஷயம் ஈடு முப்பத்தாருயிரப்படியில் (5—7—3) *கருளப்புட்கொடி சக்கரப்படை* என்கிற வானமாமலைப் பாசுரத்திற்கு அவதாரிகை இங்ஙனேயுள்ளது;—" அருளாய் என்றீர்; அருளக்கடவோம்; அதிலொரு தட்டில்லை; ஆனுலும் *சாஸ்த்ரபலம் ப்ரயோக்த்ரி* *கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்* அன்ருே. அருள் பெறுவார் பக்கலிலேயும் சிறிது உண்டாக வேணுங்காணுமேயென்ன; இது மேலுத்தைக்கு இட்ட மர்யாதையோ? கீழுத்தைக்கு ஏதேனுமுண்டோ? ஆனபின்பு இத்தலையில் கிஞ்சித்காரத்தை விட்டு உன் க்ருபையாலே செய்தருளாயென்கிருர். இவ்வளவும் வர இதுக்கு முன்பு நீ நிர்ஹேதுகமாக விஷயீகரித்தபின்பு மேலும் நீ செய்தருள வேணுமென்கிருர் "—என்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸகல சாஸ்த்ர தத்வஜ்ஞர்களில் தலைவரான நம்பிள்ளையினுடைய இந்த ஸ்ரீஸூக்தியினால் என்னவிதமான சாஸ்த்ரார்த்தம் தேறுகிறதென்று பார்க்க வேணும். இதில் எம்பெருமானுடைய வொருவாதமும் ஆழ்வாருடைய வொரு ப்ரதிவாதமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. எம்பெருமானுடைய வாதம் எவ்விதமானது? ஆழ்வாருடைய ப்ரதிவாதம் எவ்விதமானது? என்று முன்னம் பார்க்கவேணும்; ஆழ்வாருடைய ப்ரதிவாதம் யுக்தமான முறையிலுள்ளதா? என்று பிறகு பார்க்கவேணும். எம்பெருமானுடைய வாதம் என்னவென்றால்; பேறுபெற வேண்டியவர்கள் ஒரு கைம்முதலுமில்லாமல் வாளாபெற்று விட முடியாது; பேறுபெறுதற்குரிய வழிகளை [ஸாதனங்களை] நான் சாஸ்த்ரங்களில் பஹுமுகமாகத் தெரிவித்திருக்கிறேன்; அவற்றை யநுஷ்டிக்குமவர்களுக்குப் பேறுகிடைக்குமேயொழிய 'என் பக்கல் ஒன்றுமில்லை' என்பார்க்கு ஒருபேறும் கிடைக்காது. ஒரு முதலுமில்லாதவர்களும் பேறுபெற்று விடுவதென்றால் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வரும். சாஸ்த்ரார்த்தங்களும் கலங்கிப் போகும். அப்படியாகாமைக்காக நான் நூல்வரம்பு இட்டிருக்கிறேன்; அதைக் கடக்கலாகாது. அதைப் பரிபாலனம் பண்ணினார்க்கொழிய மற்றையோர்க்குப் பேறு கிடைக்காது; ஆழ்வீர்! நீர் என்பக்கலில் ஒன்றுமில்லையென்று சொல்லிக்கொண்டு பேறுபெற விரும்புவது பயனற்றது—என்கிறவிது எம்பெருமானுடைய வாதம். இதில் ஒருவிதமான குறையும் சொல்லமுடியாது. *மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் இதை உள்ளபடி தெரிந்து கொள்ளாதவருமல்லர். *வணக்குடைத்தவநெறி வழிநின்று புறநெறி களைகட்டு, உணக்குமின் பசையற அவனுடை யுணர்வு கொண்டுணர்ந்தே* [திருவாய்மொழி 1—3—5] என்பது முதலான பாசுரங்களில் இதனை ஆழ்வார்தாமே வெளியிட்டுமிருக்கிறார். ஆனால் எம்பெருமானுடைய வாதத்திற்கு ஆழ்வார் செய்யும் ப்ரதிவாதமென்னவென்றால்; கேண்மின்;

பிரானே! எமக்கு நீ கரணகளேபரப்ரதானம் பண்ணி எம்மை நீ யுண்டாக்கினது நாங்கள் ப்ரார்த்தித்தோ? அல்லவே; "அசிதவிசேஷிதாந் ப்ரலய ஸீமநி ஸம்ஸரத: கரணகலேபரைர் கடயிதும் தயமாநமநா:" என்றும், "அசிதவிசிஷ்டாந் ப்ரலயே ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேதா, கரணகலேபரயோகம் விதரஸி வ்ருஷசைலநாதகருணே! த்வம்" என்றும் சொல்லுகிறபடியே உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலன்றோ கரணகளேபரப்ரதானம் பண்ணிற்று. இதனால் ஸம்ஸாரிகள் பக்கலிலே உனக்கொரு நிர்ஹேதுக கருணையுண்டென்று தெரியவருகிறது. அந்த கருணை நித்யஸ்ரீர் நித்யமங்கலமாக எப்போதும் விளங்கக்கடவதேயன்றி ஒருகாலிருந்து மற்றொருகால் மறையுமதன்றே. அந்த க்ருபையைக்கொண்டே பரமபுருஷார்த்தத்தையும தந்தருளத்தட்டென்ன? முதலில் ஒரு கைம்முதலையும் எதிர்பாராமல் காரியம் செய்த நீ இப்போது மாத்திரம் பேற்றுக்குக் கைம்முதல் வேணுமென்கை யுக்தமாகுமோ?—என்கிறவிது ஆழ்வார் செய்யும் ப்ரதிவாதம். .... (46)

47. வாதப்ரதிவாதங்களின் நேர்மை

ஆழ்வாருடைய இந்த ப்ரதிவாதம் யுக்தந்தானாவென்று இனி விமர்சிக்க வேண்டும். ஆதியில் எம்பெருமான் நமக்குக் கரணகளேபரப்ரதானம் பண்ணினது நிர்ஹேதுகமானவொரு அநுக்ரஹத்தின் கார்யமேயாயினும், கரணகளேபரங்களைக் கொடுத்து சாஸ்த்ரங்களையும் காட்டிக்கொடுத்து, அவற்றில் ஸ்வப்ராப்தி ஸாதனங்களையும் தெரிவித்து அவ்வழியாகத் தன்னைப்பற்றுவார்க்கே பேறு தருவதாக வெளியிட்டிருக்கிறானென்னுமிடம் அபலபிக்கவொண்ணாதது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இது தன்னை ஆழ்வார் அறியாதவரல்லர். அறிந்துவைத்தும் வழியல்லாவழியில் பிரதிவாதம் செய்வது எங்ஙனே யுக்தமாகும்? ஆகையாலே ஆழ்வாருடைய ப்ரதிவாதம் அயுக்தந்தானே? என்னவேண்டா. ஆழ்வாருடைய திருவுள்ளம் என்னவென்றால்—இதுதான் முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கது. இப்போது நாம் தெரிவிக்கப்போகிற விஷயம் ஆழ்வாருடைய திருவுள்ளம் மாத்திரமன்று; ஸகல ஆசாரியர்களுடையவும் ஸகல மஹர்ஷிகளுடையவும் ஸகல சாஸ்த்ரங்களினுடையவும் கருத்து இதுவே காணீர். எதுவென்னில்; இரண்டு விஷயங்கள் தெரிவிக்கிறோமிங்கு; கேண்மின். முதல் விஷயமாவது—

பேற்றின் கனத்தையும் நாம் செய்யும் ஸாதநாநுஷ்டானத்தின் புன்மையையும் உற்று நோக்குமிடத்து அந்த கனத்த பேற்றுக்கு எதையும் ஸாதனமாக நினைக்கத்தகாது. அதற்கு ஏற்ற ஸாதனம் உலகில் கிடையவே கிடையாது. ஸர்வசக்தனை சரண்யன் இதையொரு வியாஜமாகக்கொண்டு காரியம் செய்கிறனென்று நாம் நினைக்கலாமேயொழிய இதை ஸாதனமாகக்கொண்டு செய்கிறனென்று நினைக்கவே தகாது. கீதையில் "ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்" என்று சொன்னபடியே நம்முடைய கரணக்ராமங்கள் குர்வத்ரூபங்களாகையாலே எப்போதும் ஏதேனுமொரு செய்கையைச் செய்துகொண்டேயிருப்பனவாதலால் நாம் வெறுமனேயிருக்கப் போகிறதில்லை. செய்கிற காரியங்களில், சூதுசதுரங்கம் பொருவது முதலியனவாகச் சில செய்கைகளும், பகவத் பாகவதஸேவை செய்தல் ஸத்க்ரந்த காலக்ஷேபங்கள் செய்தல் முதலியனவாகச் சில செய்கைகளும் தேறுகின்றன. நன்மைகளையே செய்து வருகிறோமென்றுமில்லை, தீமைகளையே செய்து வருகிறோமென்றுமில்லை. எல்லாவற்றையும் கலந்த கட்டியாகச் செய்து வருகிறோம். நன்மைகளைச் செய்யும்போது நமக்கே ஒரு ஆத்மத்ருப்தியுண்டாகிறது. நம்முடைய ஜன்ம ஸாபல்யம் பெற்றதாகவும் நினைக்கிறோம். புழு குறித்தது எழுத்தாமாபோலே நம்முடைய செயல்கள் அவன்திருவுள்ளத்திலே நல்லதாகப் பட்டுவிட்டால் இது அவனது கருணையின் திறமென்று கொள்ளவேணுமேயல்லது வேறொன்றும் கொள்ளத்தகாது. ஜ்ஞானசக்திகளில் குறையற்ற மஹான்களும் 'அகிஞ்சநோஹம்' என்றுதான் உள்ளபடி யநுஸந்திக்கிறார்கள். *ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ ந பக்திமாந் —அகிஞ்சந:* என்கிறார் ஆளவந்தார்; *ந்யஸ்யாமி அகிஞ்சந: ஸ்ரீமந்!* என்கிறார் தேசிகன். ஆகிஞ்சந்யமாவது என்ன? தங்களிடம் ஒருவிதமான கைம்முதலுமில்லாமைதானே. இப்படி தங்களை அகிஞ்சநர்களாகச் சொல்லிக்கொள்ளும் பரிபூர்ணர்களுடைய கருத்து என்ன? கனத்த பேற்றுக்குத் தகுதியான கைம்முதல் உண்மையில் ஒன்றுமில்லை யென்பதுதானே. ஒரு சிறிதளவு இருந்தாலுங்கூட அதுதானும் "அந்யதா க்ருதமக்ருதம் பவதி" [அடைவுகேடாகச் செய்தது செய்யாததோடொக்கும்] என்கிற நியாயத்தின்படி அஸத்கல்பமே.

இனி இரண்டாவது விஷயமாவது—"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:" என்கிற ப்ரமாணத்தினால் ஜாயமாந கடாக்ஷம் பெறாதவர்களுக்கு மோக்ஷார்த்த சிந்தையே உண்டாகமாட்டாதென்று தெளிவிக்கப்படுகிறது. ஜாயமாநகடாக்ஷமாவது கருக்குழியில் கிடக்கும் போதோ, கருக்குழியினின்று வெளிவரும் போதோ நேருகிற பகவத் கடாக்ஷம். அஃது உள்ளவர்களுக்கே ஸத்ப்ரவ்ருத்தியுண்டாகும் என்பது நூற்கொள்கை. இதை யடியொற்றியே *கருவிலே திருவிலாதீர்!* என்று திருமாலையிலருளிச் செய்தது. ரஹஸ்யத்ரய ஸாரத்தில் "நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:" என்று தேசிகன் பணித்ததும் இதை யடியொற்றியே. நிதாநம் என்பதற்கு ஆதிகாரணம் என்றுபொருள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"நிதாநம்து ஆதிகாரணம்" என்று அமரம். சேதநர்களுக்கு விளையும் ஸகல ஸுக்ருதங்களுக்கும் பகவானே மூலகாரண மென்று முடிந்த பின்பு, நம்மிடத்தில் ஏதோ ஸுக்ருதமிருப்பதாகவும், அது பேற்றுக்கு ஸாதனமான கைம்முதலாகவும் கொள்வதற்கு நியாமேயில்லை-என்பதுதான் ஸகலசாஸ்த்ர ஸாரார்த்தம். ஆகவே ஆழ்வாருடைய ப்ரதிவாதம் மிகவும் ஸமஞ்ஜஸமானதே யென்று முடிந்தது. நமக்கு நன்மைகளில் குறையிருக்கக்கூடாது; நன்மை குறையற்றிருப்பதனுல்தான் பேறு கிடைக்கிறது என்று நினைக்கவும் கூடாது. அவனது நிர்ஹேதுகக்ருபையே நமக்குத் தஞ்சமென்கிற அத்யவஸாயமொன்றே நமக்குப் புகல்-என்கிற விதுதான் சாஸ்த்ரார்த்தம். .... (47)

48. "அசிதயநாநாதி ஸம்பந்தங்கள்" என்பதில் சங்கையும் பரிஹாரமும்

முமுக்ஷுப்படியில் (5) "ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து" இத்யாதியான சூர்ணையின் வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள்—"ஸம்ஸாரிகளாகிறார்-அநாத்யசித்ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநாருசி விவசராய் ஜந்மமரணாதி க்லேசபாகிகளாய்த் திரிகிற பத்த சேதநர்" என்றருளிச்செய்துள்ளார். இங்கு அநாத்யசித்ஸம்பந்தமென்று சப்த ப்ரயோகமிருப்பதால் ஆத்மாவுக்குண்டான அசித்ஸம்பந்தத்திற்கு ஆதியே இல்லை யென்று சொன்னதாக ஆகிறது. ஆத்மாவுக்கு அசித்ஸம்பந்தம் வந்தேறியன்று, ஸ்வரூபஸித்தம் என்றல்லவா தேறிவிடுகிறது; இது வாஸ்தவமன்றே. ஆத்மாவுக்கு அசித்ஸம்பந்தம் வந்தேறியே யொழிய ஸ்வரூபமன்றே. அப்படியிருக்க அதனை அநாதியென்று எங்ஙனே சொல்லலாமென்று சங்கை.

இதைப் பற்றி விசதவாக்சிகாமணிகளான ஸ்வாமி தாமே ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தில் மிக விளக்கமாக விவரித்துள்ளார். அதில் (10) "ஏதந்நிமித்தம்முன்னமே முதல் முன்னமேயான அசிதயநாநாதிஸம்பந்தங்கள்" என்னும் சூர்ணையில், ஆத்மாவுக்கு அசித்ஸம்பந்தமும் பகவத்ஸம்பந்தமுமாகிற இரண்டும் அநாதியென்று காட்டப்பட்டது. மேல் (12) "ஒன்று கூடினதாய் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழவடியேனென்னுமதொன்றுமே ஒழிக்கவொழியாதது" என்னும் சூர்ணையில் ஆத்மாவுக்கு அசித்ஸம்பந்தம் வந்தேறியென்னுமிடம் மூதலிக்கப்படுகிறது. இவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திகள் இவை;—"அசித்ஸம்பந்தம் *பெருந்துயரிடும்பையில் பிறந்து கூடினேனென்கையாலே ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்றிக்கே வந்தேறியாய் *வினை பற்றறுக்கும்* என்று ஒரு ஸர்வ சக்தி ஸவாஸநமாகப் போக்க *அடைந்த வருவினையோடல்லல் நோய் பாவம் மிடைந்தவை மீண்டொழிய* என்கிறபடியேநிவ்ருத்தமாய்விடுகையாலே *திருமாலேநானுமுனக்குப் பழவடியேன்* என்னும்படி அநாதியாயிருக்கிற சேஷசேஷிபாவரூப பகவத்ஸம்பந்தமொன்றுமே *உறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது* என்கிறபடியே ஈச்வரனுலும் சேதநனுலும் கழிக்கப் பார்த்தாலும் கழிக்கப்போகாததென்கை. இத்தால், அசித்ஸம்பந்தம் ஆகந்துகமாய் கர்மோபாதிகமாகையாலே அநித்யமாயிருக்கும்; அயநஸம்பந்தம் [அதாவது நாராயண ஸம்பந்தம்] அநாதியாய் நிருபாதிகமாகையாலே நித்யமாயிருக்குமென்றதாயிற்று. ஆனல் ஆகந்துகமான இத்தை [அசித்ஸம்பந்தத்தை] அநாதியென்பானென்னென்னில், வந்தேறின காலத்துக்கு அடி தெரியாமையாலே அநாதியென்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலே. ஒருநாள்வரையிலே பகவத்ப்ரஸாதத்தாலே அது கழியக் காண்கையாலே வந்தேறியென்னுமிடம் நிச்சிதமிறே" என்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இந்த ஸ்ரீஸூக்தியில், அசித்ஸம்பந்தம் ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்றிக்கே வந்தேறியாயிருக்க, அதனை அநாதியென்று வழங்குவதன் கருத்து நன்கு விசதமாக்கப் பட்டிருக்கையாலே சங்கைக்கு இடமில்லை. .... (48)

49. மணவாளமாமுனிகளின் வியாக்கியான காம்பீர்யம்

மணவாளமாமுனிகளின் ரஹஸ்யவ்யாக்கியானங்களில் பலவிடங்களில், அதவா என்று தொடங்கியும், அன்றிக்கேயென்று தொடங்கியும் யோஜநாந்தரம் காட்டப்படுகிறது. அங்கு தாத்பர்யத்தில் எள்ளளவும் பேதமில்லை போல் காணப்படும். அதனால் இந்த பக்ஷாந்தரம் எதற்காக ப்ரஸ்தாவிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ள முடியாமலிருக்கும். இதற்கு ஓரிடம் எடுத்துக் காட்டுவோம். ஆசார்யஹ்ருதயத்தில் (76) "பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்; பிறவிபார்க்கில் அஞ்சாமோத்தும் அறுமூன்றும் கழிப்பனும்" என்கிற சூர்ணையின் வியாக்கியானத்தில் இரண்டு வகையான யோஜனைகள் காட்டப்பட்டிருக்கின்றன. இரண்டிலும் "அநிஷ்ட ப்ரஸஞ்ஜநம் பண்ணுகிறார்" என்கிற அவதாரிகையுள்ளது. அதை மாத்திரம் பார்ப்பவர்கள் முந்தின யோஜனைக்கும் பிந்தின யோஜனைக்கும் வாசி தெரியவில்லையே என்று திகைப்பர்கள். பங்க்திகளைப் பூர்த்தியாக ஸேவித்தாலுங்கூட இரண்டு யோஜனைகளுக்கு விஷயம் விளங்கவில்லையே என்று திகைப்பர்கள் சிலர். இங்ஙனே திகைக்கவேண்டுமிடங்கள் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களில் பலபலவுள்ளன. மாமுனிகளின் அஸாதாரணமான ஜ்ஞான வைசத்யமடியான இப்படிப்பட்ட ஸ்தலங்களில் ஸாதாரணப்ராஜ்ஞர்கள் திகைப்பது வியப்பன்று. எடுத்துக்கொண்ட இவ்விடத்தை விளக்குகிறோம்.

மூலஸ்ரீஸூக்திக்கு என்ன அர்த்தமாகிறதென்று பார்ப்போம். (மூலம்) "பேச்சுப்பார்க்கில் கள்ளப்பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்." இத்யாதி. திருவாய்மொழியின் ஏற்றமும் ஆழ்வாருடைய வைபவமும் நிரூபிக்கப்பட்டுவரும் ஸ்தலமிது. ஸம்ஸ்க்ருதபாஷையிலுள்ள க்ரந்தந்தானுயர்ந்தது, தமிழ்ப்பாஷையிலுள்ளது இழிவானதே என்று கொள்கையுடையார்க்கு ஆப்த்தி கூறுகிறார் [மூலகாரர்] முதல் வாக்யத்தினால். "கள்ளப்பொய்ந்நூல்களும் க்ராஹ்யங்கள்" என்றது ஜைந பௌத்தாதிகளின் க்ரந்தங்களும் உபாதேயமாக வேண்டிவரும் என்றபடி. இரண்டு யோஜனைகளிலும் இப்பொருளில் வாசியில்லை. 'பேச்சுப் பார்க்கில்' என்கிற வார்த்தையானது இரண்டு விதமான பொருளை ஸஹிக்கிறது; ஸம்ஸ்க்ருத பாஷைதான் உயர்ந்தது என்று சொல்லப் பார்த்தால்-என்கிற பொருளும், த்ராவிடபாஷை மட்டமானது என்று சொல்லப்பார்த்தால் என்கிற பொருளும் கொள்ளகூடிய நிலைமையில் மூலம் அமைந்திருக்கிறது. மூலகாரருக்கு எந்தப் பொருள் விவக்ஷிதமென்றால் இரண்டும் விவக்ஷிதமாகக் குறையில்லை. பேச்சு என்கிற சொல் பொதுச் சொல்லாகையாலே ஸம்ஸ்க்ருதப் பேச்சு என்றும் அர்த்தமாகும். தமிழ்ப்பேச்சு என்றும் அர்த்தமாகும். மேலே 'பிறவி பார்க்கில்' என்றவிடத்திலும் பிறவியென்னுஞ்சொல் பொதுச்சொல்லாகையாலே உத்தமஜாதியிற் பிறவியையுங் காட்டும், கீழ்ச்சாதிகளிற் பிறவியையுங் காட்டும். பாஷையிலும் ஜாதியிலும் கண்வைக்காமல், விஷயத்தை மாத்திரமே பார்ப்பவர்களுக்கு வக்தவ்யமானது ஒன்றுமில்லை. விஷயத்தைப் பாராமல் பாஷையையும் ஜாதியையுமே பார்ப்பவர்களுக்கு அநிஷ்டப்ரஸஞ்ஜநம் செய்யப்படுகிறதிங்கு. பாஷையைப் பார்ப்பவர்கள் இருவகைப் படுவர்- த்ராவிட பாஷையிலுள்ளது அநுபாதேயம் என்பவர் ஒருவகை; ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ளது உபாதேயம் என்பவர் மற்றொரு வகை. இவ்விரு வகுப்பினர்க்கும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உத்தேச்யம் ஒன்றேயாகிலும் ப்ரகாரபேதமுள்ளதுதான். இதற்குச் சேர இரண்டு யோஜனைகள் காட்டப்பட்டன. பேச்சுப் பார்க்கில்-(1) பேச்சுப்பார்த்து இகழ்வதானால். (2) பேச்சுப் பார்த்து கௌரவிப்பதானால். பிறவிபார்க்கில்-(1) பிறவியைப்பார்த்து இகழ்வதானால்; (2) பிறவியைப் பார்த்து கௌரவிப்ப தானால். இப்படியாக ஆழ்ந்து வியாக்கியானம் செய்தருளும் திறமை மணவாள மாமுனிகளிடத்தன்றி மற்றையோரிடத்துக் காண வரிது. .... (49)

50. புரிவதுவும்புகைபூவே—பட்டர் நல்வார்த்தை

நம்முடைய பூருவாசாரியர்கள் ஸகல சாஸ்த்ரப் புலவர்களான பரம ரஸிகர்கள். "கலையிலங்கு மொழியாளர்" என்றபடி அவர்களது வார்த்தைக ளெல்லாம் அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்கள் பொதிந்து விளங்குவன. அவர் களுடைய நல்வார்த்தைகள் அருளிச்செயல் வியாக்கியானங்களில் மலிந்துள் ளன. அவற்றுள் பட்டருடைய வார்த்தையொன்று. ஒரு நாள் உபந்யாஸத் தில் *பரிவதில் லீசனைப் பாடி* என்கிற திருவாய்மொழிப்பாசுரத்தில் "புரிவதுவும் புகைபூவே" என்றவிடத்தை யெடுத்துக்கொண்டு "இவ்விடத்தில் அகில்புகை யென்ருவது கருமுகைப்பூ என்ருவது சிறப்பித்துச்சொல்லாமையாலே ஏதேனும் ஒரு புகையும்பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுகையிட்டுப்புகைக்கலாம்; கண்டகாலிப்பூவும் சூட்டலாம்" என்று ரஸமாக உபந்யஸித்தார் பட்டர். அதை நஞ்சீயர் கேட்டு, "ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்" [கண்ட காலிப்பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது] என்று சாஸ்த்ரம் மறுத் திருக்க, இப்படி அருளிச் செய்யலாமோ? என்று கேட்க, அதற்கு பட்டர் அரு ளிச்செய்த ரஸோக்தி—"சாஸ்த்ரம் மறுத்தது மெய்தான்; கண்டகாலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுத்ததன்று. அடியார்கள் அப்பூவைப்பறித் தால் கையில் முள் பாயுமே! என்று பக்தர்கள் பக்கல் தயையினால் சாஸ்த்ரம் நிஷேதித்ததேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை" என்றும். (50)

51. எம்பாருக்கு ஆண்டானருளிச்செய்த நல்வார்த்தை

திருவாய்மொழியில் (2—9—2) *ஞானக் கை தா* என்றவிடத்து ஈட்டில் "எம்பார்க்கு ஆண்டானருளிச்செய்த வார்த்தையைஸ்மரிப்பது" என்றுள்ளது. இதன் விவரணம் வருமாறு:—முதலியாண்டான் ஒருகால் திருநாராயணபுரத் தில் எழுந்தருளியிருக்கையில் அவருடைய சிஷ்யரான வொரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலிலே வந்து எம்பார் ஸந்நிதியிலே கைங்கரியம் பண்ணிக்கொண்டிருந் தார். அப்போது ஒருநாள் சில ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எம்பார் திருவிலச்சினை ஸாதிக்கவிருக்கையில் இந்த ஸ்ரீவைஷ்ணவர் தமக்கும் திருவிலச்சினை (சக்ராங் கனம்) ஸாதிக்கும்படி வேண்டினர். அப்போது எம்பார் 'உமக்கு விசேஷ ஸம்பந்தமுண்டோ?' என்று அவரைக்கேட்க, 'தேவரீருடைய ஸம்பந்தமே ஸம்பந்தம்' என்று அவர் விண்ணப்பம் செய்தாராம். அவ்வளவிலே எம்பார் இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தவர் என்றறியாதே இவர்க்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப்பண்ணி இவரைக்கொண்டு கைங்கரியங்களுங் கொண்டெழுந் தருளியிரா நிற்கையில் முதலியாண்டானும் திருப்பிக்கோயிலிலே எழுந்தருள; அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆசார்ய ப்ரேமத்தாலே ஆண்டானிடம் சென்றுசேர, ஆண்டானும் முன்புபோலே இவரைக்கொண்டு வேண்டுங்காரியங் களைக் கொண்டருளியிருந்தார். அப்போது எம்பார் விசாரித்து அந்த ஸ்ரீவைஷ்ண வர் ஏற்கெனவே ஆண்டானுடைய சிஷ்யர் என்பதையறிந்து, ஆண்டானிடம் எழுந்தருளி 'கனக்க அபசாரப்பட்டேன். க்ஷமித்தருளவேணும்' என்ருராம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அப்போது ஆண்டான் எம்பாருடைய திருவுள்ளத்தில் க்லேசத்தையறிந்து எம்பாரை நோக்கி அருளிச்செய்த வார்த்தை :—"ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தால் எடுக்குமவர்களுக்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே. அப்படியேயாகிறது"—என்றும். .... (51)

52. "கிமிதம்புஸ்தகம் ?—இதமபி மயா படிதம் !"

ஒரு வித்வான் தம்முடைய பரமஸுந்தரியான மகளுக்கு வரன் தேடிக் கொண்டிருந்தார். அவரும் அவருடைய குமாரர்களும் இப்பெண்ணும் ஆக எல்லாரும் நன்கு ஸம்ஸ்க்ருதம் படித்தவர்களாதலால் நன்றாகப் படித்த வரன் வேணுமென்று தேடிக்கொண்டிருந்தார். ஒருவர் தம்முடைய குமாரனுக்கு நல்ல படிப்பு இருப்பதாகப் பொய்சொல்லி வஞ்சித்து விவாஹத்தை முடித்துக் கொண்டார். அந்த மணவாளப்பிள்ளை பாடசாலைக்குப் போய் வந்து கொண்டிருந்ததனால் மெய்யே படிப்பாளியென்று மாமனார் முதலானவர்களும் ப்ரமித்திருந்தார்கள். விவாஹமோ முடிந்துவிட்டது.

இப்படியிருக்கையில், ஸரஸ்வதீ பூஜையன்று முதல்நாள் ஜாமாதாவை மாமனார் தம் இல்லம் வரும்படி அழைத்தார். ஜாமாதாவும் தன் தகப்பனாரிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளச் சென்றான். அப்போது தகப்பனார் 'பயலே! உனக்கோ படிப்பு ஒன்றும் பலிக்கவில்லை; உன்னை மஹாபண்டிதனாக நான் பொய் சொல்லி ஏதோ விவாஹத்தை முடித்துவைத்தேன்; உன் சாயம் வெளிப்படுவதற்கு இன்று ஸந்தர்ப்பம் வந்துவிட்டதே! வேறு பண்டிகை நாள்களாக இருந்தால் பாதகமில்லை; இப்போது ஸரஸ்வதீ பூஜைக்காக உன்னையழைக்கிறார்கள். அவர்களெல்லாரும் பெரிய பண்டிதர்களாகையால் அவர்களில்லத்தில் பலபலபுஸ்தகங்களுண்டு; அவற்றையெல்லாம் உன்மாமனாரும் மைத்துனன்மார்களும் எடுத்துப் பரிஷ்காரப்படுத்துவர்கள்; அந்த ஸமயத்தில் நீ அவர்களெதிரில் ஊமைபோல் உட்கார்ந்திருக்க வேண்டியதாகும்; உன்னுடைய சாயம் வெளிப்படுவதோடு நில்லாமல் என்னுடைய பொய்ம்மையும் வெளியாகிவிடுமேயென்று அஞ்சுகிறேன்' என்றார். அதற்கு அவன் ஒன்றும் பதில் சொல்ல மாட்டாமல் தலைகுனிந்து நின்றான்.

மறுபடியும் தகப்பனார், பயலே! நான் ஒரு உபாயம் சொல்லித்தருகிறேன்; நாளை காலை அவசியம் வருவதாக அவர்களுக்கு நீ பதில் சொல்லியனுப்பிவிடு; இன்றிரவு முழுவதும் ஸம்ஸ்க்ருதத்தில் நாலிரண்டு வார்த்தை உனக்கு வரும்படி நெட்டுருப்போட்டு வைக்கிறேன். அதை நீ நாளைக்கு அங்கு உபயோகப்படுத்தினால் ஒருவாறு மானத்தோடு திரும்பி வரலாம்' என்றார். குமாரன் அப்படியே இசைந்தான். தகப்பனார் அன்றிரவுமுழுவதும் மகனுக்குப் பாடம் பண்ணிவைத்தது என்னவென்றால்; உன் மாமனார் ஏதாவது ஒரு பெரிய புஸ்தகம் எடுத்தாரானால் அப்போது நீ 'கிம் இதம் புஸ்தகம்' என்று கேள்; அவர் இன்ன புஸ்தகமென்று பதில் சொல்லுவர்; அப்போது நீ "இதம் மயா படிதம்" என்று சொல்லு. மறுபடியும் அவர் வேறொரு பெரிய புஸ்தகமெடுக்கும் போதும் 'கோயம் ஸ்ரீகோச:' என்று கேள்; அவர் பதில் சொன்னவுடனே "ஏததபி மயா அதீதம்" என்று சொல்லு. என்றிப்படிச் சிலவார்த்தைகளை வெகு சிரமப்பட்டுக் கற்பித்து வைத்தார். அவற்றை அப்படியே உபஸ்திதி செய்துகொண்டு மாப்பிள்ளை மாமனாரகத்திற்குச் சென்று சேர்ந்தாயிற்று. மறுநாள் காலை முதனாளிரவெல்லாம் நெட்டுருப்போட்ட ஸம்ஸ்க்ருத வார்த்தைகளை உபயோகப்படுத்த ஸமயமும் வாய்த்து விட்டது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸரஸ்வதிபூஜைக்கு ஆரம்பித்த மாமனர் ஒருபெரிய ஓலைச்சுவடியை அவிழ்த்தார். கிமிதம் புஸ்தகம் (இது என்ன புஸ்தகம்?) என்று ஜாமாதா கேட்டார். அதற்கு மாமனர் 'அயம் சடகோபஸ்ரீஷத் பாஷ்ய ஸ்ரீகோச:' என்றார். உடனே மாப்பிள்ளை "இதம் மயா படிதம்" (இது நான் வாசித்திருக்கிறேன்) என்றான். அதுகேட்டு எல்லோரும் ஸந்தோஷித்தார்கள். மாமனர் மறுபடியும் ஒருபெரிய புஸ்தகம் அவிழ்த்தார். "கோயம் ஸ்ரீகோச:" என்றான் ஜாமாதா. "சாபர பாஷ்யமிதம்" என்றார் மாமனர். "ஏதத்அபி மயா அதீதம்" (இதுவும் நான் வாசித்திருக்கிறேன்) என்றான் ஜாமாதா. அது கேட்டும் எல்லாரும் மஹாநந்தமடைந்தார்கள். மறுபடியும் ஒரு ஸ்ரீகோசத்தை அவிழ்க்கும்போதும் இதமபி மயாபடிதமென்றான். மாமனர் வேறொரு பெரியபுஸ்தகம் அவிழ்த்தார். அஃது என்னவென்றால், இனிமேல் எழுதுவதற்காக ஏடுகளைச் சேமித்து வைத்திருக்கிற எழுதாத புஸ்தகம். 'கோயம் ஸ்ரீகோச:' என்றார் ஜாமாதா. 'அலேகக்ரந்த:' (எழுதாத ஏடு) என்றார் மாமனர். 'இதமபி மயா படிதம்' (இதுவும் நான் வாசித்திருக்கிறேன்) என்றார் ஜாமாதா. அது கேட்டவுடனே அவர்களுக்கு துக்கம் தாங்க முடியாததாயிற்று. இந்த ஜாமாதாவின் மனைவியும் நன்றாகப் படித்தவளாகையாலே இப்படிப்பட்ட உலக்கைக்கொழுந்து புத்திசாலியான பர்த்தா நமக்கு வாய்த்தானே! என்று மிக்கசோகம் பொறுக்ககில்லாமல் 'முஸலகிஸலயமே!' என்று சொல்லி அவன் தலையில் ஒரு குட்டு குட்டிச் சென்றாளாம்; அவன் அந்த அவமானம் பொறுக்கமாட்டாமல் உடனே எழுந்து வெளியேறி காசிக்குச் சென்று வெகு ஆஸ்தையுடன் வாசித்து சதுச்சாஸ்த்ர பண்டிதனாகி மீண்டுவந்து முஸலகிஸலயம் என்கிற ஒரு க்ரந்தத்தை இயற்றினானும். இந்த க்ரந்தம் இப்போதும் கிடைக்கிறதென்கிறார்கள்.

சென்னை ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபையில் அச்சிட்ட (தெலுங்கு லிபி) ஸம்ப்ரதாய அகராதியில் 'அழகிய மணவாளச் சீயர்' என்ற திருநாமத்தின் விவரணத்தில் இந்த முஸலகிஸலயக்ரந்த நாமநிர்தேசமும் வேறொரு கதையும் காண்கிறது. அது ஸம்ப்ரதாய கோஷ்டியில் ஏற்பட்ட கதையென்பர்.

53. நமக்கு எம்பெருமானேடு பழக்கம்வேண்டும்

ஒரு தலைநகரில் பெரிய வணிகரொருவரிருந்தார். அவர்க்குப் பெரிய வியாபாரிகள் பலர் நண்பர்களாயிருந்தனர். பல தனிகர்களின் பரிசயமும் அவர்க்கு விசேஷமாகவுண்டு. பல தொழிலாளர்களின் நேசமுமுண்டு. பெரிய அதிகாரிகள் பலரும் தெரியும். பெரிய ஸ்டீமர் வியாபாரிகளுடைய நட்புமுண்டு. தங்கம் வெள்ளி வியாபாரிகள் தரகர்கள் மற்றும் பல பெரிய மனிதர்களும் அவர்க்கு வசப்பட்டிருந்தார்கள். எல்லாரோடும் நன்றாய்ப் பழகிச் சாதுர்யமாய் அச்சமில்லாமல் அந்த வணிகர் பேசுவார். எல்லாவிதமான வியாபாரங்களிலும் பூர்ணமான ஸாமர்த்தியம் அவர்க்கு இருந்தது. ஆனால் அவர் தம் தகப்பனாரோடு மாத்திரம் பேசமாட்டார். பேசவும் தெரியாது அவர்க்கு. தகப்பனாரோடு பேச மிகவும் வெட்கப்படுவர். தகப்பனாரெதிரே போகவும் மிகக்கூசுவர். நண்பர்களே!, இங்கு ஆலோசிக்க வேண்டியதென்ன? எவன் தகப்பனாரெதிரே போகவும் அவரோடு பேசவும் உற்சாகங்கொள்ளாமல் ஒதுங்கியிருக்கிறானே அவனிடம் அவனது தகப்பனாருக்கு எப்படி அன்பு இருக்கும்? தகப்பனார் ஸம்பாதித்த ஸொத்தை அநுபவிக்கிறான்; தகப்பனாருடைய தயவினால் யதேஷ்டமாக ஸுகம் அனுபவித்துக்கொண்டு மிருக்கிறான். ஆனால் தகப்பனாரோடு பேசுவது மாத்திரமில்லை யென்றால் இது நியாயமாகுமா?

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அன்பர்களே!, அந்த வணிகரைப் போலவேதான் நாமும் உலக வியவஹாரங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறோம். நமது காரியங்களுக்காகப் பலரோடும் பலவிதமாகப் பேசுகிறோம், பழகுகிறோம்; ஆனால் நமக்கெல்லாம் பிதாவும் பரமதயாளுவுமான பகவானோடு ஒரு நாளாவது ப்ரீதியோடு மனப்பூர்வமாக நாம் பேசுகிறோமா? பழகுகிறோமா என்றால் இல்லை. நாம் அந்த ஸர்வேச்வரனுடைய க்ருபையினால்தான் இவ்வுலகத்திற்கு வந்தோம்; அவருடைய தயவினால்தான் தரித்திருக்கிறோம். அவரருளிய உணவுகளைத் தான் புஜிக்கிறோம். அவருடைய கருணையால்தான் கூடியவரையில் நோயற்ற வாழ்வும் குறையற்ற செல்வமுமாய் இருந்து வருகின்றோம். அவருடைய ஸொத்துக்களைத்தான் நாம் உபயோகிக்கிறோம், அநுபவிக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட பேருபகாரியாய்ப் பரமதயாளுவான எம்பெருமானோடு ஒரு நாளாவது பிரேமம் கசிந்து இளகிய மனதோடு பேசுகிறோமில்லை; பழகுகிறோமில்லை. அவரோடு பேசும் வழியையே அறியாதவர்களாயிருக்கின்றோம். இது தகுமா? .... (53)

54. பகவானோடு பேசுவதெப்படி?

எம்பெருமானோடு பேசுவதென்றால் என்ன? எப்படி? என்று நீங்கள் கேட்கக்கூடும். எம்பெருமான் நமது கண்ணுக்குப் புலப்படுகிறாரா? நம்மோடு அவர் பேசுவாரா? என்றும் நீங்கள் ஆலோசிக்கக்கூடும். கேளுங்கள்; ஒரு பெரிய மஹாராஜாவிடம் நாம் போய் நமது குறைகளைச் சொல்லிக் கொள்ளுகிறோம். ஒரு பெரிய தனவானிடம் ஒரு ஏழை போய்த் தனக்கு வேண்டியதைக் கேட்கிறான். மஹாராஜாவும் தனவானும் அவர்களுடன் பேசுகிறார்களென்று சொல்ல முடியுமா? ஒருகால் பேசினாலும் பேசுவர்கள். பேசாமலிருந்தாலுமிருப்பர்கள். இது தெரிந்திருந்தும் அவர்களிடம் நாம் போகிறோம் அவர்களிடம் நமக்கு உண்மையான அன்பு இருப்பதாகக் காட்டிக்கொள்ளுகிறோம். நமக்கு வேண்டியதைக் கேட்கிறோம். இவ்விதமாகவே பரம்பொருளான ஸர்வேச்வரனிடம் நாம் நமது உண்மையான ப்ரீதியைக் காட்டி ஏன் பேசக்கூடாது? எம்பெருமானோடு பேசுவதென்றால் என்ன! பழகுவதென்றால் என்ன? ஏகாக்ரமான மனதுடன் எம்பெருமானை தியானஞ்செய்து நம்மெதிரிலிருப்பதாகவே பாவித்து ஆழ்ந்த பேரன்புடன் அவனது திருநாமங்களைச் சொல்லி அவனது திருக்குணங்களை நெஞ்சால் நினைத்தும் வாயாற் சொல்லிப் புகழ்ந்தும் வருவதேயாம் எங்கும் நிறைந்து நமது ஹ்ருதயங்களிலும் வாஸஞ்செய்கின்ற பரமதயாளுவாய் ஆநந்த ஸ்வரூபியான பரமாத்மாவைத் தானும் ப்ரேமமயனாய்த் தியானித்து ப்ரார்த்தனை செய்து வருவதே அவனோடு பழகுவதாகும். இதுவே எம்பெருமானோடு பேசும்வகை. இப்படிப்பட்ட நிலைமை நமக்கு ஏற்படவே எம்பெருமான் திருவுள்ளமுகந்து நம்மோடு கலந்து பழகுவான்; கருணைக்கடலான ஸர்வேச்வரன் நம்மேல் கருணைகூர்ந்து நமது குறைகளை நீக்குவான். நமக்கு ச்ரேயஸ்ஸைக் கொடுப்பான். ஆகவே துயரக்கடலுள் ஆழ்ந்து பரிதவிக்கும் நாம் இனியாவது பரமபிதாவான எம்பெருமானைக்கிட்டி நாடோறும் அவனோடு பழகவும் பேசவும் உற்சாகங் கொள்வோமாக. .... (54)

55. சாஸ்த்ரஜ்ஞானமும் உபதேசவுணர்ச்சியும்.

"சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலநகாரணம், உபதேசாத் ஹரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு" என்பது நம் ஆசாரியர்கள் எடுத்துக் காட்டும் பிரமாண வசனங்களுள் ஒன்று. இதன் பொருளாவது சாஸ்த்ரங்களை வாசித்து ஞானம் பெறுவதென்பது மிகவும் கடினமானது; சிரமப்பட்டுப்பெற்ற

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

லும் புத்தி சலிப்பதற்கே ஹேதுவாகும்; தெளிவு உண்டாகாது. ஆகவே மஹாசார்யர்களின் திருவடிவாரத்தில் காத்திருந்து அவர்களிடம் உபதேசங்கள் கேட்டு அவ்வழியாலே பகவானை யறிந்துகொண்டு ஸகலகர்மங்களிலும் ஓய்ந்திருக்கவேண்டும்—என்பதாம். இதனால் சாஸ்த்ரங்களை வாசிக்கக் கூடாதென்று கட்டளையிடுவதாக நினைக்கலாகாது. எத்தனை சாஸ்த்ரங்கள் வாசித்தாலும் ஆசார்யர்கள் ஸாரமான பொருளைத் திரட்டி யெடுத்து உபதேசிக்கக் கேட்டாலொழியத் தெளிவு பிறவாது, ஆகவே உபதேசம் கேட்பதுதான் முக்கியம் என்னுமிவ்வளவே இந்த வசனத்தின் கருத்தாகத் தேறும். நமது ஸம்பிரதாயத்தில் ஆசாரியர்கள் பரம்பரையாக வந்துகொண்டிருக்கிறார்கள்; இவர்கள் சிஷ்யர்களுக்கு உபதேசங்கள் செய்யவேணுமானால் சாஸ்த்ரஜ்ஞான ஸம்பந்நர்களாயிருந்தாலொழியச் செய்யமுடியாது. உபதேசம் கேட்கிற சிஷ்யர்கள் பிறகு ஆசார்ய பதவியில் அமர்ந்து தாங்கள் தம் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யவேணுமானால் தாம் சாஸ்த்ரஜ்ஞான ஸம்பந்நர்களா யிருந்தாலொழியச் செய்ய முடியாது. இப்படி சிஷ்யாசார்ய க்ரமம் தொடர்ந்து வருமிடத்து சாஸ்த்ரஜ்ஞான ஸம்பத்து இன்றியமையாததாகும். ஆகவே *சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம்* என்கிற இந்த வசனமானது சாஸ்த்ரஜ்ஞானம் ஸம்பாதிக்கவேண்டாமென்று சொல்லவந்ததன்றென்றும் உபதேசம் பெறவேண்டியது ஆவச்யகம் என்பதை வற்புறுத்தவே வந்ததென்றும் கொள்ளக்கடவது. .... (55)

56. பெண்ணை யென்கிற தமிழ்ச் சொல் வடமொழியில் பண்ணு என்றாகுமா?

விவேகிவித்வான்கள் விமர்சிக்க இது விளம்புகிறோம். திருக்கோவலூரில் பிநாகிநீ நதி பெருகுகின்றது. பிநாகிநீ என்ற வடசொல்லைத் தமிழர்கள் பெண்ணையென வழங்குகிறார்கள். திருமங்கையாழ்வாரும் திருக்கோவலூர்ப்பதிகத்தில் "பெண்ணைத் தென்பால் ....திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே" என்றருளிச் செய்கிறார். இந்த நதியை ஸம்ஸ்க்ருதத்தில் பேசவேணுமானால் பிநாகிநீ யென்றிட்டுப் பேசவேணுமே யொழிய வேறு விதமாகப் பேச ஔசித்யமில்லை. அந்தத் திருக்கோவலூரெம்பெருமானைப் பற்றி தேசிகனருளிச் செய்த தேஹளீசஸ்துதியில், 7, 15-ஆம் சுலோகங்களில் பண்ணு என்று ஸம்ஸ்க்ருதபதமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. இது எங்ஙனே பொருந்துமென்று விமர்சிக்க ப்ராப்தமாகிறது. முன்னடி ஒரு விஷயத்தைத் திடமாக நெஞ்சிற் கொள்ள வேணும். அதாவது ஸம்ஸ்க்ருதத்தில் ஆகாராந்தமாக இருக்கிற பதம் தமிழில் "ஆவிறு ஐயும்" என்கிற நன்னூற் சூத்திரத்தின்படி ஐகாராந்தமாகுமே யொழிய, தமிழில் ஐகாராந்தமான சொல் ஸம்ஸ்க்ருதத்தில் ஆகாராந்தமாகிறதென்பது அஸம்பாவிதம். ரமா, ஸரமா, பாமா இத்யாதிகளான ஆகாராந்த ஸம்ஸ்க்ருத பதங்களைத் தமிழில் ரமை, ஸரமை, பாமை என்று ஐகாராந்தமாகப் பிரயோகிக்கலாமேதவிர, நங்கை, மங்கை, தங்கை என்று ஐகாராந்தமான தமிழ்ச் சொற்களை நங்கா, மங்கா, தங்கா என்று ஸம்ஸ்க்ருதமாக்கி ப்ரயோகிப்பதென்பது இவ்வுலகில் நடையாடுவதன்று. புரோஹிதர்கள் விவாஹாதி காலங்களில் அநுக்ரஹம் சொல்லும்போது "அலமேலுமங்கா ஸமேத: ஸ்ரீ ஸ்ரீநிவாஸ:" என்று சொல்லுவர்கள்; அப்போது ஸதஸ்ஸில் வீற்றிருக்கும் வித்வான்கள் முகம் சுளிப்பர்களென்பது வித்வத்கோஷ்டியில் ப்ரஸித்தம். இப்படிப்பட்ட அஸம்பத்த ஸம்ஸ்க்ருதங்கள் கசடறக் கற்ற கலாவல்லபர்களிடத்தில் தலைகாட்டமாட்டா. பெண்ணை என்கிற பெயரை அப்படியே ஸம்ஸ்க்ருதத்தில் ப்ரயோகிக்க நினைத்தால் "பெண்ணை ஸமாக்ய" என்றோ, "பெண்ணை நாமக" என்றோ இவ்விதமாக் ப்ரயோகிக்கலாமேயல்லது பண்ணு என்று பிரயோகிக்க சாஸ்த்ரஸரணியில் சிறிதும் ஔசித்யம் கிடையாது. அப்படியிருக்க, தேசிகன் (பண்ணு) என்று எங்ஙனம் ப்ரயோகித்தருளினாரென்று ஆராய ப்ராப்தமாகிறது. குடந்தையை 'குடந்தா' என்றும், அழுந்தையை அளுந்தா என்றும், வேளுக்கையை வேளுக்கா என்றும், அயிந்தையை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அயிந்தா என்றுமிப்படி சிலர் வ்யவஹரித்தால் இதை ஸாதுவென்று கொள்வாருண்டோ? அப்படியே இதுவும் அஸாதுவென்ன வேண்டி வருகிறது.

திருக்கோவலூரில் ஜ்ஞாந சீல வயோவ்ருத்தராயெழுந்தருளியிருந்த ஒரு ஸ்வாமி ஸாதிக்கக் கேட்டதாவது, தேஹளீசஸ்துதியில் பண்ணு என்கிற பாடம் அச்சுக்கூடமுண்டானபின்பு கண்ணில் பட்டதேயொழிய, பெரியோர்களெல்லாரும் (புண்யா) என்றுதான் அநுஸந்தித்து வந்தார்கள் என்று. இதைக்கேட்ட க்ஷணத்தில் நமக்குண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பிநாகிநீ என்ற வடசொல்லை ஆழ்வார் தமிழ்நெறிக்குச்சேர பெண்ணையாக்கினார்; அச்சொல்லை ஆசார்யர் ஸம்ஸ்க்ருத ஸரணிக்குச்சேர **புண்யா** என்றாக்கினார் என்பது தத்துவம். வையாகரண கோஷ்டியில் "ஏகதேச விக்ருதம் அநங்யவத் பவதி" என்றொரு நியாயம் வழங்குவதுண்டு. அதன்படி **பெண்ணை** என்பதற்கும் **புண்யா** என்பதற்கும் ஒரு சேர்த்தியுண்டிறே. கொச்சி என்கிற நகரத்தை வடமொழியாளர் "கோஸ்ரீ" எனவும் பூனாபுரியை புண்யபுரீ எனவும் வழங்கிவருகிறார்கள். சென்னையில் 'அர்பத்நட்' என்றொரு தனரக்ஷகநிதியிருந்தது; அதனை வடமொழியாளர் (அர்புதநாத:) என வழங்கிவந்தார்கள். இது வடமொழி ரீதியில் பொருத்தமான வொருபொருளைத் தருவதோடு மூலமான ஆங்கிலச் சொல்லுக்கு ப்ரத்யபிஜ்ஞாபகமுமாகிறது. 'கவர்னர்' என்கிற ஆங்கிலப்பெயரை ஒரு வித்வான் (கௌரநர:) என்று ஸம்ஸ்க்ருதமாக்கினார்; இந்த ஸம்ஸ்க்ருத பதத்திற்கும் அந்த ஆங்கிலமொழிக்கும் தொடர்பு இல்லையாகிலும், ஸம்ஸ்க்ருதரீதிக்குச் சேர ஒரு அர்த்தம் தருவதும் கவர்னரை ப்ரத்யபிஜ்ஞாபனம் பண்ணுவதுமாயிருப்பதனால் இப்படிப்பட்ட அநுவாதங்களில் ஒரு சோத்யமும் ப்ராப்தமாகிறதில்லை. இவ்வண்ணமாக, பெண்ணையை புண்யா என்பது மிகப்பொருத்தம். பண்ணு என்பதற்குப் பொருத்தமே கிடையாது.

இவ்விஷயத்தைக் கண்டவுடனே ஸித்திபெற்றோமென்று உகக்க பாக்யமற்றவர்கள் *வம்பவிழ்கோதை பொருட்டாப் பாசுரத்தின் ஸம்ஸ்கிருதத்தில் நடந்த விபுலவிசாரத்தில் அந்வயித்து பங்கப்பட்டவர்களுக்குத் தோள்தீண்டிகளாக வேண்டுமத்தனை. (56)

— இடையில் அறிவிப்பு —

நமது எழுபது நல்வார்த்தைகளில் இதுகாறும் ஐம்பத்தாறு நல்வார்த்தைகள் முடிவுபெற்றன. மிக்குள்ள பதினான்கு நல்வார்த்தைகளைப் பதினான்கு விஷயங்களாக இட்டு ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தப்ரதிபாதனத்தில் தலைக்கட்டுகிறோம். காண்மின். பசுக்களிற்காட்டில் நமக்கு வாசி ஞானத்தினால். பசுக்களுக்கு ஞானமில்லாமற் போகவில்லை; ஆனால் பகுத்துணர்வில்லை. நமக்குச் சிறப்பான பகுத்துணர்வை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளாவிடில் நாம் நரபசுக்களேயாவோம். விஷயதத்துவம் நெஞ்சில் நன்றாகப்படட்டும் மூர்க்கத்தனமான பிடிவாதமே கொள்வது பேதைமையாகும். மேலுள்ள பதினான்கு பாராக்களை நடுநிலையான நெஞ்சுடன் வாசிப்பது நன்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தென்கலை வடகலைத் தெளிவு

57. அடியேனுடைய வாழ்நாளில் இரு கலைகளின் விவாத ஸம்பந்தமாக நூற்றுக்கணக்கான நூல்கள் எழுதி வெளியிடப்பட்டுள்ளனவென்பதை உலக மறியும். ஏதோ க்ஷாத்ரபுத்திகொண்டு மாச்சரியத்தினால் அவற்றை நாமெழுதி யிருப்பதாகச் சிலர் நினைத்தாலும், யதார்த்தத்திற்கு மாறாக ஒரெழுத்தும் நம்மா லெழுதப்பட்டிருக்கவில்லை யென்பது ஸகல ப்ராமாணிகர்களுடையவும் உள்ள மறிந்தது. தென்கலை ஸம்பிரதாயஸ்தர்களைவிட வடகலை ஸம்பிரதாயஸ்தர் களோடுதான் அடியேனுக்கு அதிக நட்பு என்பதையும், அவர்களிடத்தில் லாகவ புத்திலேசமுமின்றிக்கே கௌரவ புத்தியுமுடையோ மென்பதையும் தத்வவித் துக்கள் உள்ளபடியுணர்ந்திருக்கிறார்கள். அந்த ஸம்பிரதாயத்தில் ஜ்ஞாதாக் களில்லையென்றாவது அநுஷ்டாதாக்களில்லையென்றாவது நாம் நினைத்ததுமில்லை, எழுதினதுமில்லை. சிலபலவாண்டுகட்கு முன்பு அந்த வகுப்பினரில் சிலர் ஏதோ காரணார்த்தமாக வீணான வம்புகளில் தலையிட்டுச் சில விபர்யயங்களை யுண்டாக்க, அதனை விவேகிகளும் இடையறாது அநுவர்த்திக்கச் செய்து கொண்டு வருகிறார்களென்கிற இஃது ஒன்றுதான் நம்முடைய விவாத நூல் களுக்கு ஜீவநாடியானது. ஆனால் உலகத்தில் பலவிடங்களில் வேரூன்றி ஊர்ஜிதமானவது இனி ஒருவகையாலும் மாறுபாடடைய முடியாததாகவேயிருக் கின்றதென்பதையும் நாம் நன்கு தெரிந்துகொண்டே யிருக்கிறோம்.

58. உப்பிலியப்பன் ஸன்னிதியில் வாழும் ஸ்ரீஉ.வே. நவநீதம் ஸ்ரீராமதேசி காசாரியர் இளமை தொடங்கி என்னுடைய அந்தரங்க ப்ரீதிக்கு ஆஸ்பதமான வர். எனக்கு ஸஹோதர ஸ்தானத்திலும் புத்ர ஸ்தானத்திலும் நிற்பவர். என் மனதாலும் அவர் மனதாலும் (அவரைப்பற்றி இங்கு) ஏகவசந நிர்தேசம் அநுரூபமாயிருக்கச் செய்தேயும் "ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸம ஜாயத" என்னுமாபோலே எமக்குள் வாய்த்த ஐக்யத்தை அறியகில்லாதார் அவரை நாம் லாகவப்படுத்தி இழிவாக எழுதுவதாய் நினைக்கக்கூடுமென்னுமத் தாலும், உண்மையில் அவரிடத்து யோக்யதாதிசயம் மிக்கிருக்கையாலே அதற்குச் சேர்ந்திருக்கவேண்டுமென்னுமத்தாலும், "கணபுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே" "வளர்த்ததனால் பயன்பெற் றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்னும் பாசு ரங்களுக்கும் சேர்ந்திருக்கவேணுமென்னுமத்தாலும் அந்த விலக்ஷணவ்யக்தி யைப்பற்றி பஹுவசநநிர்தேசமே செய்யலாகிறது. அவர் என்னுடைய ஸகல நூல்களையும் ஆதரத்தோடு அநுபவிப்பவர். விசேஷித்து விவாத நூல்களையும் ஆர அமர ஆழ்ந்து அவலோகனம் செய்பவர். யதார்த்தம் உலகுக்குத் தெரிய வேணுமென்கிற புனிதமான ஓர் எண்ணத்தைமட்டுங்கொண்டு நாம் எழுதிவரும் நூல்களில் உண்மைக்கு மாறான விஷயங்களிருந்தால் அவற்றை அவர் திருத்திக் கொடுக்கவேணுமென்று நாம் நமது பத்ரிகைகளில் உலகங்காண வெளியிட்டு மிருக்கிறோம். அவர்க்குத் தனிப்படக் கடிதங்களுமெழுதி யிருக்கிறோம். "நாம் ஒன்றும் தெரிவியாமல் வாளவிருந்துவிடுவது நலமன்று" என்று அவர்க்கே தோன்றினபடியால் சென்ற கார்த்திகை மாதத்தில் ஒன்று தெரிவித்தார்;

"ஸர்வசரண்யனான எம்பெருமான் தானே நேரில்வந்து அருளிச்செய்

தாலுங்கூட இவற்றை நாங்கள் விடப்போகிறதில்லை"—என்று.

"பாத்ரம் வாழிதிருநாமம் பிரபந்தசாரம் பிள்ளையந்தாதி முதலானவை கோவில்

சண்டைக்காக இடையில் கல்பிதங்களென்று தேவரீர் பன்முறையும் எழுதிவரு

வதை ஸர்வேச்வரன் தானே நேரில் ஸேவை ஸாதித்து உண்மைதானென்று

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சோதிவாய் திறந்து பணித்தாலுங்கூட இவற்றை நாங்கள் விடமாட்டோம்" என்பது அவருடைய லிகிதத்தின் பொருள்.

59. அவருடைய இந்த வார்த்தை மிகவும் யுக்தமானதே. இரண்டு நூற்றாண்டாக ஆங்காங்கு வேரூன்றியும், நியாயஸ்தானங்களில் எல்லையளவும் எட்டிப்பார்த்தும் மேன்மேலும் மும்மிரமாக வளர்ந்தும் வருகின்ற விஷயங்களில் திடீரென்று ஒரு விச்ராந்தி விளைந்திடுமென்று நாம் எதிர்பார்க்கிறோமா? எதிர் பார்க்கத்தான் முடியுமா? இத்தகைய ப்ரதீக்ஷை பாகானுக்குமுண்டாகாது. தென்னாடோடு நில்லாமல் வடநாட்டிலுங்கூட முளைத்து வளர்கின்ற இந்த விவாதம் மேன்மேலும் முற்றுமேயொழிய ஓயுமென்று நினைப்பதற்கில்லை. ஆனாலும் "உண்மைப் பொருள்கள் உலகில் ஒரு மூலையிலாவது விளங்கிக்கொண்டிருக்க வேணும்" என்கிற ஒரு கருத்தைக்கொண்டே நாம் எழுதிவருகிறோம். இதை தடஸ்தர்களான பல மஹான்கள் அறிந்தேயிருக்கின்றார்கள். எழுபதாவது வயது கழியுந்தருணத்திலிருக்கின்ற நாம் வயோநுரூபமாக அசக்தி அதிகரிக்கப்பெற்றாலும், வடநாட்டிலுள்ள பண்டிதர்களுக்கும் பக்தர்களுக்கும் மஹோபகாரமாக இன்னும் பல நூல்களியற்ற ஸங்கல்பித்துக்கொண்டு காரியங்கள் செய்துவருகின்றோமாதலால், பிறருடைய அதர்க்கனச் செய்கைகளைக் கண்டித்தெழுதும் பணி நமக்கு இனிமேலும் அநுவர்த்தியாதொழியவேணுமென்னு மாசைகொண்டு ப்ரக்ருத விஷயத்தை ஸாரஸம்க்ஷேபமாக முடித்திடுகின்றோம்.

60. வடகலைப் புண்ட்ரம் புதிதாக ஏற்பட்டதென்கிற எண்ணம் நமது நெஞ்சில் ஒரு மூலையிலும் கிடையாது. உலகில் பலவகைப்பட்ட புண்ட்ராகாரங்களைக் கண்டுவருகின்றோம். எதுவும் நூதனமாக ஏற்பட்டதன்று. ஸூர்ய சந்திரர்கள் ஏற்பட்ட நாள்முதலாக இவையும் ஏற்பட்டவையே. "ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா—அகல்பயத்" என்றோதவந்த உபநிஷத்து இடையில் யதாபூர்வம் என்றொரு பதத்தைச் சேர்த்துள்ளது. இதனால் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியானது ஆதிகாணமுடியாததென்பது நன்கு விளங்கும். "வணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி, அவையவை தோறு அணங்கும் பலபலவாக்கி" என்கிற நம்மாழ்வாரருளிச் செயலையும் கூட்டிக்கொண்டு பார்ப்போமாயின், புதிதாகத் தோன்றினதென்று எதையும் நாம் புகலலாகாது. ஏகாதசி ச்ராத்தம் அஸக்ருந் நமஸ்காரம் விதவாவபனம் போன்ற அனேக ஆசாரங்களை நாம் ஏதோ ஒரு மதத்தில்மட்டும் காண்கிறோமில்லை; அகண்ட பூமண்டலத்தில் பலவிடங்களிலும் பார்த்து வருகிறோம். அவற்றிற்கு எதிரான ஆசாரங்களையும் அப்படியே பார்த்துவருகிறோம். ஆகவே தம்முடைய ஆசாரங்களுக்கு எதிராகவுள்ள ஆசாரங்களை வெறுப்பதோ நிந்திப்பதோ விவேகிகளுக்கு உற்றதன்று.

61. இவ்வண்ணமாகவே அர்த்த விசேஷங்களிலும் பல வேற்றுமைகளிருப்பது தொன்றுதொட்டு ஸஹஜமானதே. பகவத்க்ருபை நிர்ஹேதுகமென்பதுதான் பழைய மதமென்றும், அது ஸஹேதுகமென்பது புதிய மதமென்றும் ஒரு விவேகியும் நினைக்கமாட்டார். வெளுப்புதான் அநாதி, கறுப்பு புதிது (அல்லது) கறுப்புதான் அநாதி, வெளுப்பு புதிது என்பாருண்டோ? ஈச்வர ஸ்ருஷ்டியில் எதுவும் புதிதன்று. ப்ரக்ருத வாதவிவாத விஷயத்தில் நம்முடைய நிரூபணங்களை நிபுணர்கள் உற்றுநோக்கவேணும். ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு முன்பும் ஸ்ரீவைஷ்ணவர்கள் இருந்தார்களாயினும் அவர்களை இன்னாரினையாரென்று நாம் அறிந்துகொள்ளமுடியவில்லை. நாதமுனிகள்தொடங்கியேநாம்ஆசாரியர்களாகப் பேணி வருகிறோம். அந்த ஆசார்ய பரம்பரை ஸ்ரீராமாநுஜரிடமிருந்து இரண்டு கிளையாகப் பிரியலுற்றதாய்ச் சொல்லிவருகிறோம். இவ்விரு கிளைகளில் ஒரு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கிளை மணவாளமாமுனிகளோடு முடிவு பெற்றதாகவும், மற்றொரு கிளை வேதாந்த தேசிகனோடு (அல்லது) அவர் திருக்குமாரரோடு முடிவுபெற்றதாகவும் சொல்லப்படுகிறது. முடிவுபெறுகையாவது ஆத்யந்திக ஸமாப்தியன்று; பூர்வாசார்ய வ்யபதேசம் அவ்வளவில் ஸமாப்தமாயிற்றென்றபடி.

62. இங்ஙனே இருகிளையாகப் பிரிந்துவந்தாலும் நாதமுனிகளும் ஆளவந்தாரும் ஸ்ரீராமாநுஜரும் சேமித்துப்போந்த அர்த்தங்களில் முரண்பாடு ஒரு கிளையிலும் உதிக்க ஹேதுவில்லை. கூரத்தாழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் முதலானோர் அநுபவிக்கும் அர்த்தங்களையேதான் பிள்ளான் ஆச்சான் எங்களாழ்வான் அம்மாள் அப்புள்ளார் வேதாந்த தேசிகன் முதலான ஆசாரியர்களும் அநுபவித்துவந்ததாக நன்கு காண்கிறோம். இதனை நாம் நம்முடைய பல நூல்களில் ஸப்ரமாணமாக நிரூபித்திருக்கிறோம். ஸமீப காலத்தில் வெளியிட்ட தேசிகஹ்ருதயமென்னும் நூலில் விசேஷித்து வெளியிட்டிருக்கிறோம். இவற்றைக்காணாத ஸ்ரீவைஷ்ணவர்கள் இல்லை.

63. இனி விசாலஹ்ருதயர்கள் ஆலோசிக்க வேண்டிய ஒருவிஷயத்தை விஜ்ஞாபிக்கிறோம். .தென்னாசாரியர்கள் தேசிகனுக்குப் பகைவர்களென்றும் வடகலையார்களே தேசிகனுக்குப் பரிவர்களென்றும் ஒருப்ரவாதத்தை யாரோ சிலர் கிளப்ப அது உலகில் பரவியுள்ளது. இந்த ப்ரவாதம் ஸர்வாத்மநா நிராதாரமென்பதையும் ஸுதராம் அஸம்பத்தமென்பதையும் ஒவ்வொருவருமிசையும்படியுணர்த்துவோமிங்கு. சில பல திவ்யதேசங்களில் வேதாந்த தேசிகன் விக்ரஹமாக எழுந்தருளியிருப்பதையும் உத்ஸவாதிகள் கண்டருளி வருவதையும் நாம் கண்டுவருகிறோம். இந்த விக்ரஹப்ரதிஷ்டையை முதன் முதலாகச் செய்தவர் யாவரென்று பார்க்கவேணும். திருவல்லிக்கேணி திருவிந்தளூர் ஆழ்வார் திருநகரி முதலான திவ்யதேசங்களில் அத்யாபி தேசிக விக்ரஹத்தை ஸேவிக்கிறோம், அவர்க்கு உத்ஸவாதிகளையும் அநுபவிக்கிறோம். இத்தலங்களில் வடகலையார்க்கு அன்றுமுதல் இன்றளவாக ஒருவிதமான அந்வயமும் ப்ரவேசமும் கிடையாதென்பதை யாவருமறிவர். அத்தலங்களில் தேசிகனை ப்ரதிஷ்டிப்பித்தவர்கள் வடகலையார்களல்லரென்பது வ்யக்தமாயிற்று. ஆனால் இதில் கைகூப்பிநில்லாதே விதண்டாவாதங்களைக் காசுக்கு முதவாதபடி செய்துகொண்டேயிருப்பர்கள் பிறர். தேசிகனைப்பற்றிக் கேள்வி கேட்பதை விட்டிட்டு அப்பரம்பரையில் அவர்க்குமுற்பட்ட ஆசாரியர்களைப் பற்றிக் கேட்கிறோம். .... (63)

64. ஒரு பரம்பரையில் பிள்ளைலோகாசாரியர்க்கும் மணவாளமாமுனிகளுக்குமேயன்று விக்ரஹப்ரதிஷ்டையுள்ளது. எம்பார் முதலியாண்டான் அனந்தாழ்வான், அருளாளப்பெருமாளெம்பெருமானார் கூரத்தாழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை ஆகிய இவ்வாசாரியர்களுக்கும் விக்ரஹப்ரதிஷ்டை நடந்து உத்ஸவாதிப்ரவர்த்தனங்களும் நடைபெற்று வருகின்றன. இவர்களில் சில ஆசாரியர்களுக்கு நவீன காலத்தில் நம்போல்வார் செய்வித்திருக்கிற பிரதிஷ்டையைப்பற்றிச் சொல்லுகிறோமல்லோம். (அவரவர்களின்) திருவவதாரஸ்தலங்களிலும் ஸ்ரீரங்காதி ப்ரஸித்த திவ்யதேசங்களிலும் திருக்கோலங் கொண்டெழுந்தருளியிருக்கின்ற ஆசாரியர்களையே நாம் ப்ரஸ்தாவித்திருக்கிறோம். எம்பார் முதலியாண்டான் கூரத்தாழ்வான் ஆகிய இவ்வாசாரியர்களுக்கு அவர்களது திருவவதாரஸ்தலங்களில் எப்படிப்பட்ட ஆலயப்ரதிஷ்டை! எப்படிப்பட்ட உத்ஸவவைபவங்கள்! என்பதை உலகம் கட்கூடாகக் காணவில்லையா? இவ்வாசிரியர்களைப்போல் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான மற்றொரு பரம்பரையாசாரியர்களும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸமாங்யரன்றிக்கே மஹாசாரியர்களல்லவா? அப்பேராசிரியர்களை வடகலையார்கள் உண்மையில் ஆதிகாலந்தொட்டு வழிபடுகின்றவர்களாயிருந்தால் ஓரிடத்திலாவது அவர்களுக்கு விக்ரஹப்ரதிஷ்டையும் உத்ஸவநிர்வாஹமும் செய்து க்ருதார்த்தர்களாகார்களா? நடாதூரம்மாள் ச்ருதப்ரகாசிகாபட்டர் இவர்கள் எப்படிப்பட்ட ப்ரபாவம் வாய்ந்த பேராசிரியர்கள் தெரியுமோ? ஓரிடத்திலாவது இவர்களைத் தாங்களணியும் புண்ட்ரத்தோடு ப்ரதிஷ்டை செய்திருக்கிறார்களோ? எங்களாழ்வான் திருவம்சஸ்தர்கள் அவரைத் திருவெள்ளறையிலும் மற்றுஞ் சில விடங்களிலும் ப்ரதிஷ்டிப்பித்து அவர்கள் விபவகாலத்திலணிந்து கொண்டிருந்த திவ்யோர்த்வபுண்ட்ரஸந்நிவேசத்தோடு ஆராதித்து வருவதைக் காண்கிறோம். திருவாய்மொழிப்பிள்ளை 'திறமும் இத்தகைத்தே இவர்களைக் கேட்டால் (அதாவது) உங்களுடைய பரம்பரையில் திகழும் ஆசாரியர்களில் எந்த ஆசாரியரை எந்த ஸ்தலத்தில் நீங்களணியும் புண்ட்ராகாரத்தோடு ப்ரதிஷ்டிப்பித்துக் குலாவி வருகின்றீர்கள்? என்று கேட்டால், பிராமாணிகமாக இவர்கள் சொல்லவேண்டிய விடை இதுவே; எது என்னில்;

"எங்களுக்குக் கோயில் ஸம்பந்தமோ பூர்வாசார்ய ஸம்பந்தமோ தொன்றுதொட்டு இருந்திருக்குமானால் இக்காரியங்கள் நடந்திருக்க வழியுண்டு; திவ்யஸூரிகளோடும் திவ்யப்ரபந்தங்களோடும் திவ்யதேசங்களோடும் நாங்கள் தொடர்பு அற்றிருந்ததுபோலவே பூருவாசாரியர்களோடும்தொடர்பு அற்றிருந்தோம். இந்தத்தொடர்பை ஒருகாலவிசேஷத்திலே ஆவாஹனம் செய்துகொண்டோம்; அதுமுதலாக கோர்ட்டும் கொத்தளமுமாக அலைவதற்கே போதுசரியாயிருப்பதால் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான ஆசாரியர்களுக்கு திவ்யமங்கள விக்ரஹப்ரதிஷ்டை செய்யவேண்டிய விஷயத்தில் எங்களுடைய கவனம் செல்லுவதற்கு அவகாசமே ஏற்படவில்லை. தேசிகனுடைய உறவைமட்டும் பலிஷ்டமாகக் கொண்டோமாதலால் ஸாத்யமானவரையில் அவர்க்கு மட்டும் சில திவ்யதேசங்களில் ஆலயங்களுக்கு வெளிநிலங்களிலே கோயில்களைக்கட்டி வைத்திருக்கிறோம், கட்டிக்கொண்டும் வருகிறோம்" என்கிற இந்த பதில்தான் பிராமாணிகர்கள் சொல்லத்தகுவது.

65. ஆனால் இவ்வகையான பதில் நெஞ்சுக்குள்ளே நிற்குமேயொழிய வாயில் நின்றும் கையில் நின்றும் வெளிவருவது அரிது. கல்பகோடி சதமானாலும் இதற்கு ருஜுவான பதில் வேறு எதுவும் சொல்ல முடியாதென்பது திண்ணம். நம்மை நோக்கிச் சொல்லவோ எழுதவோ முன்வரமாட்டார்களெனினும் ஸ்வகோஷ்டிகளில் பரஸ்பரம் எதையாவது சொல்லிக்கொண்டேயிருப்பர்கள். அது மாப்பிள்ளை ஸந்தியாவந்தனக்கதையாகுமத்தனை.

66. மாப்பிள்ளை ஸந்தியாவந்தனக்கதையாவதென்னென்னில்; ஒருமாப்பிள்ளை மாமியாரகத்திற்குச் சென்றார். மாலைப்பொழுதில் மாமியார் தீர்த்தபாத்திரம் கொணர்ந்துவைத்து ஸந்தியாவந்தனம் செய்யுமென்றாள். நான் முன்னமே செய்தாயிற்று என்றார் மாப்பிள்ளை. எங்கே செய்தீரென்றாள் மாமியார். தெருக்கோடியிலிருக்கிற குளத்திலென்றார் ஜாமாதா. அந்தக்குளம் ஆறுமாதமாக வற்றிக்கிடக்கிறதே யென்றாள் மாமி. இல்லையில்லை; ஜலமிருப்பதாகச் சொன்னார்களென்றார் ஜாமாதா. ஜலமிருப்பதை நீர் பார்த்தீரோ? என்றாள் மாமி. நான் பார்க்கவில்லை யென்றார் ஜாமாதா. அப்படியானால் எங்கே ஸந்தியாவந்தனம் பண்ணினீரென்றாள் மாமி. அந்தக் குளத்தில்தான் பண்ணினேனென்றேனே! என்கிறார் ஜாமாதா. அதுதான் 6 மாதமாய் வற்றிக்கிடக்கிறதென்கிறேனே என்கிறாள் மாமி. ஜலமிருப்பதாகச் சொன்னார்களென்கிறேனே நான் என்கிறார் ஜாமாதா. இது ஓயாத கதை. இவ்வண்ணமாகவே இவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும். வெள்காதே சொல்லுவர்கள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

67. முடிவாக ஸாரமான வார்த்தைகள் நான்கு சொல்லித் தலைக்கட்டு
கிறோம். அழ்வார்களுடையவும் அருளிச்செயல்களுடையவும் திவ்ய தேசங்களி
னுடையவும் ஸம்பந்தத்தை விரும்பி ஆவாஹனம் செய்துகொள்வதில் பிச
கொன்றுமில்லை. ஸௌஜந்யத்திற்குச் சிறிதும் பங்கமில்லாமலும் வீண்
சண்டைகளுக்கு இடமில்லாமலும் ஆர்ஜவம் குன்றாமே அதைச்செய்துகொள்ள
லாம். இருதரப்பிலும் பல லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்குச் செலவுவைத்து
அஸுரராக்ஷஸ க்ருத்யங்களுக்கும் அவகாசமளித்து மிகவுமருவருக்கத்தக்க
வழிகளில் சென்றுகொண்டிருப்பதானது மிகவும் காபேயமென்னத் தட்டில்லை.

68. ராமாநுஜதயாபாத்ரம் முதலானவை இடையில் கல்பிதங்களென்ப
தில் ஸந்தேஹமில்லை யென்றும், ஸ்ரீமான் வேங்கடதனியனிருக்க, பாத்ரத்தனி
யன் முற்காலத்திலேயே தோன்ற ப்ரஸக்தியில்லையென்றும் நூறு ஹேதுக்
களைக்கொண்டு நிரூபித்தோம். ஸ்ரீமான்வேங்கடதனியன் ஸௌம்யமாகவன்
றிக்கே உத்வேகஜநகமான சொற்கள் கலசியிருப்பதால் அந்தக்குறையைத்
தீர்ப்பதற்காக திவ்யப்ரபந்தங்களுக்குமட்டும் ஸௌம்யமான தனியனிருக்கட்டு
மென்று கருதிய சிஷ்யரால் பாத்ரத்தனியன் பணிக்கப்பட்டதென்று ஸ்ரீபரகால
மடத்திலிருந்தும் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களிடமிருந்தும் பதில் வெளிவந்தது.
இதற்குமேல்கேட்ட கேள்வி யாதெனில்; அப்புள்ளாருக்கு தேசிகன் ஸாதித்த
பரமகம்பீரமான தனியனிருக்க, அந்த அப்புள்ளார் பரமபதித்த வெகுகாலத்திற்
குப்பிறகு *நமோ ராமாநுஜார்யாய* என்கிற அநுஷ்டுப்புத்தனியன் எதற்காகத்
தோன்றியது? யாருடைய கோரிக்கையினால் எப்போது தோன்றியது? என்று
கேட்டிருக்கிறோம். இதற்கு ருஜுவானவிடை வெளிவந்துவிடுமானால் தடஸ்தர்
களுக்குப் பரமத்ருப்தியாகும். அதுதான் கிடையாதே. .... (68)

69. ஆழ்வார்களெல்லாருடையவும் ஸகல ஆசாரியர்களுடையவும் திருவவதார
ஸ்தலங்கள் தொன்றுதொட்டு நிர்விவாதமாகத் தென்கலைத் திருமண்காப்புடன்
விளங்காநிற்க, இதனால் ஸ்ரீவைஷ்ணவஸதாசார்ய பரம்பரையின் பரிசு கையி
லங்கு நெல்லிக்கனியாகக் காணலாயிருக்க, தேசிகனொருவர்மட்டும் வேறுவித
மான புண்ட்ரத்துடனிருந்தாரென்று ஹடம்பிடித்து அவர்க்கு அந்த புண்ட்ரத்
தைத்தான் இடுவிக்கவேணுமென்று போராடுவது நெஞ்சை நடுநிலையில் வைத்
துப்பார்ப்பவர்க்களுக்கு அருவருக்கத்தக்கதாகவே யாகும். ஆகாதா? (69)

70. பொய்கோபாலரென்பா ரொருவர் நேற்று திருவோணத்தன்று
கத்தினார்—"தேசிகன் முன்னிலையில் ஸ்ரீசைலேச தயாபாத்ரம் சொல்லக்கேட்டுக்
கொண்டும் *மணவாளமாமுனியே யின்னமொரு நூற்றாண்டிரும்* என்று பாடக்
கேட்டுக்கொண்டும், அவர்க்கும் பல தலங்களில் தென்கலைத் திருமண்காப்பு
சாத்தியிருக்கக் கண்டுகொண்டும் உயிர்மாயாதே உயிர்வாழ்ந்திருக்கின்ற
நாமன்றோ தேசிகத்ரோஹிகள்!" என்று. அவரை நோக்கி ஒரு ரஸிகர் சொன்
னார்—"ஸ்ரீரங்கத்தில் தேசிகனுக்கு ஒரு க்ஷணகாலம் வடகலை நாமமிட்டதற்காக
ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்க, அதைச் சொளசொளவென்று செலுத்தி
ஹைகோர்ட்டுவரை ஸ்தாபித்துக்கொண்டு இன்னமும் நாமத்திற்கு மன்றாடு
கிறவர்களே காணீர் உண்மையான தேசிகபக்தர்கள்" என்று. .... (70)

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய

எழுபது நல்வார்த்தைத்திரள்

முற்றிற்று.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.
http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.